இன்னும் சில காலம் வாழ்ந்தான். பிறகு விற்பதற்கு வேறு ஒன்றும் இல்லாததால் என்ன செய்வது என்று தன் மனைவியைக் கேட்டான். அவளும் சிறிது யோசித்து விட்டுத் தன் கணவனைப் பார்த்துக் கூறினாள்: "பிரபோ, நான் ஓர் அடிமைப் பெண். தங்கள் தகப்பனார் பதினாயிரம் தங்க நாணயம் கொடுத்து என்னை வாங்கினார். இன்றைக்கு என்னை விற்றாலும் அதே விலையைக் கொடுத்து வாங்கிக்கொள்ளப் பலர் தயாராக இருப்பார்கள் என்று நம்புகிறேன். ஆகையால் அடிமைகள் விற்கும் சந்தைக்கு என்னை அழைத்துச் செல்லும்படி தங்களைக் கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன். என்னை விற்பதனால் கிடைக்கும் பெருந்தொகையை வைத்துக்கொண்டு வேறு ஏதாவது ஒரு நகரத்திற்குச் சென்று அங்கு வியாபாரம் செய்தால் மறுபடியும் சுகமாக வாழ்வதற்கு வேண்டிய பணத்தை நிச்சயமாகச் சம்பாதிக்கலாம். நான் சொல்லுகிறபடியே செய்யுங்கள். கவலைப்படாதீர்கள்."

இவ்வார்த்தையைக் கேட்ட நூருடீன் ஆச்சரியப்பட்டான். தன்னையே விற்றுவிடும்படி பேரழகி கூறியதைக் கேட்டுக் கோபம் கொண்டான். தன் மனைவியைப் பார்த்து வருத்தத்துடன் கூறினான்: "கண்மணி! என்ன வார்த்தை கூறினாய்? என் தந்தைக்கு நான் அளித்த வாக்கை நீ மறந்துவிட்டாயா? உன்னை விட்டுப் பிரிவதில்லையென்றும் உன்னை விற்பதில்லை என்றும் நான் என் தந்தைக்குச் சத்தியம் செய்து கொடுத்தது உனக்கு ஞாபகம் இல்லையா? மேலும் உன்னைப் பிரிந்து நான் எவ்வாறு உயிர் வாழ்ந்திருக்க முடியும்?"

அதற்குப் பேரழகி, "ஒருவரைவிட்டு ஒருவர் பிரிவது மிகுந்த மன வருத்தத்தை உண்டாக்கும் என்பது உண்மைதான். ஆனால் நாம் இருவரும் வறுமையினால் வாடாமலிருக்க வேறு என்ன வழி இருக்கிறது? இதை யோசித்துப் பாருங்கள்" என்றாள்.

இதைக் கேட்ட நூருடீன் தன் மனைவி கூறியது உண்மை மட்டும் அல்ல; புத்திசாலித்தனமான யோசனை என்பதை உணர்ந்தான். அவ்வாறே செய்வதாக ஒப்புக் கொண்டான்.

அடுத்த நாள் பேரழகியை அழைத்துக்கொண்டு போய், அடிமைகளை விற்கும் வியாபாரிகளில் முதல்வனான ஹாஜி ஹுசேன் என்பவனிடம் அவளை விற்பனைக்கு ஒப்படைத்தான். எவ்வளவு அதிக விலைக்கு விற்க முடியுமோ அவ்வளவு விலைக்கு விற்றுத் தருவதாக ஹுசேன் வாக்களித்தான். உடனே அவன் மற்ற வியாபாரிகளிடம் சென்று பேரழகியைப் பார்க்கும்படி அழைத்தான். அவர்களும் வந்து பார்த்தார்கள். அழகியின் தோற்றத்தைக் கண்டு அவர்கள் பிரமித்துப் போனார்கள். எல்லா வியாபாரிகளும் நாலாயிரம் தங்க நாணயத்திற்குக் குறைந்து அவளை விற்கலாகாது என்று கூறினார்கள். உடனே ஹுசேன், "நாலாயிரம் பொன்னுக்கு ஓர் அடிமைப் பெண்" "நாலாயிரம் பொன்னுக்கு ஓர் அடிமைப் பெண்" என்று இரைந்து கூவத் தொடங்கினான்.





4. மந்திரியின் சீற்றம்

நாருடன் மிக்க வருத்தத்துடன் தன் வீட்டுக்குத் திரும்பினான். தன் நண்பர்கள் காட்டிய அவமரியாதையைப் பற்றித் தன் மனைவியிடம் தெரிவித்துக் கண்ணீர் விட்டான்.

தன் கணவன் துக்கப்படுவதைப் பார்த்துப் பேரழகி வருந்தினாள். அவனுக்கு ஆறுதல் கூறினாள். "நாதா, நாம் செய்த தவறின் பலனை நாம்தான் அனுபவிக்கவேண்டும். ஆனால் அநாவசியமாக வருந்தாதீர்கள். நம்மிடமுள்ள சாமான்களையும் அடிமைகளையும் விற்றுவிடுவோம். அதனால் கிடைக்கும் பணத்தை வைத்துக் கொண்டு வாழ்க்கையை நடத்தலாம். அந்தப் பணம் செலவாவதற்குள் வேறு ஏதாவது திட்டம் தோன்றினால் அவ்வாறு செய்யலாம்'' என்றாள்.

நாருடனுக்கு அதுதான் சரியான வழி என்று பட்டது. அடிமைகளை விற்று அதனால் கிடைத்த பணத்தை வைத்துக்கொண்டு சில காலம் சுகமாக வாழ்ந்தான். அந்தப் பணம் செலவானவுடன் தன் வீட்டிலுள்ள மேஜை நாற்காலிகளை விற்றான். அதன் மூலம் கிடைத்த பணத்தைக் கொண்டு

புதிய கருத்துக்களைக் கண்டார். அவரையும் அறியாமல் புருஷோத்தமன் அவதார மகிமை அவர் உள்ளத்தைக் கவர்ந்தது. சரியான வேளையில் சாப்பிடுவதையும் மறந்தார். பாகவதத்தில் முந்திக் காணாத உண்மைகளையெல்லாம் கண்டார். வீட்டுக்கும் போகாமல் தாம் ஏற்படுத்திக் கொண்ட ஆசிரமத்திலேயே காலம் கழித்தார்.

புகழ், தனம், கவுரவம் இவையெல்லாம் அற்பப் பொருள்கள் என்று தோன்ற ஆரம்பித்தது. பிறகு பாகவதம் படிப்பதையும் விட்டு விட்டுத் தியானத்திலே ஆழ்ந்து விட்டார். அரசன் மாளிகைக்குப் போகும் எண்ணத்தையும் துறந்து விட்டார்.

குடும்பத்தைக் கவனியாமல் இவ்வாறு தியானத்திலும் ஜபத்திலும் தன் புருஷன் காலம் கழிப்பதைப் பார்த்த மனைவி மிகவும் வருத்தமுற்றாள். எதையோ ஆரம்பித்து இப்படி விபரீதமாக முடிந்ததே என்று அவள் துக்கப்பட்டு, ஒன்றும் தோன்றாமல் அரசனிடம் சென்று தன் கஷ்டத்தைச் சொல்லிக் கொள்ள அனுமதி கோரினாள். அரசன் அவளிடம் நடந்ததைக் கேட்டறிந்தான். அரசனுக்கு அளவற்ற மகிழ்ச்சி உண்டாகி அந்த வித்துவானைப் பார்ப்பதற்குத் தானே புறப்பட்டுச் சென்றான்.

அரசன் ஆசிரமத்தை யடைந்த போது, பிராமணருடைய முகத்தில் புது தேஜஸ் ஜொலிப்பதைக் கண்டான். சம்பூரண ஞானம் அடைந்த ஒளி பிரகாசித்தது.

அரசன் விழுந்து கும்பிட்டு, "கடவுளின் அருள் பெற்றுவிட்டீர். உங்களை நமஸ்கரிக்கிறேன். நான் செய்த அபசாரத்தை மன்னிக்க வேண்டும்" என்று சொன்னான்.

படிப்பும் புலமையும் வேறு; படித்த படிப்புடன் பக்தியும் கலந்து மெய்யுணர்வாவது வேறு.





செய்து அரமனையில் பௌராணிகராக அமர்ந்து விட்டால் நாம் பலவிதத்தில் லாபம் அடையலாம்" என்றாள்.

மனைவி சொன்னபடியே பிராமணரும் தம்முடைய கோபத்தை அடக்கிக் கொண்டு பாகவதத்தை நிதானமாக மறுபடியும் படித்தார். எந்தக் கட்டத்தில் எந்தக் கேள்வி கேட்டாலும் உத்தரம் சொல்லத் தயாராக நூலை நன்றாகப் பாராயணம் செய்துவிட்டு, ஒரு நல்ல நாள் பார்த்து அரமனைக்கு மறுபடியும் போனார்.

அரசன் பிராமணரை மரியாதையாகவே வரவேற்றான். "படித்தாகிவிட்டதா?" என்று அரசன் கேட்க, "மகாராஜாவே! சந்நிதானத்து உத்தரவுப்படி புராணத்தை நன்றாகப் பலமுறை ஓதிவிட்டு வந்திருக்கிறேன். பாகவதத்தைக் கிரமப்படி விஸ்தாரமாகச் சொல்லி உங்களுடைய கீர்த்தியையும் தருமத்தையும் வளரச் செய்ய வேண்டும் என்பதே என் ஆசை" என்றார் வித்துவான்.

அரசன் "பண்டிதரே! நான் உம்முடைய சீடனாக அமைந்து பாகவதம் கேட்கப் போகிறேன் என்பது நிச்சயம். ஆனால் இன்னும் ஒரு முறை நீங்கள் பாகவதத்தைப் படித்து விட்டு வாருங்கள்!" என்றான்.

மறுபடியும் இவ்வாறு ஏமாற்றம் அடைந்த பிராமணர் வீடு திரும்பி மனைவியிடம் நடந்த கதையைச் சொன்னார். அவள் "இதில் ஏதோ ரகசியம் இருக்க வேண்டும். அரசன் சொற்படி மறுபடியும் படித்துத்தான் இருங்கள், பார்ப்போம்" என்றாள்.

விடா முயற்சியுடன் பண்டிதர் மறுபடியும் படிக்க ஆரம்பித்தார். மறுபடியும் ஏமாற்றம் அடையக்கூடாதென்று தனியாக ஒரு வீட்டை ஏற்படுத்திக் கொண்டு மிக்க கவனமும் ஆழ்ந்த சிந்தனையும் செலுத்திப் படித்தார். இந்த முறை பாகவதத்தைப் படிக்கும் போது அவர் அந்த நூலில் புதிய

ராமகிருஷ்ண உபநிஷதம்

6. அரசனும் பாகவதரும்

சாஸ்திரங்களும் புராணங்களும் படித்த ஒரு பிராமணர் அரசனிடம் போய் அரமனையில் புராணம் வாசித்துச் சொல்லத் தாம் விரும்புவதாகத் தெரிவித்தார்.

“மகாராஜாவே! பாகவதம் மிகச் சிரேஷ்டமான தரும நூலாகும். அதை நீங்கள் நல்ல ஆசிரியரைக் கொண்டு படிக்க வேண்டியது அவசியம். எனக்கு உத்தரவு தந்தால் நான் சொல்லுவேன். நான் தரும நூல்களை நன்றாகக் கற்ற பெரிய பண்டிதன் என்று சாஸ்திரம் படித்த வித்துவான்கள் அறிவார்கள். அரமனையில் பாகவதம் படித்துச் சொல்ல வேண்டும் என்பது என்னுடைய ஆசை. வித்துவான்களை உபசரிப்பது அரசர்களுடைய கடமை” என்று பிராமணர் கூறினார்.

அரசன் இயற்கை யறிவு படைத்தவன். இவர் பாகவத புராணத்தைப் படித்து அதன் உட்பொருளை உண்மையாக உணர்ந்தவராக இருந்தால் தியானமோ ஜபமோ தவமோ செய்து கொண்டல்லவா இருந்திருப்பார், பணமும் புகழும் சம்பாதிக்கலாம் என்று ஆசைப்பட்டு அரசனுடைய தயவைத் தேடி இராஜமாளிகைக்கு வந்திருக்க மாட்டாரே என்று எண்ணி அவருக்குப் பின் வருமாறு பதில் சொன்னான்:—

“பண்டிதரே! உங்களை ஆசிரியனாக அமைத்துக் கொண்டு பாகவதம் கேட்க நானும் விரும்புகிறேன். மறுபடியும் தாங்கள் பாகவதத்தை நன்றாக ஒன்றிரண்டு முறை படித்துவிட்டு வாருங்கள்” என்றான்.

அரசன் சொன்னதைக் கேட்டு வித்துவான் கொஞ்சம் கோபம் அடைந்தார். ஆனால் அரசனிடம் கோபித்து என்ன பயன்? ஒன்றும் பேசாமல் வீட்டுக்குத் திரும்பிப் போனார்.

“இந்த அரசன் சுத்தமூடன். பண்டிதன் யார், படிக்காதவன் யார் என்று இவனுக்குத் தெரிந்து கொள்ள முடியவில்லை. என்னை ‘பாகவதம் நன்றாகப் படித்துவிட்டு வாருங்கள்’ என்கிறான்! பன்னிரண்டு வருஷங்கள் நான் சாஸ்திரம் படிப்பதில் செலவழித்திருக்கிறேன். பாகவதம் மனப்பாடமாகவே இருக்கிறது. இந்த அரசன் என்னை மறுபடியும் படித்து விட்டு வரச் சொல்லுகிறான்” என்றிவ்வாறு தனக்குள் நொந்துகொண்டு வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தார்.

மனைவியிடம் நடந்ததைச் சொன்னார். அவள் யோசித்துவிட்டு, “என்னவானாலும் அரசன் அரசனல்லவோ? அவன் சொல்லியவாறு இன்னுமொரு முறை பாகவதத்தைப் படித்துவிட்டு மறுபடியும் போய் ‘சந்நிதானத்தில் சொன்னபடியே செய்துவிட்டு வந்திருக்கிறேன்’ என்று கேளுங்கள். எப்படியாவது அரசனைத் திருப்தி

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

விருந்த ஓனையில் உட்கார்ந்து கொண்டு கத்தின. பகவான் அதைக் கேட்டதும் மயில்களுக்கு வழக்கம்போல் ஆகாரம் கொடுத்தாகிவிட்டதா என்று அன்புடன் விசாரித்தார். "கொடுத்தாகி விட்டது" என்று தெரிந்ததும் "பின் ஏன் கத்துகின்றன?" என்று கேட்டார். இவ்விதம் வாயில்லா மிருகங்கள் கூட மகரிஷியிடம் தங்களுடைய அன்பைத் தெரிவிக்கும் ஆச்சரியகரமான சம்பவங்கள் நிகழ்ந்தன. மகரிஷியை வெளியில் காணாத மயில்கள் அவருடைய அறையின் பக்கத்தில் ஜன்னலுக்கருகில் வந்து நின்று தோகை விரித்து ஆடின. அணில், நாய், பசு ஒவ்வொரு மிருகமும் பகவானிடம் தத்தம் அன்பைத் தெரிவிப்பது வழக்கம்!

ஆசிரமத்தைச் சேர்ந்த சொத்துக்களையும் உடைமைகளையும் மகரிஷி பொருட்படுத்துவதேயில்லை. அவருடைய திருவுள்ளத்தில் அவை சிறிதும் இடம் பெறவில்லை. ஆசிரமத்தில் பாலும் பழங்களும் ஏராளமாக இருந்தும் அவற்றை மகரிஷி தொடுவதில்லை. அங்குள்ள கீழ்த்தர வேலையாளுக்குக் கொடுக்கப்படும் எளிய ஆகாரத்தையே மகரிஷி அருந்தினர். அவர் வெண்ணெயும் பாலும் சாப்பிட்டு வந்ததாகப் பத்திரிகைகளில் வெளியான செய்தி சரியல்ல. பகவான் தம்முடைய கடைசி நாட்களில் பேசவேயில்லை என்றும் சமிக்ஞைதான் காட்டினர் என்றும் வெளியான செய்திக்கும் ஆதாரமில்லை.

அதற்கு மாறாக, பகவான் இறுதி வரையில் பூரண மனோசக்தியும் புலன்களின் சக்தியும் வாய்ந்தவராகவே இருந்து வந்தார். இந்த உலகை நீத்துச் செல்வதற்குச் சில நிமிஷங்களுக்கு முன் வரையில் மகரிஷி தெளிவாகப் பேசிக் கொண்டிருந்தார்.

அன்று மாலை ஐந்து மணி வரையில் பக்தர்கள் பகவானைத் தரிசித்துச் சென்ற வண்ணமிருந்தார்கள். பிறகு பகவான் தம்மை உட்கார வைக்கும்படி கட்டளையிட்டார். சகிக்க முடியாத வலியையும் அவர் சிறிதும் பொருட்படுத்தவேயில்லை. கடைசி மூச்சுவரையில் அவர் உட்கார்ந்த வண்ணமே இருந்தார்.

தம்முடைய ஆயுள் முடிவைப் பற்றி மகரிஷி ஏன் முன்கூட்டியே எதுவும் சொல்லவில்லை?

பகவானின் மனதில் என்ன இருக்கிறது என்பதைப் பல பக்தர்களும் அறிய முயற்சித்தபோது அவர் அளித்த பதில் இதுதான்: "சுமையை எவ்வளவு காலம் தூக்கிக் கொண்டிருப்பது? ஒரு மனிதன் மார்க்கெட்டுக்குச் சென்று ஒரு கூடையில் கறிகாய்கள் வாங்கிக் கொண்டு வருகிறான். எப்போது வீட்டை அடைவோம், எப்போது சுமையை இறக்குவோம் என்று அவனுக்கு ஆவலாயிராதா?"

மற்றொரு சமயத்திலே மகரிஷி இந்த உடலை வாழை இலையுடன் ஒப்பிட்டுக் கூறினர்:—"வாழை இலையில் ருசியான பல பதார்த்தங்கள் பரிமாறப் பட்டிருக்கின்றன. அதையெல்லாம் பூரணமாகச் சாப்பிட்ட ஒருவர் இலையைத் தூர எறியாமல் ஜாக்கிரதையாக வைத்துக் கொண்டிருப்பாரா? இலையின் வேலை முடிந்ததும் அதை எறிந்துவிட வேண்டியது அவசியமல்லவா?"

தமக்கு அன்புடன் பணிவிடை செய்து வந்த பணியாளர் சிலரிடம் பகவான் சில நாளைக்கு முன்பு "நாலு பேர் தூக்க வேண்டிய இந்தச் சுமையை (தேகத்தை) நான் ஒருவனாக எவ்வளவு காலம் தூக்கிக் கொண்டிருப்பது?" என்றாராம்.

பகவான் தம்முடைய சரீரத்தைத் துறந்துவிட்டார். கூண்டிலிருந்து பறந்து சென்றுவிட்டார். ஸ்ரீ ரமண மகரிஷியைத் தரிசித்த மாத்திரத்தில் நம்முடைய மனதில் ஆறுதலும் ஆத்ம சாந்தியும் ஏற்பட்டு வந்தன. இனி நாம் யாரைத் தரிசித்து ஆறுதலும் சாந்தியும் அடைவது?

பகவான் சமாதியான இடம் எக்காலத்திலும் நமக்குப் புனித ஸ்தலமாக இருந்து வரும் என்பதில் ஐயமில்லை. என்றாலும் இனி நாம் அன்பும், வாத்ஸல்யமும், மந்தஹாஸமும் தவழும் அவருடைய ஒளிர் முகத்தை எங்கே காணப்போகிறோம்? செவிக்கு அமுதமாகிய அவருடைய குரலை இனி நாம் கேட்கமாட்டோம். பெரிய தத்துவ ஞானிகளுக்கும் விஞ்ஞான மேதாவிகளுக்கும் எட்டாதவராகவும், வேதங்களின் உருவாகவும், ஜீவன் முக்தராகவும் விளங்கிய ஸ்ரீ ரமண மகரிஷி நம்மைப் பிரிந்துவிட்டார். கண்காணும் தெய்வமாக விளங்கியவர் கால வெள்ளத்தைக் கடந்து சென்று விட்டார்.

எனினும் கண்ணுக்குப் புலப்படாத அவரது பிரசன்னமும் சக்தியும் நம்மிடையே இருந்து கொண்டுதான் வரும். அவரது தேகத்தை இனி நாம் காண இயலாது. ஆனால் அவரது அருள் ஜோதியை நாம் நாடினால் காணலாம்.

பகவான் ரமண மகரிஷி அகண்ட ஜோதியுடன் கலந்துவிட்டார் என்பதை அவர் விதேக முக்தியடைந்த அதே சமயத்தில் ஆகாயத்திலே தெரிந்த நக்ஷத்திர ஜோதி உலகத்துக்கு அறிவித்தது.

பகவானுடைய அந்த அருள் ஜோதி அகண்ட உலகையும் பிரகாசிக்கச் செய்து நமக்கும் வழிகாட்டியாக விளங்குமாக!

சென்ற இருபதாண்டு காலமாக ஸ்ரீ ரமண ரிஷிகளிடம் பக்தி பூண்டிருந்தவரும் அந்திய நாட்களில் பகவானுடைய அருகிலிருந்து பணிவிடை செய்யும் பாக்கியம் பெற்றவருமான டாக்டர் டி. என். கிருஷ்ணசாமி அந்த மகானின் மகிமையைப் பக்தி பரவசத்துடன் எழுதியிருக்கிறார்:

பகவான் ஸ்ரீ ரமண மகரிஷி

டாக்டர் டி. என். கிருஷ்ணசாமி

ஸ்ரீ ரமண மகரிஷி மகா சமாதி அடைவதற்கு முன்னால் "பொறுமை என்பது என்ன? சகிப்புத் தன்மை என்பது என்ன?" என்னும் பாடங்களை உதாரண ரூபமாக அவருடைய சீடர்களுக்குக் காண்பித்துக் கொடுத்தார். மகரிஷிக்கு ஏற்பட்டிருந்த நோய் எவ்வளவு சகிக்க முடியாத வேதனையை உண்டு பண்ணியிருக்கும் என்பதை நாங்கள் அறிவோம். ஆனால் அவர் அவ்வளவு வேதனையையும் உறுதியுடன் மௌனமாகச் சகித்துக் கொண்டிருந்தார். அந்தக் கொடிய நோய் முற்றித் தேகத்தில் சிக்கல் மேல் சிக்கல் ஏற்பட்ட போதும், கூட அவரது முகத்தில் வேதனைக் குறியே தென்படவில்லை. அந்த நோயினால் ஏற்பட்ட வேதனையைக் குறித்து மகரிஷி ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லை.

அவர் அளவில்லா வேதனையை மௌனமாக அனுபவித்துக் கொண்டிருந்தபோது நாங்கள் பக்கத்தில் நின்று பார்த்துக் கொண்டிருந்தோம். அவரது வேதனையைத் தீர்க்கும் சக்தி எங்களுக்கு இல்லை. பேசாமல் பார்த்துக் கொண்டிருப்பதைத் தவிர வேறு பரிகாரம் எதுவும் அளிக்க முடியாதது எங்களுக்கு அளவில்லாத மன வேதனையைத் தந்தது.

ஸ்ரீ ரமணரிஷி தம்மை ஏன் அவ்வாறு வேதனைக்கு உள்ளாக்கிக் கொள்ள வேண்டும்? தம்முடைய தாயாரின் பிராரப்த கர்மாவைத் தாம் வாங்கிக் கொண்டு அநுபவித்ததாகச் சிலர் சொல்லுகிறார்கள். தமது சீடர்களின் பாவத்தை யெல்லாம் தாம் ஏற்றுக் கொண்டதாக மற்றும் சிலர் கூறுகிறார்கள். இதெல்லாம் என்னுடைய சிற்றறிவுக்கு எட்டாத புதிராகவே இருந்தது. பார்த்ததை எழுதத்தான் என்னால் இயலும். அதன் உண்மையை அறியும் சக்தி அடியேனுக்கு இல்லை.


மகரிஷியின் வேதனை ஆயிரக்கணக்கான அவரது பக்தர்களின் ஹிருதயத்தைப் பிளந்தது. அவரது வேதனைக்குப் பரிகாரம் ஏற்படுவதற்காக அவரது பக்தர்களில் பலரும் தங்களுடைய உடலையும் உயிரையும் ஆனந்தமாக அர்ப்பணம் செய்திருப்பார்கள். ஏராளமான ஆடவர்களும் பெண்களும் இராப்பகலாக சோகத்துடன் அவருக்கு அருகில் மௌனமாக உட்கார்ந்து கொண்டிருந்தது விவரிக்க முடியாத உருக்கமான காட்சி.

மகரிஷி அன்பே உருவானவர். ஒரு வார்த்தை கூடப் பேசாமல் எல்லா பக்தர்களுடைய மனதையும் மகிழ்விக்கும் அபூர்வ சக்தி அவருக்கு இருந்தது. மகரிஷிக்கு ஆயிரக்கணக்கான பக்தர்கள் உண்டு. அவர்களில் ஒவ்வொருவரும் ஸ்ரீ ரமணபகவான் தங்களிடம் விசேஷ அன்பும் கவனமும் செலுத்தியதாகவே நம்புகிறார்கள். தாங்கள் எந்த நோக்கத்துடன் மகரிஷியிடம் வந்தார்களோ அந்த நோக்கம் பூர்த்தி பெற்றதாக அவர்கள் எண்ணுகின்றனர். அவர்களுக்கு மகரிஷி வாயினால் ஒரு வார்த்தை கூட உபதேசிக்கா விட்டாலும் தாங்கள் அவருடைய அந்தரங்க சிஷ்யர்கள் என்று எண்ணி மகிழ்கிறார்கள். ஸ்ரீ ரமண மகரிஷியின் தரிசனமே அவர்களுக்கு அத்தகைய ஆத்ம திருப்தியை அளித்தது. அவர் அருகில் நின்று தரிசனம் செய்யும் பாக்கியத்தைத் தவிர அவர்கள் வேறெதையும் நாடி வரவில்லை.

ஆஹா! படுத்த படுக்கையில் உடல் மெலிந்து பெரும்பாலும் மௌன நிலையிலிருந்த அந்த மகானிடம்தான் என்ன அற்புதமான சக்தி! அந்த சக்தி அவரது சமீபத்தில் வந்த எல்லோருடைய ஹிருதயத்தையும் எப்படி ஆகர்ஷித்தது!

உயர்ந்த அந்தஸ்தையுடையவர்கள், தாழ்ந்த நிலையில் உள்ளவர்கள் யாவரும் மகரிஷி காலால் இட்ட கட்டளையைச் சிரமேற் கொண்டு நிறைவேற்றத் தயாராக இருந்தார்கள். ஆனால் மகரிஷி அவர்களிடமிருந்து எதையும் எதிர்பார்க்கவில்லை. எத்தகைய ஏழை எளியவரும் அவரை நாடிச் செல்லலாம். அவர் சமாதி அடையும் வரையில் அவரது முகத்தில் யாரைக் கண்டாலும் புன்முறுவல் தவழ்ந்து கொண்டிருந்தது.

பகவான் விதேக முக்தியடைவதற்குச் சில மணி நேரத்துக்கு முன்னால் ஆசிரமத்து மயில்கள் இரண்டும் சமீபத்தி



★ ★ மகான் ஸ்ரீ ராமலிங்கசுவாமிகள் ஸ்தாபித்த வடலூர் சத்தியஞான சபையையும் அதைப் புதுப்பித்து அமைக்கும் திருப்பணி செய்த ஸ்ரீகிருபானந்தவாரி அவர்களையும் மேலே நேயர்கள் கண்டு மகிழ்வார்கள். புதுப்பித்த ஞான சபையின் திறப்பு விழாவும் தூபி நீராட்டுதலும் அருட்பெருஞ்சோதிக் காட்சியும் ஏப்ரல் 24உ திங்கட்கிழமை ஸ்ரீ ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அவர்களின் தலைமையில் நடைபெறுகின்றன. இந்த வைபவத்தை யொட்டி நாலு தினங்கள் பல அறிஞர்கள் சொற்பொழிவுகளும் இசையரங்குகளும் சிறப்பாக நடைபெறுகின்றன. ★★

டாக்டர் செரியன் வகித்துத் திறமையுடன் நடத்துவதைக் காண்கிறோம்.

* * *

இந்தியா தேசம் நம்முடைய காலத்தில் சுதந்திரம் அடைந்ததைப் பார்க்கும் பாக்கியம் பெற்றோம். இந்தப் பெரும் பேறு நாம் அடைவதற்குக் காரணமாயிருந்த தேச பக்தர்களையும் தியாகிகளையும் நாம் ஒரு நாளும் மறக்க முடியாது. தேச நிர்வாகத்திலும் மற்றப் பொதுக் காரியங்களிலும் அந்த தேச பக்தர்களின் செல்வாக்கு நெடுங்காலம் ஓங்கி நிற்கும்.

அதே சமயத்தில் இந்தியா பெற்றுள்ள சுதந்திரம் சிறை சென்ற தியாகிகளுக்கு மட்டுமே உரியது என்று எண்ணுவது மடமையாகும். அது ஜனநாயகமும் ஆகாது; உண்மைச் சுதந்திரமும் ஆகாது.

ஜனநாயக ஆட்சி நன்கு நடைபெறுவதற்குப் பல துறைகளிலும் திறமை வாய்ந்தவர்களும் ஒழுக்க சீலர்களும் பொது வாழ்வுக்கு வர வேண்டும். பொதுக் காரியங்களை நடத்துவதற்குப் போட்டியிட்டுக் கொண்டு முன்வர வேண்டும். அத்தகைய திறமையாளர்களைப் பொது மக்களும் ஆதரித்து அவரவர்களுக்குத் தகுதியான பொறுப்புக்களையும் பதவிகளையும் அளிக்க வேண்டும்.

அப்போதுதான் சுதந்திரம் பெற்ற இந்தியா எல்லாத் துறைகளிலும் முன்னேற முடியும். முன்னேறி, உலகத்தின் மாபெரும் தேசங்களுக்கு மத்தியில் சமமான அந்தஸ்தை வகிக்க முடியும்.

இத்துறையில் டாக்டர் பி. வி. செரியன் வழிகாட்டியாக முன் வந்தது குறித்து மகிழ்ச்சியடைகிறோம்.

வைத்தியத் துறையில் வேலை பார்த்த போதே பல சமூகத் தொண்டுகளிலும் டாக்டர் செரியன் ஈடுபட்டு வேலை செய்து வந்தார். உலகமெங்கும் பரவியுள்ள பிரீமேஸன் ஸ்தாபனத்திலும், ரோடரி கிளப் என்னும் ஸ்தாபனத்திலும், ஒய். எம். ஸி. ஏ. ஸ்தாபனத்திலும் அவர் பொறுப்புள்ள பதவிகளை வகித்து வருகிறார். சென்னைச் சர்வகலாசாலை ஸிண்டிகேட்டில் அவர் அங்கத்தினர்.

டாக்டர் செரியன் அவர்களுக்குப் பொதுக் காரியங்களில் சிரத்தை உண்டாக்கி வளர்த்து வருகிறவர் அவருடைய மனைவியாரான ஸ்ரீமதி தாரா செரியன் என்பது சிலருடைய அபிப்பிராயம். ஏழைகளுக்கும் அநாதைகளுக்கும் சிறந்த தொண்டு புரிந்துவரும் சென்னை சேவா சமாஜத்திலும் மற்றும் பல சமூக ஊழிய ஸ்தாபனங்களிலும் ஸ்ரீமதி செரியன் ஈடுபட்டுப் பணியாற்றி வருகிறார்.

டாக்டர் செரியன் தம்பதிகளின் பொதுநலத் தொண்டு எல்லாத் துறைகளிலும் வெற்றிபெற்று நல்ல பலன் தர வேண்டுமென்று விரும்புகிறோம்.

மேயர் செரியன்

1947-ம் வருஷத்தில் இந்தியா தேசத்தில் நடந்த மகத்தான அதிசயத்தை நேயர்கள் அறிவார்கள். அந்த வருஷத்திலேதான் பிரிட்டிஷார் நூற்றைம்பது வருஷம் தாங்கள் ஆண்ட இந்தியா தேசத்தைத் தாங்களே காலி செய்துவிட்டுக் கப்பல் ஏறினார்கள்.

அந்த அதிசயம் நடந்தது வெறும் பிரமையல்ல,—உண்மைதான் என்பதை நிரூபிக்கக் கூடிய இன்னொரு அதிசயம் அதே 1947-ம் வருஷத்தில் சென்னை மாகாணத்தில் நடந்தது. சர்க்கார் இலாகாக்களுக்குள்ளே பெரிதும் வெள்ளைக்காரரின் ஆதிக்கியத்தில் இருந்த இலாகா வைத்திய இலாகா. இந்த இலாகாவில் பெரிய உத்தியோகங்களை யெல்லாம் வெள்ளைக்காரர்களே ஏகபோகமாய் ஆண்டுவந்தார்கள். 'ஸர்ஜன்—ஜெனரல்' என்னும் வைத்திய இலாகாத் தலைமைப் பதவிக்கு ஒரு இந்தியர் வரக்கூடும் என்று 1946-ம் வருஷத்தில் கூட யாரும் கனவு கண்டிருக்கமாட்டார்கள். ஆனால் 1947-ம் ஆண்டில் அத்தகைய அதிசயம் நடந்தது. சென்னை மாகாணத்தின் ஸர்ஜன் ஜெனரல் பதவிக்கு முதன் முதலாக இந்திய டாக்டர் ஒருவர் நியமிக்கப்பட்டார். அவர்தான் டாக்டர் பி. வி. செரியன். சிலகாலம் அப்பதவியை டாக்டர் செரியன் திறம்பட வகித்த பிறகு உத்தியோக வாழ்க்கையிலிருந்து விலகிக்கொண்டதாக அறிந்தோம்.

திடீரென்று சென்ற வருஷத்தில் டாக்டர் செரியன் பெயர் மீண்டும் அம்பலத்துக்கு வந்தது. அவர் சென்னை நகரின் மேயர் பதவிக்கு நிற்கப்போகிறார் என்றார்கள். அது பற்றிப் பலருக்குச் சந்தேகம் உண்டாயிற்று. "டாக்டர் செரியன் அரசியல்வாதி அல்லவே? சிறைக்குப் போனதில்லையே? பொதுக் கூட்டங்களில் பிரசங்க மாரி பொழிந்ததில்லையே? இவர் எப்படி சென்னை மேயர் பதவிக்கு நிற்கலாம்?" என்றார்கள்.



ஸ்ரீமதி தாரா செரியன்

எப்படியோ டாக்டர் செரியன் சென்னை நகரின் மேயர் பதவிக்கு நின்றார்; நின்று வெற்றி பெற்றார். சில மாதகாலமாகப் பதவியை வகித்து வருகிறார். அவர் மேயர் பீடத்தில அமர்ந்து 'நகரசபை நடவடிக்கைகளை நடத்தும் தோரணையைப் பார்த்தவர்கள், "சபாஷ் செரியன்!" என்றார்கள். "இந்தத் தொண்டை மூக்கு டாக்டருக்கு நகரசபை நடத்துவதில் இவ்வளவு திறமை எப்படி வந்தது?" என்று அதிசயித்தார்கள். இன்னமும் அதிசயப்படுகிறார்கள்.

ஆனால் உண்மையில் அதிசயப்படுவதற்கு அவ்வளவாகத் தேவையில்லைதான். எந்த ஒரு தொழிலிலும் முதல்தரமான திறமை பெற்று நடத்தியவர்கள் வேறு எந்தத் தொழிலையும் நன்கு நடத்தும் திறமை சுலபத்திலேயே பெற்றுவிடுவார்கள் என்பது அநுபவ உண்மை.

மூக்கு-தொண்டை-காது வைத்தியத்தில் டாக்டர் செரியன் நெடுங்காலம் இணையற்று விளங்கினார். குழந்தைகளுக்கோ, பெரியவர்களுக்கோ, தொண்டையில் மூக்கில் அல்லது காதில் ஏதாவது கோளாறு ஏற்பட்டால் முற்காலத்தில் ரொம்பவும் பயப்படுவார்கள்.

ஆனால் டாக்டர் செரியன் ஐரோப்பாவுக்குச் சென்று பயிற்சி பெற்று 1927-ம் வருஷத்தில் சென்னைக்குத் திரும்பியதிலிருந்து மேற்படி அவயவங்களைப் பற்றிய பயமே சென்னை வாசிகளுக்கு அற்றுப் போய்விட்டது. "தொண்டை வலியா? காது கேட்கவில்லையா? மூக்கில் கோளாறு? டாக்டர் செரியன் இருக்கிறார்! என்ன கவலை?" என்று ஜனங்கள் பேசிக்கொள்வது சகஜமாகி விட்டது!

வைத்தியத் தொழிலில் தாம் எடுத்துக்கொண்ட பகுதியை எப்படித் திறம்படப் பயின்று முதன்மை பெற்றாரோ, அது போலவே இன்று சென்னை நகரின் 'முதல் மனிதர்' பதவியையும்

வந்தேன். ஒரே காரியத்தை இரண்டு பேர் மேற்பார்வை செய்யக் கூடாது. நீ மேற்பார்வை செய்வதாயிருந்தால் நான் போய் விடுகிறேன்" என்றார்.

"வேண்டாம். வேண்டாம். நீங்களே இங்கு மேற்பார்வை செய்யுங்கள். பிற்பாடு நான் வந்து நீங்கள் செய்திருப்பதை மேற்பார்வை செய்து கொள்கிறேன். ஆனால் நான் பிற்பாடு வருகிற விஷயம் ரயில் பாதையின் பத்திரத்தைப் பொறுத்தது. ரயில் பாதையை யாரும் அதற்குள் பிடுங்காமலிருந்தால்......"

"இருக்கட்டும், பார்! அப்படிப்பட்ட பாதகர்களை நான் சும்மாவிடப் போவதில்லை" என்றார் சர்தார்.

"சந்தோஷம்; ஆனால் ஒரு விஷயம். ஒரே காரியத்தை இரண்டு பேர் மேற்பார்வை செய்யக்கூடாது. ஒன்று ரயில் பாதை விபத்துக்களைத் தடுப்பதற்கு நீங்கள் தக்க ஏற்பாடு செய்யுங்கள். அல்லது ஸ்ரீ கோபாலசாமி ஐயங்காரிடமாவது அந்தப் பொறுப்பை விட்டுவிடுங்கள். நான் போய் வருகிறேன்!" என்று சொல்லி விட்டுக் கிளம்பினேன்.

பூனைக்கும் ஒரு காலம்

ஸ்ரீமதி பதவியார்: *பார்த்ததும் பார்க்காததுபோல் போகிறாயே, உன்னைத்தானே?*

ஸ்ரீமதி ராஜினாமா (சட்டென்று நிமிர்ந்து): உன்னை நான் கவனிக்கவில்லை.

பதவியார்: உன் முகம் வாடியிருக்கிறதே, என்ன விசேஷம்?

ராஜினாமா: தெரியாதது போல் கேட்கிறாயே! இப்பொழுதெல்லாம் என்னைப் பார்த்தால் உனக்குப் பரிகாசமாகத்தானிருக்கும்.

பதவி (புன்சிரிப்புடன்): ஏன் இப்படித் திடீரென்று கோபம் வருகிறது? நான் ஒன்றும் உன்னைக் கேலி செய்யவில்லையே!

ராஜினாமா: உன் சிரிப்பையும் பார்க்கிற பார்வையையும் பார்த்தாலே தெரியாதா? நல்ல நிலைமையில் இருப்பவர்கள், பிறரைப் பார்த்துப் பரிகாசம் செய்வது சகஜம். ஆனால், உன் பழைய நிலைமையை மறந்து விடாதே. பிரிட்டிஷ் சர்க்கார் இருந்த போது உன்னை ஜனங்கள் எவ்வளவு வெறுத்தார்கள் என்பது ஞாபகம் இருக்கிறதா? அப்பொழுதெல்லாம், என்மீதுதான் ஜனங்களுக்குப் பிரியம் இருந்தது. "ராஜினாமா செய்! ராஜினாமா செய்!" என்று சட்டசபைகளிலும் ஆயிரம் பொதுக்கூட்டங்களிலும் சர்க்கார் மந்திரிகளை ஜனங்கள் கேட்டுக்கொள்ளவில்லையா?

பதவி: உன் மகிமை எனக்குத் தெரியாதா? 1938-ம் வருஷம் ராஜாஜி தமது பிரதம மந்திரி பதவியை ராஜினாமா செய்த போது, நானே என் பெயரை மாற்றிக் கொண்டு நானும் ராஜினாமா ஆகிவிடலாமா வென்று நினைத்தேன். அப்பொழுது உன் புகழ் உலகம் எங்கும் பரவித்தான் இருந்தது.

ராஜினாமா: 1942-ல் காந்திஜியைக் கைது செய்ததை ஆட்சேபித்து ஹோமி மோடி, டலாஸ் முதலியவர்கள் தங்கள் பதவியை ராஜினாமா செய்தபோதுதான் என்ன? என்னைப் பார்த்துப் புகழாதவர்கள் யாரும் இல்லை! (ஒரு பெருமூச்சு) இப்பொழுது என்னடா வென்றால் என்னைச் சீந்துபவர்கள் கிடையாது. வெகு நாட்களுக்குப் பிறகு, இந்த டாக்டர் ஷியாமப் பிரசாத் முகர்ஜியும், நியோகியும் என்னைக் கடைக்கண்ணால் பார்த்தனர். ஏதோ நல்லகாலம் மறுபடியும் வருகிறது போலிருக்கிறது என்று நினைத்தேன். ஆனால் ...!

பதவி: ஆனால் என்ன?

ராஜினாமா: ராஜினாமாவை பண்டித நேரு ஏற்றுக் கொள்ளும்வரை நான் திரிசங்கு சொர்க்கத்தில் ஊசலாடிக் கொண்டிருக்க வேண்டியதுதானே. இந்தமாதிரி கதி இதுவரை ஏற்பட்டதில்லை. முன்பெல்லாம் ராஜினாமா சமர்ப்பிப்பார்கள். 'டக்' கென்று விஷயம் பைசல் ஆகிவிடும்.

பதவி: இருக்கிற நிலைமையைப் பார்த்தால் நேரு ராஜினாமாவை ஏற்றுக் கொள்வார் என்றே தோன்றுகிறது. கவலைப்படாதே!

ராஜினாமா: ஏற்றுக்கொண்டு விட்டால்தான் என்ன? இச்சமயம் நியோகியும் ஷியாமப் பிரசாத் முகர்ஜியும் ராஜினாமா செய்வதை நாடெங்கும் கண்டிக்க ஆரம்பித்து விட்டார்கள். ஏற்கெனவே ஜனங்கள் என்னை வெறுக்க ஆரம்பித்து விட்டார்கள். இதில் எனக்கு என்ன திருப்தி ஏற்பட முடியும்?

பதவி: வேண்டாம்; எதற்காக மனதைக் கலங்க விடுகிறாய்?

ராஜினாமா: யானைக்கு ஒரு காலம் வந்தால் பூனைக்கு ஒரு காலம் வராமல் போகாது. உன் புகழும் கீர்த்தியும் சாசுவதம் என்று இறுமாந்து போகாதே.

பதவி: என் ஜன்மம் ஏற்கெனவே சாபல்யமாகி விட்டது. ராஜாஜி, பண்டித நேரு, சர்தார் படேல் முதலிய அரும் பெரும் தலைவர்கள் என்னை ஆதரித்து ஆசீர்வதித்த பிறகு இனிமேல் பிரளயமே ஏற்பட்டாலும் எனக்குக் கவலையில்லை.

ருல்லா கானின் வார்த்தைகளைக் கேட்க வேண்டும். அவர் பேச்சைக் கேட்டால் ரொம்ப ரொம்ப சுலபமாகிவிடும்.''

''என்னய்யா நீர்? ஜபருல்லாகானைப் பற்றி ஒரு மாதிரியாகக் கேள்வி படுகிறேன். நீரோவென்றால் அவருடைய பேச்சைக் கேட்கச் சொல்கிறீரே?''

''ஆமாம்; காஷ்மீர் விவகாரமாக ஜபருல்லாகானுடைய அபிப்பிராயத்தைக் கேளுங்கள். அவர் சொல்லுவதை யெல்லாம் கவனமாகக் கேட்டு விட்டு அதற்கு நேர்மாறாகத் தீர்ப்புக் கொடுங்கள். அப்போது தங்கள் முடிவும் நியாயமாயிருக்கும். விஷயமும் சுலபமாகி விடும்...''

ஸர் டிக்ஸனிடம் இத்துடன் விடை பெற்றுக் கொண்டு, ஆஸ்திரேலியாவை ஒரு தடவை சுற்றிப் பார்த்துவிட்டு, நேராக டில்லிக்கு வந்து சேர்ந்தேன்.

சர்க்கார் காரியாலயத்துக்குள் புகுந்து ஒவ்வொரு அறையாகப் பார்த்துக் கொண்டே வந்தேன். ஒரு அறைக்குள் நமது போக்குவரத்து மந்திரி ஸர் என். கோபாலசாமி ஐயங்கார் தலை தெரிந்தது. அவர் எதிரில் போய் நின்றேன். ஸ்ரீ ஐயங்கார் இந்திய ரயில்வே 'மாப்'பை மேஜை மீது பரப்பிக் கொண்டு ஆழ்ந்து சிந்தித்துக் கொண்டிருந்தார். நானும் அவர் மேஜை மீது சாய்ந்து 'மாப்'பில் இரண்டு மூன்று இடங்களை ஆள்காட்டி விரலால் சுட்டிக் காண்பித்து ''இங்கெல்லாம் ரயில் கவிழ்ந்திருக்கிறது'' என்றேன்.

சட்டென்று நிமிர்ந்து பார்த்தார் ஐயங்கார். ''உன்னை யார் உள்ளே விட்டது?'' என்று கேட்டார்.

''தங்களை உள்ளே விட்ட அதே சப்ராஸிதான்'' என்றேன்.

''சரி; எங்கே வந்தாய்?''

''தங்களைத்தான் சந்தித்துப் பேசிவிட்டுப் போக வந்தேன். தங்களுடைய நிர்வாகத்தின் கீழ் ரயில்களில் அநேக அபிவிருத்திகள் ஏற்பட்டிருக்கின்றன. பிரயாணிகளுக்குப் பல வசதிகள் செய்யப்படுகின்றன. அடிக்கடி ரயில் சிப்பந்திகள் கையில் விளக்கு மாற்றுடன் வண்டிகளில் ஏறிச் சுத்தம் செய்கிறார்கள். ரயில்வே அதிகாரிகள் பிரயாணிகளிடம் மரியாதையாக நடந்து கொள்கிறார்கள். ரயில்களில் இப்போது தாராளமாயி இடம் கிடைக்கிறது. முக்கியமாக, என்ஜின்களுக்குப் பக்கத்தில் உள்ள வண்டிகளில் அதிகமாய்க் கூட்டமே இருப்பதில்லை!......''

''போகட்டும்; நீ ஒருவனாவது ஏதோ ரயில்களைப் பற்றி நல்ல வார்த்தைகள் சொல்கிறாயே! ஓயாமல் புகார் செய்கிறவர்கள்தான் அதிகம்......''

''ஆனால் இந்த அபிவிருத்திகள் எல்லாம் செய்து என்ன பயன்? ரயில்கள் இப்படி அடிக்கடி கவிழ்ந்து கொண்டிருந்தால் ரயிலில் யார் ஏறுவார்கள்?''

''அதைப் பற்றித்தான் நானும் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறேன். ரயில் விபத்து ஏற்படாமல் தடுப்பது பற்றி உன்னுடைய யோசனை என்ன?''

''நன்றாயிருக்கிறது! புது டில்லியில் பண்டித ஜவாஹர்லால் முதல் எல்லாரும் எதற்கும் உங்களிடந்தான் யோசனை கேட்பதாகச் சொல்லுகிறார்கள். அப்படியிருக்கும்போது நான் என்ன யோசனை சொல்லப் போகிறேன்! உங்களுக்குத் தெரியாததா? ரயில் விபத்து ஏற்படாமல் தடுப்பதற்கு வழி, தண்டவாளங்களில் யாரும் கை வைக்காமல் ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்வதுதான்!''

''அதற்கு வழி?''

''தண்டவாளங்களைப் பிடுங்கும் நாசகாரக் கும்பலை ஒழிக்க வேண்டும்!''

''அதைத்தான் நானும் சொல்லிக் கொண்டிருக்கிறேன். ஆனால் அது போலீஸ் இலாகா விஷயம். போலீஸ் இலாகாவோ சர்தார் வல்லபாயிடம் இருக்கிறது. சர்தார் வல்லபாய் எவர் சொன்னாலும் கேளாதவர். அவராக மனது வைத்துச் செய்தால் உண்டு...''

''இருந்தபோதிலும் அவரிடம் நான் ஒரு வார்த்தை சொல்லிப் பார்க்கிறேன். எனக்கு எப்படியும் சர்தார் வல்லபாயைப் பார்க்க வேண்டும்'' என்று சொல்லி விட்டுக் கல்கத்தாவுக்குப் புறப்பட்டேன்.

கல்கத்தா கவர்னர் மாளிகையில் ஒரே கும்பலாக இருந்தது. இந்தியாவின் உதவி பிரதம மந்திரி ஸர்தார் படேல், மேற்கு வங்காள கவர்னர் கட்ஜு, பிரதம மந்திரி பி. ஸி. ராய், மற்ற மந்திரிகள், சர்க்கார் உத்தியோகஸ்தர்கள், பிரபலஸ்தர்கள் எல்லோரும் கூடி மந்திராலோசனை நடத்திக் கொண்டிருந்தார்கள்.

என்னைக் கண்டதும் ''ஓகோ! இங்கு எதற்காக வந்தாய் நீ?'' என்று விசாரித்தார் ஸர்தார் படேல்.

''தாங்கள் எதற்காக வந்தீர்களோ அதற்காகவேதான் நானும் வந்தேன்'' என்றேன்.

''நான் நேரு—லியாகத் உடன்படிக்கை காரியாம்சத்தில் சரியாக நடைபெறுகிறதா என்று மேற்பார்வை செய்வதற்கு

மூவர் பேட்டி

(நமது விசேஷ விடாக்கண்ட நிருபர்)

"விடாக்கண்டரே, எங்கே தொப்பியும் தலையுமாய்க் கிளம்பி விட்டீர்?" என்று நண்பர் என்னைப் பார்த்துக் கேட்டார்.

"ஆஸ்திரேலியாவுக்குப் போகிறேன்" என்றேன்.

"ஆஸ்திரேலியாவில் உம்மை யார் அழைத்தது? பாகிஸ்தான் பிரதமர் ஜனாப் லியாகத் அலிகான் அமெரிக்காவுக்குப் போகிறார்; அங்கேதானே நீரும் போகவேண்டும்? அவசரத்தில் அமெரிக்கா என்பதற்குப் பதில் ஆஸ்திரேலியா என்கிறீர்; இல்லையா?"

"இல்லவே இல்லை. நான் ஆஸ்திரேலியாவுக்கேதான் போகிறேன்" என்று விடாப்பிடியாகச் சொன்னேன்.

"ஆஸ்திரேலியாவில் உமக்கு என்ன வேலை, ஐயா!"

"அழைப்பு வந்திருக்கிற விஷயம் தெரியாதா?"

"அழைப்பா? உமக்கா? ஆஸ்திரேலியாவிலிருந்தா?......"

"எனக்கு இல்லை; ஆஸ்திரேலியாவிலுள்ள பிரபல நீதிபதி ஸர் ஓவன் டிக்ஸனுக்குத்தான். காஷ்மீர் விவகாரத்தில் மத்தியஸ்தராக இருக்கும்படி ஐக்ய தேச சபையிலிருந்து நீதிபதி டிக்ஸனுக்கு அழைப்பு வந்திருக்கிறது. ஸர் டிக்ஸனுக்கு உதவி செய்ய நான் ஆஸ்திரேலியாவுக்குப் போகிறேன்......"

"ரொம்ப சரி; ஆனால் போகும்போது நமது ஆந்திரகேசரி பிரகாசம் காருவின் கண்ணில் படாமல் போங்கள். நீர் ஆஸ்திரேலியா போகும் விஷயம் தெரிந்தால் நம் மந்திரிமார்களைப் பற்றி அந்த நீதிபதிக்கு ஒரு கூடை பிராதுகள் எடுத்துப் போ என்பார்!"

நண்பரின் யோசனைப்படியே ஸ்ரீ பிரகாசம் காரு கண்ணில் படாமல் ஆஸ்திரேலியா போய்ச் சேர்ந்தேன்.

ஸர் டிக்ஸன் பங்களாவுக்குள் நான் நுழைந்த சமயம் ஸர் டிக்ஸன் என்னைப் போலவே ஒரு கம்பளிக் கோட்டும் தொப்பியும் அணிந்து நின்று கொண்டிருந்தார். அவரைப் பார்த்து ஒரு 'ஸல்யூட்' செய்தேன். டிக்ஸன் பதிலுக்கு ஒரு 'ஸல்யூட்' செய்தார். நான் புன்முறுவல் பூத்தேன். டிக்ஸனும் என் மாதிரியே புன்முறுவல் பூத்தார். (அடசட்! என் எதிரில் இருப்பது நானேதான். டிக்ஸன் வீட்டு முன் ஹாலில் ஒரு பெரிய நிலைக்கண்ணாடி இருந்தது. இத்தனை நேரமும் அதில் தெரிந்த என்னுடைய பிரதிபிம்பத்தைக் கண்டு டிக்ஸன் என்று தவறுதலாக எண்ணிக் கொண்டேன்.) இதற்குள் சாட்சாத் நீதிபதி ஸர் ஓவன் டிக்ஸனே வெளியில் வந்தார்.

"நீர் யார்? எங்கிருந்து வருகிறீர்?" என்று விசாரித்தார் டிக்ஸன்.

"காஷ்மீர் தேசத்தில் இந்தியா என்றொரு நாடு இருக்கிறது. இல்லை, இல்லை. இந்தியா தேசத்தில் காஷ்மீர் என்றொரு நாடு இருக்கிறது. அந்த தேசத்திலிருந்து அடியேன் வருகிறேன்......"

"உம்முடைய பெயர்?"

"விடாக்கண்டன்."

"என்னத்தை விடமாட்டீர்?"

"காஷ்மீரைத்தான்......"

"விடாதீர், விடாதீர். நான்கூட அங்கேதான் வரப்போகிறேன். வந்து ஏதாவது மத்தியஸ்தம் செய்து வைக்க வேணும். நான் வரும்வரை காஷ்மீரை விடாமல் பிடித்து வைத்துக் கொண்டிரும்!" என்றார் டிக்ஸன்.

"கவலைப் படாதீர்கள்; காஷ்மீரை நாங்கள் விட்டாலும் சர்வதேச ஐக்ய சபை விடவே விடாது. சர்வதேச பந்தோபஸ்து கவுன்ஸிலிடம் ஒரு விஷயம் அகப்பட்டுக் கொண்டால் அவ்வளவுதான். விஷயம் ரொம்ப பந்தோபஸ்தாக இருக்கும். காஷ்மீர் விஷயம் அந்தச் சபைக்குப் போய் எத்தனை வருஷம் ஆயிற்று? அதை விட்டு இலேசில் கிளம்புகிறதா?"


"அது சரி; காஷ்மீர் விஷயத்தில் என்னை மத்யஸ்தராகப் போட்டிருக்கிறார்களே? எனக்கு அந்த விவகாரம் ஒன்றுமே புரியவில்லை. நான் என்னவென்று மத்தியஸ்தம் செய்வது?..." என்று கேட்டார் டிக்ஸன்.

"அதைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாதீர்கள். தங்களுடைய வேலையைச் சுலபமாக்கவே நான் வந்திருக்கிறேன்..."

"அதெப்படி?..."


"தாங்கள் காஷ்மீர் விஷயமாக சரியான தீர்ப்புக் கூற வேண்டுமானால் முதலில் சர்வதேச ஐக்கிய சபையில் பாகிஸ்தான் பிரதிநிதியாகவுள்ள ஸர் ஜப





ஜோதியில் கலந்தார்!





இந்த மண்ணுலகில் தோன்றும் மகா புருஷர்கள் உடலை நீத்துச் செல்ல வேண்டிய காலம் வரும்போது வானுலகிலிருந்து ஜோதி மயமான புஷ்பக விமானம் வந்து அம்மகான்களை அழைத்துச் செல்லும் என்று இதிகாச புராணங்களில் நாம் படித்ததுண்டு.

இது கற்பனையாகவும் வர்ணனையாகவும் இருந்தாலும், வெளி உலகில் நாம் பார்க்கும் நிகழ்ச்சிகளைக் காட்டிலும் இந்தக் கற்பனை - வர்ணனைகள் உண்மையானவை என்று பெரியோர் நமக்கு எடுத்துச் சொன்னதுமுண்டு.

சென்ற 14-ந்தேதி வெள்ளிக்கிழமை இரவு எட்டேமுக்கால் மணி சுமாருக்கு ஆகாசத்தையும் பூமியையும் ஒளி மயமாக்கிக் கொண்டு ஒரு ஜாஜ்வல்யமான ஜோதி வானத்தில் தோன்றி ஒரு மூலையிலிருந்து இன்னொரு மூலை வரையில் பிரயாணம் செய்து மறைந்த காட்சியைத் திருவண்ணாமலையிலும் சென்னை நகரிலும் மற்றும் பல சுற்றுப்புற ஊர்களிலும் பல்லாயிரக் கணக்கான மக்கள் பார்த்தார்கள். அதே சமயத்தில் திருவண்ணாமலையில் கோயில்கொண்டு எழுந்தருளி யிருந்த பகவான் ரமண ரிஷிகள் மகா சமாதி அடைந்தார் என்பதை அறிந்து திகைத்தார்கள்.

இந்த இரண்டு நிகழ்ச்சிகளுக்கும் ஏதேனும் சம்பந்தம் உண்டா என்று ஆராய்ந்தார்கள்; சம்பந்தம் உண்டு என்று பலரும் நம்பினார்கள்.

இந்த இரண்டு நிகழ்ச்சிகளுக்கும் சம்பந்தம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் ஒரு மகா புருஷர் நம்மை விட்டுப் பிரிந்தார், ஒரு மாபெரும் அருட்ஜோதி இந்த மண்ணுலகிலிருந்து மறைந்தது என்பதைப் பற்றிச் சிறிதும் ஐயமில்லை.

• • •

கடவுள் உண்டா, இல்லையா என்ற விவாதம் இன்று நேற்று உண்டானதல்ல. மனிதன் தோன்றி அறிவு பெற்ற நாளிலிருந்து இவ் விவாதம் நடந்து வந்திருக்கிறது.

"கடவுள் உண்டு" என்னும் உண்மையை வாதங்களினால் நிரூபிக்க முடியாது. எத்தனை வாதங்கள் சொன்னாலும், அதற்கு எதிர் வாதங்கள் சொல்லக்கூடும்.

ஆனால் கடவுள் இல்லை யென்பவர்களை மாற்றுவதற்கு, ஒரே ஒரு வழிதான் உண்டு. "அப்பனே! இதோ இந்த மகானைப் பார்! இவரைப் பார்த்த பிறகாவது கடவுள் உண்டு என்று தோன்றினால் அவ்வாறு நம்பு. அப்படியும் உனக்கு நம்பிக்கை ஏற்படாவிட்டால் அதுவும் கடவுளுடைய திருவிளையாடல்தான் உன் வழியே நீ போ!" என்று சொல்வதுதான் அந்த வழி.

அவ்விதம் சுட்டிக் காட்டி, "இதோ கடவுளைக் கண்ட மகான்; கடவுள் உண்டு என நிலை நிறுத்தும் பெரியார்!" என்று

சொல்லக் கூடியவராக நம்மிடையே பகவான் ரமண ரிஷி விளங்கி வந்தார்.

சின்னஞ் சிறு பிராயத்தில், பதினேழாம் வயதில், ஸ்ரீ ரமணர் "கடவுளைக் காணுவேன்" என்று விரதங் கொண்டு பெற்றோர் இல்லத்திலிருந்து புறப்பட்டார். "ஞானத் தபோதனரை வாவென் றழைக்கும் மலை" யாகிய திருவண்ணாமலைக்கு வந்தார். அங்கேயே நிலை பெற்றுக் கடுந்தவம் புரிந்தார். துஷ்டர்களும் அறியாதவர்களும் அவருடைய தவத்தைக் கலைக்க முயன்றார்கள். எனவே, பாதாள லிங்கக் குகைக்குச் சென்று யார் கண்ணிலும் படாமல் மௌனத் தவத்தில் ஆழ்ந்தார். பல தினங்கள் இருந்த இடத்திலிருந்து அகலாமல், உணவும் நீரும் இல்லாமல் தவம்புரிந்தார். தம்முடைய திருமேனியைப் பூச்சி புழுக்கள் அரித்துத் தின்றதைக் குறித்த சிந்தையே இல்லாமல் நிர்விகல்பத்தில் இருந்தார். பழைய காலத்து வேத ரிஷிகளைப் பற்றிப் படித்ததும் கேட்டதும் உண்மை என்பதை நாம் உணருமாறு மெய்ப்பித்தார். இத்தகைய நிலையில் காவியகண்ட கணபதி சாஸ்திரிகள் என்னும் பெரியார் அவரைக் கண்டு, "ரமண ரிஷி" என்று கூறிப் போற்றி வணங்கினார்.

அன்று முதல் ரமண ரிஷியின் பெருமையை மக்கள் பலர் அறியலாயினர். தேசத்தின் நாலா திசைகளிலிருந்தும் அறிஞர்கள் பலர் மனச் சாந்தியை நாடி அவரைத் தேடி வந்தனர். அறிவிலும் ஆராய்ச்சியிலும் மிக்க ஐரோப்பியர்கள் பலரும் ரமண ரிஷியின் ஆசிரமத்திலே வந்து தங்கி வெளி உலகத்தில் வேறு எங்கும் காணாத மன அமைதியை இங்கே பெற்றனர்.

இவ்வாறெல்லாம் புகழ் பரவினாலும் ரமண ரிஷிகளின் உள்ளப் போக்கிலோ தவ வாழ்க்கையிலோ எவ்வித மாறுதலும் ஏற்படவில்லை. நடை உடையும் மாறவில்லை. உபதேசமோ, உபந்நியாசமோ அவர் செய்யவில்லை. எப்போதும் போலவே அவருடைய பேச்சு மிகக் குறைவாயிருந்தது. "சொல்லரிய பொருளை ஒரு சொல்லால் உணர்த்தியே சொரூபாநுபூதி காட்டி" என்ற வாக்கியத்துக்கு இலக்காக விளங்கி வந்தார். அவருடைய தரிசனத்தினாலும் அவர் அருகில் தங்குவதினாலுமே பாரமார்த்திக அநுபவத்தை அடைந்து வந்தார்கள் அவரை நாடி வந்த சீடர்கள்.

"ஒன்றாய்ப் பலவாய் உயிர்க்குயிராய் ஆடும் கருணைக் கடல் பரஞ்சோதியின்" அருள் ஒளியிலே ஸ்ரீ ரமண ரிஷிகள் இரண்டறக் கலந்து விட்டார்.

ஆதி நாளிலிருந்து இந்தப் பாரத புண்ணிய பூமியில் எத்தனையோ மகான்களும், மகரிஷிகளும், அவதார புருஷர்களும், தெய்வ மனிதர்களும் தோன்றி மறைந்திருக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய பூதவுடல்கள் மறைந்தனவே தவிர அவர்களுடைய அருள் ஒளியானது இந்தப் புண்ணிய நன்னாட்டில் எங்கும் பரவி நிலைத்து நின்று மக்களைத் தூய்மைப் படுத்திப் பரிபாலித்து வருகிறது. அதுபோலவே பகவான் ரமண ரிஷியின் அருள் ஒளியும் என்றென்றைக்கும் இந்தத் திருநாட்டைப் புனிதப்படுத்திக் கொண்டிருக்கும் என்பதில் ஐயமில்லை.



பகவான் ரமணரிஷிகள்

ஜனனதினம்... 30-12-1879
மகாசமாதி... 14-4-1950

அதிசயமான கட்டுப்பாடுதான். "அல்லாஹோ அக்பர்!" என்ற கோஷத்துக்கு அவ்வளவு சக்தி உண்டு என்பதை அறிந்தோம். "அல்லாஹோ அக்பர்! போருக்குப் புறப்படுங்கள்!" என்றால், உடனே அத்தனை முஸ்லிம்களும் போருக்குப் புறப்படுகிறார்கள். "அல்லாஹோ அக்பர்! ஆயுதத்தைக் கீழே போடுங்கள்! எதிரிகளை ஆலிங்கனம் செய்து கொள்ளுங்கள்!" என்றால், உடனே அவ்விதமே செய்கிறார்கள். ஒரு நொடிப் பொழுதில்,—தலைவர்களின் கட்டளை பிறந்தவுடனே,—மனோபாவம், பேச்சு, சொல் எல்லாம் அடியோடு மாறி விடுகின்றன.

புதிய பாகிஸ்தான் அற்புதம்!

கல்கத்தாவில் 1947-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 15உ கண்ட அதிசயத்தைப்போல் இன்றைக்கும் பாகிஸ்தானில் ஒரு பெரும் மாறுதல் நடந்திருப்பதைக் காண்கிறோம். பாகிஸ்தான் பிரதம மந்திரி லியாகத் அலி கான் பொய்க் கௌரவம் பாராட்டாமல் புது டில்லிக்குச் சென்றார். பண்டித ஜவாஹர்லாலுடன் ஒப்பந்தம் செய்து கொண்டார். தம்முடைய சகாக்களான மற்ற மந்திரிகளைக் கூடக் கலந்து கொள்ளவில்லை. சட்டசபைப் பிரதிநிதிகளையோ, பத்திரிகாசிரியர்களையோ, பொது மக்களையோ யோசனை கேட்கவில்லை. தமக்கு உசிதமாகத் தோன்றிய காரியத்தை முடிவு செய்து கொண்டு வந்தார். பாகிஸ்தானில் எந்தப் பகுதியிலாவது ஒரு முணு முணுப்பைக் கேட்கிறோமா? இல்லை! அவ்வளவு பாகிஸ்தான் முஸ்லிம்களும் "அல்லாஹோ அக்பர்! லியாகத் அலி ஜிந்தாபாத்!" என்று கோஷிக்கிறார்கள். முதல் நாள் வரையில் விஷத்தைக் கக்கிக் கொண்டிருந்த பாகிஸ்தான் பத்திரிகைகள் அடியோடு தங்கள் போக்கை மாற்றிக் கொண்டு 'பாகிஸ்தானுக்கும் பாரதத்துக்கும் ஒற்றுமையை நிலைநாட்ட வேண்டிய அவசியத்தைப்பற்றி' எழுதி வருகின்றன. ஜவாஹரையும் சர்தாரையும் பாராட்டி எழுதுகின்றன! என்ன ஒற்றுமை! என்ன கட்டுப்பாடு!

படித்துக் கொள்ளுங்கள்!

அடுத்தாற்போல், இந்தியாவில் பாருங்கள்! இந்திய அரசாங்கத்திலிருந்து இப்பேர்ப்பட்ட நெருக்கடியான சமயத்தில் இரண்டு மந்திரிகள் ராஜிநாமா செய்கிறார்கள். அவர்களை ராஜிநாமாவை வாபஸ் வாங்கிக் கொள்ளும்படி செய்ய எவ்வளவோ 'உமேதவாரி' செய்தும் பயனில்லை. அதேமாதிரி இந்தியா தேசத்துப் பத்திரிகைகளிலும் பலவிதமான குரல்களைக் கேட்கிறோம்.

பாகிஸ்தானில் விளங்கும் ஒற்றுமையையும் கட்டுப்பாட்டையும் இந்திய மக்கள் இச்சமயம் அவசியம் கவனிக்க வேண்டும். கவனித்துப் பலனடைய வேண்டும். இரண்டாயிரம் வருஷ காலமாக இந்தியாவில் ஹிந்து சமூகத்துக்கு நேர்ந்த கேடுகளுக்கெல்லாம் காரணம் நல்ல சமயத்தில் ஒற்றுமையும் கட்டுப்பாடும் இல்லாமற் போனதுதான் என்பதை உணருதல் வேண்டும். அப்படி எத்தனையோ கஷ்டப்பட்டுக் கற்றுக் கொண்ட பாடத்தை இனிமேலாவது மறக்காமல் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். சரியோ, தவறோ,—நமக்குப் பிடித்திருக்கிறதோ, இல்லையோ,—முக்கியமான சந்தர்ப்பங்களில் தேசத் தலைவர்களைக் குருட்டுத்தனமாகக் கூடப் பின்பற்ற நாம் படித்துக் கொள்ளவேண்டும். அப்போதுதான் இந்தியா தேசத்தின் பண்டைப் பெருமையை மீண்டும் நம் காலத்தில் நிலைநாட்ட முடியும்.

பத்திரிகைகளின் தொண்டு

நாட்டில் நல்ல விதமான சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கு இச்சமயம் பத்திரிகைகள் ஒருமுகமாக உதவ செய்ய வேண்டும். இதற்கு வேண்டிய பிரயத்தனங்களை அகில இந்தியப் பத்திரிகாசிரியர் மகாநாட்டின் தலைவர் ஸ்ரீ சி. ஆர். சீனிவாசன் செய்து வருவது குறித்து மிகவும் மகிழ்ச்சி யடைகிறோம். "சுதேசமித்திரன்" ஆசிரியர் ஸ்ரீ சி. ஆர். சீனிவாசன் நுண்ணறிவும் செயல் ஆற்றலும் நிதான யோசனை சக்தியும் படைத்தவர் என்பது பிரசித்தம். இச்சமயம் நாட்டில் நல்ல சூழ்நிலையை ஏற்படுத்துவதற்குப் பத்திரிகைகள் செய்யவேண்டிய தொண்டைக் குறித்து அவர் யோசித்தார். பாகிஸ்தான் பத்திரிகாசிரியர்களைக் கூட்டு ஆலோசனைக்கு அழைத்தார். அவர்களும் உடனே ஒப்புக் கொண்டார்கள். அவர்களுடைய சௌகரியத்தை முன்னிட்டுச் சென்னையில் நடக்கவிருந்த பத்திரிகாசிரியர் ஸ்திரந்தரக் கமிட்டி கூட்டத்தைப் புதுடில்லியில் கூட்டியிருக்கிறார். பாகிஸ்தான் பத்திரிகாசிரியர்களும் அச்சமயம் வந்து கலந்து யோசித்துச் சில பொதுவான விதி முறைகளை வகுத்துக் கொள்ள இசைந்திருக்கிறார்கள். இது மிகவும் மகத்தான முயற்சி என்பதில் சந்தேகம் இல்லை. ஸ்ரீ சி. ஆர். சீனிவாசனுக்குப் பூரண வெற்றி கிட்டவேண்டும் என்று பிரார்த்திக்கிறோம்.

கல்கி

மலர் 1 இதழ் 38

தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

என்ன சேதி?

பழைய கல்கத்தா அற்புதம்

சென்ற 1947-ம் வருஷம் ஆகஸ்டு 15-ந் தேதி கல்கத்தாவில் நடந்த அற்புத சம்பவத்தை நேயர்கள் மறந்திருக்க மாட்டார்கள். எனினும் அதை இப்போது நாம் ஞாபகப் படுத்திக் கொள்வது நலம். அதற்கு ஒரு வருஷம் முன்னால் ஜனாப் ஷுஹ்ராவர்த்தியின் ஆட்சியில் கல்கத்தா பயங்கரப் படுகொலை நடந்தது. சில காலத்துக்குப் பிறகு நவகாளியின் பயங்கரங்கள் நடந்தன. கல்கத்தாவிலுள்ள முப்பது லட்சம் ஹிந்துக்கள் மேற்படி சம்பவங்களினால் கொதிப்படைந்திருந்தார்கள். இந்த நிலைமையில் மேற்கு வங்காளம் பிரிக்கப்பட்டுக் கல்கத்தாவில் காங்கிரஸ் மந்திரி சபை ஏற்பட்டது. இந்த மந்திரி சபை 1947-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 14-ந் தேதி நள்ளிரவில் பதவி ஏற்றது. அதே நேரத்தில் ராஜாஜி மேற்கு வங்காளக் கவர்னர் ஆனார்.

ஷுஹ்ராவர்த்தியின் கொடுங் கோன்மைக்குப் பிறகு கல்கத்தாவில் ஆட்சி மாறிய காலத்தில் அந்த மாநகரில் என்ன விபரீதங்கள் நடக்குமோ என்று தேசமெல்லாம் கவலை குடிகொண்டிருந்தது. கல்கத்தா ஹிந்துக்கள் பழிவாங்குவதற்குத் துடிதுடித்துக் கொண்டிருந்தார்கள். கல்கத்தா முஸ்லிம்கள் "என்ன வந்தாலும் ஒரு கை பார்த்து விடுவது" என்ற மனோ நிலையில் இருந்தார்கள். கல்கத்தாவில் பதினைந்து லட்சம் முஸ்லிம்கள் (சென்னை நகரின் ஜனத் தொகைக்குச் சமமானவர்கள்) வசிக்கிறார்கள் என்பதும் நினைவிருக்கவேண்டும்.


இப்படிப்பட்ட மிக நெருக்கடியான நிலைமையில் (ஒரு பக்கம் நீரோவின் எண்ணெயும் இன்னொரு பக்கம் பெரு நெருப்பும் காத்திருந்த சந்தர்ப்பத்தில்) ஆகஸ்டு 14-ந் தேதி மாலை டில்லியிலிருந்து புது கவர்னர் ராஜாஜி கல்கத்தாவில் வந்து இறங்கினார். ஆகாச விமான கூடத்தில் ராஜாஜியை ஜனாப் ஷுஹ்ராவர்த்தி பார்த்துப் பேசினார். பேசிவிட்டுக் கல்கத்தா நகருக்குத் திரும்பி வந்தார். நகரில் முஸ்லிம்கள் வசிக்கும் பகுதிகளுக்கெல்லாம் அவசரச் செய்தி அனுப்பினார். அந்தச் செய்தி என்னவென்றால், "இன்று இராத்திரி ஏற்படப் போகும் சுதந்திர ஜனநாயக ஆட்சியைக் கல்கத்தா முஸ்லிம்கள் எல்லாரும் குதூகலமாகக் கொண்டாட வேண்டும்" என்பதுதான். சில மணி நேரத்துக்குள் நாலாபுறமும் முஸ்லிம் தொண்டர்கள் விரைந்தோடிச் சென்று மேற்படி செய்தியைப் பரப்பினார்கள். இதன் பயனாகக் கல்கத்தாவில் அந்த மகத்தான அற்புதம் நிகழ்ந்தது.

அல்லாஹோ அக்பர்!


இரவுக்கிரவே கல்கத்தாவில் இருளடைந்திருந்த முஸ்லிம் பகுதிகள் எல்லாம் தீபாலங்காரம் செய்யப்பட்டு ஜகஜ்ஜோதியாக விளங்கின. பெரிய பெரிய மோட்டார் லாரிகளில் ஐம்பது நூறு முஸ்லிம் தொண்டர்கள் ஏறிக்கொண்டு, "ஜே ஹிந்த்!" "அல்லாஹோ அக்பர்" "ஹிந்து முஸ்லிம் ஏக் ஹோ!" என்று கோஷமிட்டுக் கொண்டு கல்கத்தா நகரமெங்கும் சுற்றினார்கள். சிறிது நேரம் இந்தக் காட்சியைப் பார்த்து விட்டுக் கல்கத்தா ஹிந்துக்கள் பிரமித்து நின்றார்கள். பிறகு அதேமாதிரி ஹிந்துக்களும் கோஷமிடத் தொடங்கினார்கள். மறுநாள் கல்கத்தா வீதிகளில் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் பழைய பகைமைகளையெல்லாம் மறந்து ஒருவரையொருவர் ஆலிங்கனம் செய்துகொண்டு குதூகல விழாக் கொண்டாடினார்கள். இந்தக் காட்சியைக் காந்தி மகாத்மா கண்ணாரக் கண்டு மகிழ்ந்தார். உலகமெல்லாம் கேட்டு வியந்தது.

இந்த அதிசய சம்பவத்திலிருந்து பல அதிசய உண்மைகள் வெளியாயின. அவற்றுளெல்லாம் மிக முக்கியமான உண்மை முஸ்லிம் சமூகத்தில் உள்ள

பேனா முனை!



இந்தியா—பாகிஸ்தான் ஒப்பந்தம் பூரண வெற்றி பெறுவதில் சர்க்காருடன் ஒத்துழைக்க வேண்டும் என்று இந்திய சர்க்காரும் பாகிஸ்தான் சர்க்காரும் பத்திரிகைகளைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.



கல்கி

பொருளடக்கம்

மலர் 9 | இதழ் 38 | ஏப்ரல் 23 | விக்ருதி ௵ சித்திரை 11

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.

பொது மக்களின் சோப்பு

பரிபக்குவமடைந்து மூப்பது வருஷங்களுக்கு. அதிகமான கோத்ரெஜின் ஆராய்ச்சியும்—முதன் முதலாக தாவர எண்ணெய் சோப்புக்களில் நுண்ணிய ஆராய்ச்சியாளரும் தயாரிப்பவர்களுடையதுமான — இந்த பிரசித்தி பெற்ற சாவி மார்க் டாய்லெட் (ஸ்நான) சோப், இனிமையான மணமூட்டப்பட்டு, எளியவர்களின் பண நிலைமைக்கும் ஏற்றவாறு சாமானிய மனிதனுக்கும் தன்னையும் தன் குடும்பத்தையும் சுத்தமாயும் ஆரோக்கியமாயும் வைத்துக்கொள்வதை ஓர் இன்பமயமாக்குகிறது.

நூற்றுக்கு நூறு பங்கு பரிசுத்தமானது. எடையை அதிகரிக்கச் செய்யும். எவ்விதமான கலப்படமும் இல்லாதது.

உங்களில் ஒவ்வொருவரும் இன்றே ஒரு பெட்டியை வாங்கி சீக்கிரமே திருப்தியைக் காணுங்கள்.

தனவந்தருக்கும் இன்பமளிப்பது



ஒரு டஜன் 'தந்த நிற' கட்டிகளுக்கு

ரூ. 3-4

(வரி அலாதி)

Godrej சாவி Turkish Bath

ரிஜிஸ்டர்டு

கோத்ரெஜ் டர்க்கிஷ் பாத்


100 சதம் தூய்மைக்கும்
மிருகக் கொழுப்பற்றதென்
பதற்கும் உத்திரவாதமானது

கோத்ரெஜ் சோப்ஸ், லிமிடெட்.
மதராஸ்: 104, பிராட்வே,
கொச்சின்: 6/30, கல்வத்தி.




CASTOROL

ஹமாம் உண்மையிலேயே இந்திய மக்களின் மனதிற்கிசைந்த ஸோப்பே!★



★ ஹமாம் வாங்குவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்தே வருகிறதென்பதை அசல் விற்பனை புள்ளி விவரங்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்!

தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி, லிமிடெட்



ஜுபிடரின்
விஜயகுமாரி
இப்பொழுது சென்னை
ப்ராட்வே கெயிட்டி
சரஸ்வதி மற்றும் ராஜகுமாரி
பூராவும் நடைபெறுகிறது......
டைரக்ஷன்
ஏ. எஸ். ஏ. சாமி
ஸ்டூடியோ - சென்ட்ரல்



ஹிந்தி சந்திரலேகா : சென்னை வெலிங்டனில் கூடிய சீக்கிரத்தில் ஆரம்பமாகிறது

மூன்று நண்பர்கள் ②



அங்கு கூடியிருந்த பல பிரமுகர்கள் பேரழகியை விலைக்கு வாங்குவது பற்றி யோசித்துக் கொண்டிருந்தனர். அந்தச் சமயத்தில் மந்திரி ஸவி அங்கு வந்தான். அவன் பேரழகியைப் பார்க்க விரும்பினான்.

ஹுசேன் அழகியை அழைத்துக் கொண்டு போய் குதிரைமீது வந்திருந்த மந்திரிமுன் நிறுத்தினான். இவ்வளவு அழகு வாய்ந்த ஒரு பெண்ணை ஸவி இதற்கு முன் பார்த்ததே இல்லை. அவளுக்கு நாலாயிரம் பொன் தருவதாக ஒப்புக் கொண்டான். ஆனால் அந்த அழகி நூருடீனுக்குச் சொந்தமானவள் என்பது மந்திரிக்குத் தெரியவே தெரியாது.

இவ்வளவு அழகிய பெண்ணுக்கு நாலாயிரம் பொன் போதாது என்றும் மற்ற வியாபாரிகள் அதிகம் தருவார்கள் என்றும் ஹாஜி ஹுசேன் கூறினான். இதைக் கேட்டவுடன் மந்திரி ஸவிக்கு மிகுந்த கோபம் உண்டாயிற்று. மந்திரியின் கோபத்தைக் கண்ட வியாபாரிகள் அவனுடன் போட்டி போட விரும்பாமல் சும்மா இருந்துவிட்டனர். அதிக விலை கிடைக்காதது கண்ட ஹுசேன் நூருடீனிடம் சென்று நடந்தவற்றை விவரமாகக் கூறினான்.

தன் தந்தையின் மிகக் கொடியவிரோதியானஸவி தன் மனைவியை விலைக்கு வாங்க வந்திருப்பது கேட்டு நூருடீன் கோபம் கொண்டான். செத்தாலும் சாவது, அழகியை ஸவிக்கு மட்டும் விற்பதில்லை என்று சபதம் செய்துகொண்டான். இச் சபதத்தை எப்படி நிறை

வேற்றுவது என்று அவன் ஹுசேனிடம் யோசனை கேட்டான். அதற்கு ஹுசேன், "நீ சந்தைக்கு வந்து, 'அழகியை விற்கும் எண்ணம் எனக்குக் கிடையாது. அவளுக்கும் எனக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டது. ஆகையால் அவளைத் தண்டிப்பதற்காக அப்படிக் கூறினேன். இப்போது என் கோபம் தணிந்துவிட்டது. அவளை அழைத்துக்கொண்டு போவதற்காக வந்திருக்கிறேன்' என்று சொல். ஸலி அதற்கு ஆட்சேபம் செய்யமாட்டான்" என்றான்.

இது கேட்ட நூருடீன் ஹுசேனைப் பார்த்து, "நல்ல யோசனை கூறினாய். இதோ, உன்னோடு வந்து அழகியை அழைத்துச் செல்லுகிறேன்" என்று கூறினான்.

நூருடீனும் ஹுசேனும் உடனே சந்தைக்குச் சென்றனர். அங்கே சென்றதும் நூருடீன் அழகியின் கன்னத்தில் 'பளீர்' என்று ஓர் அறை அறைந்து "மூடப் பெண்ணே, வீட்டுக்கு வா! உனக்கு விதித்த தண்டனை போதும். உன்னை விற்கும் எண்ணம் எனக்குக் கிடையாது. உன்னை விற்றுத்தான் வயிறு வளர்க்க வேண்டும் என்று ஏற்பட்டால் அன்று விற்கிறேன்" என்று கோபமாகப் பேசுவதுபோல் நடித்தான். கர்வம் பிடித்த மந்திரி ஸலி, தன் விருப்பத்திற்கு நூருடீன் தடை செய்வது கண்டு அடங்காக் கோபம் கொண்டான். அழகியைப் பற்றி இழுத்துத் தன் குதிரைமீது ஏற்றிக் கொள்ள முயற்சித்தான். ஆனால் நூருடீன் ஏமாறவில்லை. உடனே பாய்ந்து மந்திரி ஸலியைக் குதிரையிலிருந்து வீழ்த்தினான். இருவரும் கைகலந்து சண்டை செய்தார்கள். (தொடரும்)

1. எட்டுக்கால் ஊன்றி, இருகால் படமெடுத்து, வட்டக் குடை பிடித்து வருகிறாராம் வன்னியனார்.

2. திடுதிடென்று மழை பெய்யத் திட்டியெல்லாம் வெள்ளம் ஓட, நான்கு ஊர் ராஜாக்கள் நனையாமல் வருகிறார்கள்.

இவை இரண்டும் என்ன?

சென்ற வார விடுகதைக்கு விடை: வெற்றிலை, பாக்கு, புகையிலை, சுண்ணாம்பு.

★ ★ ★ பதிலுக்குப் பதில்! ★ ★ ★

வெண்டல் பிலிப்ஸ் என்பவர் ஓர் அமெரிக்கப் பிரமுகர். அவருடைய கொள்கைகளும் போதனைகளும் சிலருக்குப் பிடிக்கும், சிலருக்குப் பிடிக்காது. ஒரு சமயம் பிலிப்ஸ் ரயிலில் பிரயாணம் செய்து கொண்டிருந்தார். அவர் பிரயாணம் செய்து கொண்டிருந்த அதே கம்பார்ட்மெண்டில் ஒரு பாதிரியாரும் பிரயாணம் செய்தார். அவருக்கு பிலிப்ஸின் கொள்கைகள் கொஞ்சம் கூடப் பிடிக்காது. அவர் பிலிப்ஸைப் பார்த்து, "நீர்தானா பிலிப்ஸ்?" என்று கேட்டார்.

"ஆமாம்" என்று பதில் கூறினார் பிலிப்ஸ்.

"நீக்ரோக்கள் எல்லாம் சுதந்திரமாக வாழ வேண்டும் என்று சொல்பவர் நீர்தானா?" என்றார் பாதிரி.



"ஆமாம், நானேதான்."

"அப்படியானால் நீர் இங்கே ஏன் பிரசங்கம் செய்கிறீர்? நீக்ரோக்கள் இருக்கும் இடத்திற்கே போய் அங்கே பிரசங்கம் செய்வதுதானே?"

பிலிப்ஸ் சற்று நேரம் யோசனை செய்தார். பிறகு அவர் பாதிரியை நோக்கி, "நீங்கள் பாதிரிதானே?" என்று வினவினார்.

"ஆமாம்" என்றார் பாதிரி.

"நரகத்தில் வேதனைப்படுபவர்களைக் கரை ஏற்றுவதுதானே உம் வேலை?"

"ஆமாம்"

"அப்படியானால் நீர் ஏன் இங்கே இருக்கிறீர்? நரகத்திற்குப் போய் அங்குள்ளவர்களைக் கரை ஏற்றுவதுதானே!" — சாம்ராஜ்



முப்பதாம் அத்தியாயம்

கங்கைக் கரையிலே!

பீஜகுப்தனுக்குத் தன் மீதே ஆச்சரியமாயிருந்தது. அவன் தன் விருப்பத்துக்கு விரோதமாக, தன் மனதை நன்றாகப் புரிந்து கொள்ளாமலேயே யசோதராவின் மீது அதிகமாக ஈடுபாடு கொள்ளலானான். சவேதாங்கனுடைய முகத்தில் தோன்றிய உணர்ச்சிகள் மட்டும் அன்று அவனை 'ஜாக்கிரதை!' என்று எச்சரிக்காமல் இருந்தால் அவன் தன் உள்ளம் அனைத்தையும் யசோதராவிடம் பறி கொடுத்திருப்பான். அவளைத் தன்னுடைய உள்ளக் கோயிலில் வைத்துப் பூஜிக்கவும் தொடங்கியிருப்பான்.

அவன் காசி யாத்திரைக்குப் புறப்பட்டானே, எதற்காக? தன் துயரங்களை மறப்பதற்காகவும், தன் உள்ளத்து உணர்ச்சிகளை அடக்கிக் கொள்ளுவதற்காகவும் தானே? பாடலிபுத்திர நகரத்தில் இருந்துகொண்டு, அதுவும் சித்திரலேகாவின் சமீபத்தில் இருந்து கொண்டு சுகபோகச் சூழ்நிலையில் ஊறித் திளைத்துக் கொண்டிருந்தால் தன் உள்ளத்துப் புண் ஒரு நாளும் ஆறாது என்பதை அவன் நன்கு உணர்ந்திருந்தான். ஆகவேதான் அவன் பாடலிபுத்திர நகரத்தை விட்டுத் தேச யாத்திரைக்குக் கிளம்பினான். இல்லாவிட்டால் அவன் எதற்காகத் தேச யாத்திரைக்குக் கிளம்பியிருக்கப்போகிறான்? உள்ளத்திலே உதித்த வைராக்கிய உணர்ச்சிதான் அவனைக் காசி யாத்திரைக்கு இழுத்து வந்தது. எவ்வித நோக்கமுமின்றித் தன் கால் போன போக்கில் போகும் பிரயாணியைப்போல் அல்லவா அவன் வீட்டைவிட்டுக் கிளம்பிவிட்டான்?

'எவ்வித நோக்கமுமின்றித் தன் கால் போன போக்கில் போகும் பிரயாணியைப் போலவா?' என்று தன்னைத்தானே பீஜகுப்தன் கேட்டுக் கொண்டான். உடனே அவனுடைய நினைவு அலைகள் புரண்டு கொடுத்தன. 'உலகத்திலே ஒரு மனிதனாவது எவ்வித நோக்கமுமின்றி வாழ்கிறானா? எவ்வித நோக்கமும் இல்லாமல் ஒரு மனிதன் வாழத்தான் முடியுமா? ஏன்? முடியாமல் என்ன?' —இதைப் பற்றி பீஜகுப்தனுடைய மனம் இல்லாத எண்ணம் எல்லாம் எண்ணிற்று. கடைசியில் அது ஒரே குழப்பத்தில் அழுந்தியும் போய்விட்டது. அடுத்த கணமே அவனுடைய உள்ளத்தில் இன்னொரு கேள்வி எழுந்தது: மனிதனாகப் பிறந்துவிட்டால் ஏதாவது ஒரு நோக்கம்—ஒரு லட்சியம் இருந்துதான் தீரவேண்டுமோ? 'நாம் என்ன செய்வதற்காக வந்திருக்கிறோம், என்ன செய்ய விரும்புகிறோம், என்ன செய்யப் போகிறோம்?' என்று எந்த மனிதனாலாவது நிச்சயமாகச் சொல்ல முடியுமா? முடியாது, முடியாது; ஒரு நாளும் முடியாது. ஏனெனில் அது சொல்லுக்குள் அடங்காத விஷயம். மனிதன் பிறர் வசப்பட்டவன்; சூழ்

நிலைக்கு அடிமை செய்பவன்; எவ்வித நோக்கமோ லட்சியமோ இல்லாதவன். முன்பின் தெரியாததொரு சக்தி ஒவ்வொரு மனிதனையும் ஆட்டிவைக்கிறது. மனிதனுடைய வெறுப்பு—விருப்புக்கு அது எவ்வித மான மதிப்பும் வைப்பதில்லை. மனிதன் தன் காலால் நிற்கக் கூடியவன் அல்ல; தன் பலம் கொண்டு நடப்பவனும் அல்ல. அவனை ஒரு செயலாளன் என்று சொல்லுவதும் தவறு. ஏனெனில் அவன் தன் மனம்போன போக்குப்படி ஒரு காரியமும் செய்ய முடியாது. மனிதன் முன்பின் தெரியாத அந்தச் சக்தியின் சாதனமாக, கருவியாக, கைப்பொம்மையாகத்தான் இருக்க முடியும். ஆகவே மனிதனைக் கர்த்தா என்றோ செயலாளன் என்றோ சொல்வது தவறு; அவனை ஒரு சாதனம் என்று சொல்லுவதுதான் பொருந்தும்.

இந்த நினைவில் பீஜகுப்தன் புரண்டு படுத்தான். அவனுடைய சிந்தனைப் பிரவாகமும் புரண்டு கொடுத்தது. ஆகவே அவனால் தூங்க முடியவில்லை.

நள்ளிரவு கழிந்து நெடுநேரமும் ஆகிவிட்டது. நாற்புறமும் எங்கு பார்த்தாலும் மிகப் பயங்கரமான அமைதி நிலவி இருந்தது. பீஜகுப்தன் மறுபடியும் சிந்தனையில் ஆழ்ந்தான். 'நான் நாளைக்குப் பாடலிபுத்திர நகரத்துக்குப் புறப்பட்டு விடுவதாகத் தீர்மானித்திருக்கிறேனே, எதற்காக?'—அவனுடைய உள்ளத்தில் இந்தக் கேள்வி எழுந்ததுதான் தாமதம்; அவனுடைய மனம் அந்தக் கேள்விக்குப் பதில் தேடுவதில் முனைந்தது. 'எதற்காகவா? சித்திரலேகாவைச் சந்திப்பதற்காக! சித்திரலேகாவை மறுபடியும் தன்னிடம் அழைத்துக் கொள்ளுவதற்காக!' என்று அந்தக் கேள்விக்கு உடனே பதிலும் கிடைத்துவிட்டது!

பீஜகுப்தனுக்குத் தன் மீது அபார நம்பிக்கை இருந்தது. தான் மிகவும் பிடிவாதம் பிடித்துக் கூப்பிட்டால் சித்திரலேகா ஆட்சேபிக்க மாட்டாள்; தன்னுடன் வரச் சம்மதித்து விடுவாள் என்பதை அவன் நன்கு அறிந்திருந்தான். ஆனால் அடுத்த கணமே, 'ஹூஹூம், நான் இனிச் சித்திரலேகாவிடம் போகமாட்டேன். அவளிடம் நான் எதற்காகப் போகவேண்டும்? சித்திரலேகாவை நானா வேண்டாம் என்று சொல்லி விரட்டினேன்? இல்லையே! அவளாகவே அல்லவா என்னை வேண்டாம் என்று உதறித் தள்ளிவிட்டுப் போய்விட்டாள்! ஆமாம், அவள் அப்படிச் செய்வானேன்? விதியின் விளையாட்டு, விதியின் சதி, தலையில் எழுதின எழுத்து என்றெல்லாம் சொல்லுகிறார்களே, ஒரு வேளை அது தானோ இது! இதுதான் தலை எழுத்து, இதுதான் விதி என்றால் அது அழிக்கமுடி



யாததுதான். தலையெழுத்தை அழிக்க முடியாது என்றிருக்கும் பொழுது நாம் வீணில் வருத்தப்பட்டு என்ன பிரயோஜனம்? நடக்க வேண்டியது நடந்துதானே தீரும்? சித்திரலேகா போய்விட்டாள். போனால் போகட்டுமே! அவளுக்காக நாம் நம் வாழ்க்கையை வீணாகக் கெடுத்துக் கொள்ளுவானேன்? அப்படியே அவளுக்காக நாம் வாழ்க்கையைக் கெடுத்துக் கொள்ளுவதும் தான் அவ்வளவு புத்திசாலித்தனம் ஆகுமா?'

இவ்வாறு சிந்தித்த வண்ணம் பீஜகுப்தன் தன் இரு கண்களையும் இறுக மூடிக்கொண்டான். எப்படியாவது தூக்கத்தை வரவழைத்துக் கொண்டு விடவேண்டும் என்று அவன் பிரும்மப் பிரயத்தனங்கள் செய்து பார்த்தான். ஆனால் தூக்கம் வந்தால்தானே? அவனுடைய மனம் எதை எதையெல்லாமோ எண்ணி அலைபாய்ந்தது.

'ஆமாம், தியாகத்தினாலும் வேதனையினாலும் ஒரு வேளை வாழ்க்கையே வீணாகி விடுமோ? வாழ்க்கை வீண் ஆவானேன்? தியாகமும் வாழ்க்கையின் ஒரு பகுதிதானே! உலகத்தில் பிறக்கும் ஒவ்வொரு மனிதனும் இன்பம் அனுபவிப்பதற்காகவேதான் பிறக்கிறானா? எல்லோருடைய தலையிலும் இன்பமேதான் எழுதியிருக்கிறதா? இல்லையே! வாழ்க்கையில் இன்பத்துக்கு எவ்வளவு மகத்துவம் உண்டோ, அவ்வளவு மகத்துவம் துன்பத்துக்கும் உண்டு. அப்படியிருக்கும்பொழுது நாம் தியாகத்தைத்தான் அனுபவிப்போமே! தியாக வழியையும் தியாக வாழ்க்கையையும்தான் மேற்கொள்ளுவோமே! நாம் நமது கடமையைச் செய்தாக வேண்டும். கடமையில் கண்ணும் கருத்தாயிருப்பதுதான் மனிதனுடைய கடமை; மனிதனுடைய தர்மம். — ஆமாம், நம்முடைய கடமை என்ன?'



உள்ளக் கடலிலே இந்தக் கேள்வி எழுந்ததும் பீஜகுப்தன் எழுந்து நின்றான். பக்கத்திலிருந்த கூஜாவின் அருகில் சென்று ஒரு கோப்பை குளிர்ந்த நீர் எடுத்துப் பருகினான். பிறகு இன்னுமொரு கோப்பை நீர் கொண்டு முகத்தை நன்றாகக் கழுவினான். பிறகு தன் படுக்கையில் போய்ப் படுத்து மறுபடியும் தூங்க முயன்றான்.

'நம்முடைய கடமை என்ன? நாம் எதற்காகப் பிறந்தோம்? நம்முடைய கடமையைச் செய்வதற்காகத்தானே? ஆமாம்! நம்முடைய கடமை என்ன? கிருஹஸ்தனாக ஆகிக் குடும்ப வாழ்க்கை வாழ வேண்டியது நம்முடைய கடமை; வம்ச விருத்தி செய்ய வேண்டியது நம்முடைய கடமை. அதற்காக நாம் என்ன செய்ய வேண்டும்? விவாகம் செய்து கொள்ள வேண்டும். இதுதான் விதியின் நியதியோ? கடவுளின்

சட்ட திட்டமோ? ஆமாம், அப்படித்தான் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் சித்திரலேகா என்னுடைய வாழ்க்கையிலிருந்து விலகுவானேன்? நான் குடும்ப வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டும் என்பது கடவுளின் சித்தம்போலும். ஆகவேதான் சித்திரலேகா என்னைப் புறக்கணித்து விட்டுப் போய் விட்டாள். நான் மணம் செய்து கொள்ளுவது தான் சரி. மணம் செய்து கொண்டு குடும்ப வாழ்க்கையை மேற்கொள்ளுவது தான் நியாயம். அப்படியானால் நான் மணம் செய்து கொண்டு குடும்ப வாழ்க்கையை மேற்கொண்டு விடட்டுமா? இனி மேல் எதற்கு யோசனை? இல்லை, மணம் செய்து கொள்வதற்குத் தகுந்த பாத்திரமான பெண் ஒருத்தி வேண்டாமா? அப்படி யாராவது இருக்கிறார்களா? 'இருக்கிறார்களா?' என்ற கேள்வி இங்கே எழுவானேன்? இல்லாமல் என்ன? வேண்டிய பெண்கள் இருக்கிறார்கள். முதலாவதாக யசோதரா இல்லையோ? ஆமாம், ஆமாம்! யசோதரா இருக்கிறாள். நான் மனக்குழப்பத்தில் என்னமோ அவளை மறந்து விட்டேன். யசோதரா எல்லாவிதத்திலும் எனக்கு உகந்தவள்தான். அழகில் சித்திரலேகாவைக் காட்டிலும் யசோதரா எந்த விதத்திலும் குறைந்தவள் அல்ல. அவள் சித்திரலேகாவுக்கு நிகரானவள்தான். சிற்சில அம்சங்களில் சித்திரலேகாவைவிட யசோதரா மேலானவள் என்று கூடச் சொல்லலாம். யசோதரா ரத்னத்துக்கு ஒப்பானவள். பரிசுத்தமான தங்க விக்ரஹத்துக்கு நிகரானவள். அவளுக்கு ஈடு இணை சொல்ல முடியாது. அருகிலிருக்கும் அவளை விட்டுவிட்டு வேறு பெண்களைத் தேடுவானேன்?



'அப்படியானால் நாம் கட்டாயம் யசோதாராவை மணம் செய்து கொள்ளத்தான் வேண்டுமோ? மறுபடியும் மறுபடியும் இதென்ன கேள்வி? பெண்களுக்கு இயல்பான சகல குணங்களும் யசோதாராவினிடத்தில் இருக்கின்றன. அப்படியிருக்கும் பொழுது அவளை மணந்து கொள்ளுவதில் உனக்கு என்ன குறை? சரி, யசோதாராவையே மணந்து கொண்டு விட்டால் போயிற்று! அவளை மணந்து கொள்வது என்பது நடக்கக் கூடிய காரியம் தானா?—இம் மாதிரி பல அநாவசியமான கேள்விகள் எல்லாம் கேட்டு மூளையைக் குழப்பிக் கொள்ளாதே! அதற்காகச் சொல்லவில்லை. முன்னமொரு தடவை அவளை வேண்டாம் என்று சொல்லி நான் மறுத்து விட்டேனே! இப்பொழுது மதிப்புக்குரிய மிருத்யுஞ்ஜயரிடம் சென்று யசோதாராவை எனக்கு மணம் செய்து வையுங்கள் என்று நான் எந்த வாயால் கேட்பது? அப்படியே நான் போய்த் தைரியமாகக் கேட்டாலும் மதிப்புக்குரிய மிருத்யுஞ்ஜயர், 'உனக்கு யசோதாராவை மணம் செய்து வைக்க எனக்குச் சம்மதமில்லை' என்று சொல்லி மறுத்து விடலாம் அல்லவா?'

பீஜகுப்தன் தனக்குத்தானே சிரித்துக் கொண்டான். 'இல்லை, இல்லை. இனி அது நடக்காத காரியம். யசோதாராவைக் கல்யாணம் செய்து கொள்ளுவது பற்றி நான் இனிக் கனவிலும் சிந்திக்க முடியாது. ஏனெனில் மிகவும் காலதாமதமாகிவிட்டது. சூட்டோடு சூடாக அப்பொழுதே கேட்டிருந்தால் ஒரு வேளை நடந்திருக்கலாம். இனி இவ்வளவு காலம் தாழ்த்திக் கேட்கப் போனால் காரியம் கைகூடாது. கைக்கு எட்டிய சந்தர்ப்பத்தை நழுவவிட்ட பின் இனி அதைப்பற்றி சிந்தித்து என்ன பயன்? சித்திரலேகா!—ஆமாம், சித்திரலேகா ஒருத்திக்குத்தான் இனி என் வாழ்க்கையில் இடம் உண்டு. அவளை விட்டால் எனக்கும் வேறு யாரும் கதி இல்லை.'

பீஜகுப்தன் மறுபடியும் எழுந்து நின்றான். தனக்கு இனித் தூக்கம் வராது என்று தோன்றியது அவனுக்கு. வாசற் புறத்தில் வந்து பார்த்தான். அப்பொழுது தான் தேய்பிறைச் சந்திரன் உதித்துக் கொண்டிருக்

தான். பீஜகுப்தன் மாளிகையிலிருந்து புறப்பட்டு நேரே கங்கைக் கரையை நோக்கி நடந்தான். பொழுது விடிவதற்கு இன்னும் இரண்டு ஜாமங்கள் பாக்கியிருந்தன.


பீஜகுப்தன் கங்கைக் கரையை அடைந்தான். அங்கே சிலர் உட்கார்ந்து சம்பாஷித்துக் கொண்டிருந்தனர். பீஜகுப்தனும் அங்கே போய் ஒதுப்புறமாக ஒரு ஓரத்தில் உட்கார்ந்து கொண்டான்.

அந்த இடத்தில் நான்கு பேர் உட்கார்ந்திருந்தனர். அப்பொழுது பேசிக்கொண்டிருந்த மனிதருக்குக் கிட்டத்தட்ட எழுபது வயதிருக்கலாம். அவருடைய முகத்திலே தேஜஸ் சுடர் விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. பார்த்த மாத்திரத்திலேயே மிகவும் பெருந்தன்மை வாய்ந்தவர் போலவும் தோன்றியது. வயது முதிர்ச்சியின் காரணமாக அவருடைய முகத்தில் சுருக்கங்கள் விழுந்திருந்தன. அவர் பேசும் தோரணையிலிருந்து அவர் ஒரு சந்நியாசியாக இருக்க வேண்டும் என்பதும் விளங்கியது. மற்ற மூவரும் வயதில் அவரைவிடச் சிறியவர்கள். அவருக்கு எதிரே ஒல்லியான தேகம் படைத்த ஒரு வாலிபன் உட்கார்ந்திருந்தான். அவனுக்கு ஏறக்குறைய இருபத்தைந்து வயதிருக்கலாம். அவன் நடுத்தரமான உயரம் வாய்ந்தவன். அவனுடைய முகத்தில் கவலைக் கோடுகள் காட்சியளித்தன. சந்நியாசிக்கு வலது புறத்தில் நல்ல பருமனான நடுத்தர வயதுள்ள ஒரு மனிதர் உட்கார்ந்திருந்தார். அவரைப் பார்த்தால் வயது ஐம்பதை எட்டிப் பிடித்திருக்கும் என்று தோன்றியது. அவருக்குப் பக்கத்திலேயே அடர்த்தியான நீண்ட தாடியுடன் இன்னொருவர் உட்கார்ந்திருந்தார். அவருக்குச் சற்றேறக்குறைய அறுபது வயதிருக்கலாம். அவருடைய தாடியில் கொஞ்சம் நரைப்பும் கண்டிருந்தது

“இன்னும் உனக்குத் துறவறம் பூணக்கூடிய வயது வரவில்லை, அப்பா! போய் உன் கடமையைச் செய். உன் தகப்பனார் சொல்வதைக் கேள்” என்று சந்நியாசி மிகவும் அன்பு தோய்ந்த குரலில் வாலிபனுக்கு உபதேசித்துக் கொண்டிருந்தார்.

வாலிபன் சந்நியாசியின் கால்களை கெட்டியாகப் பிடித்துக் கொண்டான். “ஸ்வாமி! நான் தங்களை அண்டிவிட்டேன். என்னைக் காப்பாற்ற வேண்டியது தங்கள் பொறுப்பு. தயவுசெய்து எனக்குச் சந்நியாசம் எடுத்து வையுங்கள். எனக்கு வாழ்க்கையில் எவ்விதமான பற்றுதலும் இல்லை. உலகத்திலே வாழ்வதென்றால் ஒரு உத்தேசம், ஒரு நோக்கம் வேண்டாமா? ஒரு தடவை எப்பொழுது விரக்தி ஏற்பட்டுவிட்டதோ, அப்புறம் உலகத்தில் இருந்தால் அது ஆத்மாவையே அழித்துக் கொள்வதாகத்தானே முடியும்? எனக்கு இந்த உலகத்தினிடம் அசாத்தியமான வெறுப்பு ஏற்பட்டுவிட்டது. எனக்கு இங்கே எவ்விதமான அமைதியும் கிட்டாது. தாங்கள் என் தகப்பனாரையே வேண்டுமானாலும் கேட்டுப்பாருங்கள். கடந்த இரண்டு ஆண்டுகளாக நான் அநுபவித்த நரக வேதனையைச் சொல்லி முடியாது. அப்பப்பா! அந்தக் கஷ்டத்தையும் வேதனையையும் இப்பொழுது நினைத்தாலும் என் உள்ளம் இடிந்து போகிறது. எனக்கு உலகவாழ்க்கை ‘போதும், போதும்’ என்று ஆகிவிட்டது. தாங்கள்தான் என்னை ஆட்கொண்டு காப்பாற்றவேண்டும்” என்றான்.

நடுத்தர வயதுள்ளவரான அந்த வாலிபனுடைய தந்தை, “ஆமாம். நீ சொல்வது உண்மைதான். ஆனால் நான் சொன்னதை நீ கேட்கவில்லையே! ‘இரண்டாவது கல்யாணம் செய்துகொள், செய்து கொள்’ என்று நான் உனக்குப் படித்துப் படித்துச் சொன்னேனே, கேட்டாயா? இப்பொழுது உனக்கு அப்படி என்ன அதிகமான வயது



தபால் பெட்டி நம்பர் 1:—என்ன! இந்த ஞாயிற்றுக்கிழமை லீவு வந்தாலும் வந்தது, பொழுதே போகமாட்டேன் என்கிறதே!

தபால்பெட்டி நம்பர் 2:—ஆமாம்! வாருங்கள், இன்று பீச்சுக்குப் போய்விட்டு வரலாம்.

ஆகிவிட்டது? பிறப்பும்—இறப்பும் இணை பிரியாத் தோழர்கள். பிறவி என்று ஒன்று எடுத்துவிட்டால் சாவு என்பது நிச்சயம் உண்டு. அதற்காக வருந்திப் பயன் என்ன? உனக்கு ஒரு குழந்தை குட்டியும் இல்லை. இப்பொழுதே நீ சந்நியாசம் வாங்கிக் கொள்வது சிறிதும் உசிதமாகாது. கல்யாணம் செய்து கொண்டுவிட்டால், உனக்கு வாழ்க்கையில் மறுபடியும் தானாகவே பற்றுதல் உண்டாகிவிடும்" என்றார்.

"தானாகவாவது, பற்றுதல் உண்டாகவாவது? ஒரு தடவை நான் கல்யாணம் செய்து கொண்டு பட்ட கஷ்டம் போதாதா, அப்பா?" என்றான் அந்த வாலிபன்.

"அப்படிச் சொல்லாதே! இந்த உலகத்தில் ஏற்படும் கஷ்ட நிஷ்டூரங்களையெல்லாம் முன் நின்று எதிர்த்து வெற்றி கொள்ளுவது தான் தைரியசாலிகளுக்கு அழகு. என் சொல்லைத் தட்டாமல் கல்யாணம் செய்துகொள்" என்றார் தந்தை.

சந்நியாசி வாலிபனைப் பார்த்து, "ஆமாம் அப்பா! உன் தந்தை நியாயத்தைத்தான், சொல்லுகிறார். குழந்தாய்! காதல் என்று சொல்லுகிறோமே, அது வெறும் பொய்க் கற்பனை. ஆணுக்கும் பெண்ணுக்கும் இகலோகத்தில் மட்டும்தான் தொடர்பு ஏற்படுகிறது. இகலோகத்தை விட்டுப் பிரிந்துவிட்டால் இருவருமே தனித்தனி ஆத்மாக்கள் ஆகிவிடுகின்றனர். இந்த உலகத்திலும்கூட ஆணுக்கும் பெண்ணுக்கும் ஆத்மீக ஐக்கியம் ஏற்படுவது என்பது நடக்கவே நடக்காத காரியம். காதல் என்பது இரு ஆத்மாக்களிடையே ஏற்படும் நெருங்கிய தொடர்பேயன்றி வேறு ஒன்றும் இல்லை. அந்த நெருங்கிய தொடர்பு அவ்வளவு முக்கியமானதல்ல; மகத்துவம் வாய்ந்ததும் அல்ல. அது எந்த சமயமும் முறியக் கூடியது தான்; அறுந்து விடக் கூடியதுதான். அந்தத் தொடர்பு துண்டிக்கப்பட்டு விட்டால் தன் வாழ்க்கையே துயரக்காடாக ஆகிவிட்டது என்று எண்ணுவது கெட்டிக்காரத்தனம் அல்ல; புத்திசாலித்தனமும் ஆகாது. ஆகவே மறு விவாகம் செய்து கொள்ள வேண்டியதுதான் உன்னுடைய கடமை. கல்யாணம் செய்து கொள்ளாவிட்டால் நீ உன் கடமையைப் புறக்கணிக்கிறாய் என்று தான் அர்த்தம் கொள்ள வேண்டும்" என்றார்.

"அது எப்படி, ஸ்வாமி?"

"கேள், சொல்லுகிறேன். பெண் பலமற்றவள். அபலையென்று அழைக்கப்படுபவள். ஒரு அபலைக்காவது இடம் கொடுத்து உதவ வேண்டியது ஒவ்வொரு ஆண் மகனுடைய கடமையும் ஆகும். விவாகத்தின் மூலமாகத்தான் மனிதன் அபலையான பெண்ணுக்கு இடம் கொடுத்து உதவுகிறான். புருஷன் பெண்ணுக்கு இடம் கொடுத்து உதவாவிட்டால் பெண்ணின் நிலைமை சோகமே உருவெடுத்ததாக ஆகிவிடும். அதனால் ஆணுக்கும் அநேக கஷ்டங்கள் நேரிடலாம். விவாகம் செய்து கொள்ளாமல் சந்நியாசம் வாங்கிக் கொண்டு விடவேண்டும் என்று நீ யோசிப்பதைப் பார்த்தால், குடும்ப வாழ்க்கையைக் கண்டு நீ பயந்து சாகிறாய் என்றுதான் நினைக்கத் தோன்றுகிறது. அபலையான ஒரு பெண்ணுக்கு இடம் கொடுத்து உதவ வேண்டிய உன்னுடைய கடமையைப் புறக்கணிக்கப் பார்க்கிறாய் என்றும் சொல்ல வேண்டியிருக்கிறது" என்றார் சந்நியாசி.

"ஆனால் ஸ்வாமி! நான் சுகபோக வாழ்க்கையை வெறுத்துத் தவ வாழ்க்கையில் ஈடுபட்டுத் தவத்தீயில் அல்லவா குளிக்க விரும்புகிறேன்! அப்படியிருக்கும் பொழுது நான் குடும்ப வாழ்க்கையைக் கண்டு பயந்து சாகிறேன் என்று எப்படிச் சொல்ல முடியும்? தவ வாழ்க்கையை மேற் கொள்ளுவது பயங்கொள்ளித்தனத்துக்கு அறிகுறியாகுமா, ஸ்வாமி?" என்று கேட்டான் அந்த வாலிபன்.

அதைக் கேட்டதும் சந்நியாசி 'கலகல' வென்று சிரித்துவிட்டார். "ஆமாம், நீ தவத்தீயில் எதற்காகக் குளிக்க விரும்புகிறாய்? யாரை நீ உயிருக்குயிராக நேசித்தாயோ அவள் உன்னை நடு வழியில் பரிதவிக்கவிட்டுப்போய் விட்டாள் என்பதற்காகத்தானே? ஆனால் குழந்தாய்! இம்மாதிரி நிலையில் நீ மேற்கொள்ளப் போகும் தவ வாழ்க்கை வியர்த்தமானது; பிரயோஜனமற்றது. அதை ஒரு விதத்தில் தற்கொலை என்று கூடச் சொல்லி விடலாம். அந்தத் தவத்துக்கு ஒரு உயர்ந்த நோக்கமோ, லட்சியமோ கிடையாது. வீணில் நீ உன்னுடைய ஆத்மாவை எதற்காக வாட்டி வதக்கிக் கொல்ல விரும்புகிறாய்?" என்று கேட்டார்.

சந்நியாசியின் சொல்லைக் கேட்டதும் வாலிபன் அவருடைய காலடிகளில் விழுந்து தலை வணங்கினான். பிறகு எழுந்து, "ஸ்வாமி! நான் தங்கள் சொற்படி நடக்கச் சித்தமாயிருக்கிறேன்" என்றான். சந்நியாசியும் கைதூக்கி அவனை ஆசீர்வதித்தார். சிறிது நேரத்துக்கெல்லாம் அந்த வாலிபன் தன் தந்தையை அழைத்துக் கொண்டு அங்கிருந்து புறப்பட்டுச் சென்றான். (தொடரும்)

கடம் கிருஷ்ணய்யர்

கோட்டு வாத்தியம் ஸ்ரீ துரையப்ப பாகவதர்

வாலிபப் பருவம்

சங்கீத உலகத்துப் புராண புருஷர்களில் கடவாத்தியம் பழனி கிருஷ்ணய்யர் ஒருவர். 'பக்க வாத்தியம் வாசித்த வித்துவான்' என்று அவரை யாரும் நினைப்பதில்லை. தமக்கென்ற ஒரு தனி கௌரவத்தைச் சம்பாதித்துக் கொண்ட கலைஞர் அவர். அவர் காலமாகிச் சுமார் நாற்பது வருஷங்களாகியும் அவருடைய யோக்கியதாம்சங்களையோ, நேர்மையையோ, திறத்தையோ யாராலும் மறக்க முடியவில்லை.

கடவாத்தியத்தில் உள்ள உண்மையான பூர்ண நாதத்தின் நிலை, அதைச் சுருதியுடன் சேர்த்து வாசிக்கையில் உண்டாகும் நாத வின்னியாசங்கள், பாட்டுடன் சேர்ந்து வாசிக்க இன்றியமையாத தாள காலப்ரமாண நிர்ணயம், ஏராளமான மனோதர்மங்களுடன் கூடிய லயவின்னியாசங்கள், நிஸ்ஸந்தேகமான தாள ஞானம் இவைகள் யாவும் அவரிடம் வெகு உன்னத நிலையை அடைந்திருந்தன. ஆகவே கடவாத்திய வாசிப்பில் ஒரு புரட்சியை உண்டாக்கி அதன் கௌரவத்தைப் பெரிதும் உயர்த்தி உன்னத நிலைமைக்குக் கொண்டு வந்தவர் கிருஷ்ணய்யர்தான்.

இவர் பழனியைச் சேர்ந்த கலையம்புத்தூர் என்னும் அக்கிரகாரத்தில் இருந்தார். வாலிபத்திலேயே இவருக்கு நல்ல தாளஞானமும் சங்கீத ஞானமும் உண்டு. இவருடைய மாமன் பத்மநாப பாகவதர் ஒரு சங்கீத வித்துவான். சுமாராய் கடமும் வாசிப்பார். ஸ்ரீ கிருஷ்ணய்யர் அவரிடம் சங்கீதம் பயின்று வந்தார். அவருடைய சாரீரம் கட்டையாகவும் கவர்ச்சியற்றதாகவும் இருந்த படியால், ஏதாவது தாள வாத்தியங்களைக் கொடுத்து அப்பியாசம் செய்யும்படி தூண்ட பத்மநாப பாகவதர் எண்ணினார். இதை அறிந்து கொண்ட கிருஷ்ணய்யர், தம் மாமனிடம் கடவாத்தியத்தையே கற்றுக் கொள்ள நிச்சயித்து, அவர் உத்திரவு பெற்று அதில் தீவிரமாய் ஈடுபட்டார். வெகு சீக்கிரத்திலேயே அவர் அதில் நல்ல தேர்ச்சி பெற்றார். அவருடைய நிர்ணயமான காலப்பிரமாண ஞானம், தாளக் கணக்கு முதலிய விஷயங்களில் அவருக்குள்ள நுண்ணறிவு—முதலியவற்றைக் கண்டு பத்மநாப பாகவதர் வியந்தார். அவருடைய குமாரர்களாகிய அப்பு பாகவதர், ரங்கப்பய்யர் ஆகிய இருவரும் சங்கீதம் பயின்று கச்சேரி செய்யும் நிலைமைக்கு வந்து கொண்டிருந்தபடியால் அவர்களுடன் ஸ்ரீ கிருஷ்ணய்யர் அடிக்கடி கடம் வாசித்துத் தேர்ச்சி பெற்றார். இனி, எந்தக் கச்சேரியானாலும் நிர்வகிக்கலாம் என்ற நம்பிக்கை ஏற்பட்டவுடன் தஞ்சை ஜில்லாவுக்கு வந்து சேர்ந்தார்.

பெரியோர் நட்பு

அந்தச் சமயம் சங்கீத உலகில் பெரும் புகழ்பெற்று விளங்கிய கும்பகோணம் வேணுகானம் சரப சாஸ்திரிகளைக் கண்டு அவரிடம் ஒரு முறை கடம் வாசித்துக் காண்பித்து அவருடைய மதிப்பைப் பெற்றார். அவரும் தம்முடைய கச்சேரிகளில் இவரை அடிக்கடி கடம் வாசிக்கச் சேர்த்துக் கொண்டார். சில நாட்களில் தஞ்சாவூர் கிருஷ்ண பாகவதரின் பரிச்சயம் இவருக்கு ஏற்பட்டது.

கடவாத்தியம் கிருஷ்ணய்யர் நல்ல வசீகரமான தோற்றம் உடையவர். அவருடைய குறுகுறுப்பான முகவிலாசத்தையும் விசாலமான மார்பையும், திரண்ட புஜங்களையும், ஒட்டின வயிற்றையும், சிம்மத்தைப் போன்ற இடையையும் கண்ட யாரும் அவரை எளிதில் மறக்க இயலாது. அவருக்கு முருகனிடம் அந்தரங்கமான பக்தி உண்டு. ஆகையால், அடிக்கடி 'ஓம் சரவண பவ' என்ற திருநாமத்தை உரக்கச் சொல்லிக் கொண்டேயிருப்பார். தஞ்சாவூர் கிருஷ்ண பாகவதரவர்கள் இவருடைய யோக்கியதையிலும் மேன்மையான குணங்களிலும் விநயமான சுபாவத்திலும் பெரிதும் ஈடுபட்டு தமது கதைகளுக்கு கடம் வாசிக்கச் சில சமயம் அவரைச் சேர்த்துக் கொண்டார். பாகவதரவர்களின் முக்கிய பின் பாடகராயிருந்த எனது தந்தையாகிய தஞ்சாவூர் பஞ்சாபகேச பாகவதரும் கிருஷ்ணய்யரும் அத்தியந்த நண்பர்களானார்கள்.

கிருஷ்ணய்யர் முதன் முதலாகத் தஞ்சைக்கு வந்தபோது, மிருதங்கம் வாசிப்பதில் ஓர் அவதார புருஷராய் விளங்கிய ஸ்ரீ நாராயணசாமி அப்பா அவர்கள் வீட்டில் நடந்த சனிக்கிழமை பஜனையையும், அதில் அவர் இரண்டு தம்பூராக்களைச் சேர்த்துக் கொண்டு நாதப் பிரவா



கிரஹஸ்தர்:—இந்தத் தபாலாபீஸ்களுக்கெல்லாம் லீவு விடவேண்டியது ரொம்ப அவசியந்தான், ஸார்!


மற்றவர்:—என்ன ஸார் இது? எல்லோரும் லீவு விடக்கூடாது என்று சண்டை போடுகிறார்கள். நீங்கள் லீவு வேண்டுமென்கிறீர்களே, ஏன்?

கிரஹஸ்தர்:—ஆமாம் ஸார்! லீவு ஞாயிற்றுக்கிழமை விட்டால், வீடு அகப்படாத இந்தக் கஷ்ட காலத்திலே தபாலாபீஸிலேயே என் பெண் கல்யாணத்தை நடத்தி விடலாம் என்று பார்க்கிறேன்!

கத்தில் மூழ்கி ஸ்ரீராமன் குணங்களைப் பாடிக் கொண்டு மிருதங்கம் வாசித்து பஜனை செய்வதையும் கண்டு பிரமித்துப் போனார். அந்த மிருதங்க வாசிப்பு, அவர் பிறருடைய பாட்டுக் கச்சேரிகளிலும் கதைகளிலும் மிருதங்கம் வாசிக்கையில் எவ்வளவு கலையுடனும் சிறப்புடனும் விளங்குமோ அதற்குச் சமமான அல்லது மேம்பட்ட மனோதர்மத்துடன் விளங்கியது. ஆகையால், ஸ்ரீ கிருஷ்ணய்யர் அதை ஓர் தெய்வீக அம்சமாகவே கருதினார். பஜனையின் முற்பகுதி முடிந்தவுடன் பிற்பகுதியில் வழக்கம்போல் வந்திருக்கும் வித்துவான்களைக் கைங்கரியம் செய்யும்படி ஸ்ரீ அப்பா கேட்டுக் கொண்டார். அன்று நடந்த தஞ்சாவூர் பஞ்சாபகேச பாகவதரின் தனிப்பிடில் கச்சேரிக்கு கடவாத்தியம் கிருஷ்ணய்யர் வெகு அருமையாய்க் கடம் வாசித்துக் கடைசியில் தம்முடைய இணையற்ற கற்பனைகளையும் கடவாத்தியத்தின் நாத விசேஷங்களையும் தமது விறுவிறுப்பான வாசிப்பின் மூலம் வெளிப்படுத்தி சுமார் முக்கால் மணி அவகாசம் ஒரு தனி ஆவர்த்தம் வாசித்தார். அதைக் கேட்ட அப்பா அப்படியே ஸ்தம்பித்துவிட்டார். சபையோருடைய பிரமிப்பும் ஆரவாரமும் ஒருவாறு அடங்கியவுடன், "ஆஹா, இந்த மனுஷ்யன் அசுர சாதகி, வித்துவான்களில் இணையற்ற சூரன், கற்பனைகளைப் புங்கானுபுங்கமாய் அள்ளி வீசும் மேதாவி, நல்ல வேளையாய் இவர் கடத்தை வாத்தியமாக எடுத்துக் கொண்டாரோ, நாமெல்லாம் பிழைத்தோமோ!" என்று ஸ்ரீ நாராயணசாமி அப்பா மனமாரப் புகழ்ந்தார்.

உடனே ஸ்ரீ கிருஷ்ணய்யரவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி அப்பாவும் சுமார் கால் மணி நேரம் நாதமயமாகவே ஒரு தனி ஆவர்த்தம் வாசித்தார். அந்த நாத வெள்ளத்தில் தம் வாசிப்பு எங்கேயோ போய்விட்டது என்று உணர்ந்த கிருஷ்ணய்யர், "இம்மாதிரி நாதத்தில் லவலேசம்கூட இந்த ஜன்மத்தில் எனக்குப் பிராப்தமில்லை என்று எண்ணித்தான் என் குருநாதர் இந்தப் பானையை என் கையில் கொடுத்திருக்கிறார்!" என்று அப்பாவைப் புகழ்ந்தார். இவர்கள் இருவரும் அவரவர்கள் வாத்தியத்தில் தன்னிகரில்லாக் கீர்த்தியைப் பெற்றவர்களாக விளங்கிய போதிலும், வாயு புத்திரனாகிய அனுமானிடம் அதே அம்சமாய் உதித்த பீமசேனன் எப்படி பக்தி விசுவாசத்தை வைத்திருந்தானோ அதைப் போல் கடவாத்தியம் கிருஷ்ணய்யர் ராம பக்தனாகிய மிருதங்கம் நாராயணசாமி அப்பாவிடம் பக்தி கொண்டிருந்தார்.

தஞ்சாவூர் கிருஷ்ண பாகவதரின் சிபாரிசின் மூலம் பட்டணம் சுப்பிரமணிய அய்யர் அவர்களின் கச்சேரியில் கிருஷ்ணய்யர் கடம் வாசிக்க நேர்ந்தபோது ஸ்ரீ அய்யர் இவரை மிகவும் கொண்டாடி அடிக்கடி தன் கச்சேரிகளில் சேர்த்துக் கொண்டார். இதேபோல் திருக்கோடிக்காவல் கிருஷ்ணய்யரவர்களும் தமது தனிப்பிடில் கச்சேரிகளில் இவரை அடிக்கடி சேர்த்துக்கொண்டார். இப்படியாக எல்லா முதிய, பெரிய வித்துவான்களின் கச்சேரிகளுக்கும் அடிக்கடி வாசித்து அந்த வாத்தியத்தில் தாம் ஓர் இணையற்ற வித்துவான் என்ற புகழைச் சில மாதங்களிலேயே அடைந்தார். மற்றும் அந்தக் காலத்தில் இளம் வித்துவான்களாய்ப் பிரசித்திக்கு வந்துகொண்டிருந்த ராமநாதபுரம் சீனிவாசய்யங்கார், கோனேரிராஜபுரம் வைத்தியநாதய்யர், பாலக்காடு அனந்தராம பாகவதர் ஆகியவர்களுடன் அடிக்கடி சேர்ந்து வாசித்து தமக்கென ஒரு தனி கௌரவத்தைச் சம்பாதித்துக் கொண்டார். (தொடரும்).



38. நெருப்பைக் கொட்டினார்கள்

சௌரி-சௌரா பயங்கர சம்பவத்துக்காக மகாத்மா பிப்ரவரி 12உ உபவாசம் ஆரம்பித்து ஐந்து நாள் விரதம் இருந்தார். 17உ மாலை 5 மணிக்கு மகாத்மாவின் சீடர்களில் ஒருவரான ஸ்ரீ கிருஷ்ண தாஸ் உண்ணாவிரத பூர்த்தி பாரணைக்காகக் கொஞ்சம் பாலும் சில திராட்சைப் பழங்களும் ஆரஞ்சு ரஸமும் கொண்டு வந்தார். காந்திஜி ஸ்ரீ மத் ராதாஸ் என்னும் இன்னொரு சீடரை அழைத்துப் பகவத் கீதையின் பன்னிரண்டாவது அத்தியாயத்தைப் படிக்கச் சொன்னார். கண்ணை மூடிக் கொண்டு உட்கார்ந்து கவனமாகச் சிரவணம் செய்தார். அச்சமயம் பாபுராஜேந்திர பிரஸாத், சேத் ஜம்னலால் பஜாஜ், ஸ்ரீமதி அனசூயாபென் முதலியவர்கள் மகாத்மாவின் அருகில் இருந்தார்கள். மகாத்மாவின் கண்ணில் என்றுமில்லாத வண்ணம் சில கண்ணீர்த் துளிகள் துளிர்த்து வழிவதை அவர்கள் பார்த்து மனம் உருகினார்கள். சௌரி-சௌரா காந்திஜியின் மனதை எவ்வளவு புண்படுத்தியிருக்க வேண்டும் என்பதை உணர்ந்தார்கள். ஆம்; அதில் வியப்பு என்ன? எந்த இயக்கத்தினால் இந்தியாவுக்குக் கதிமோட்சத்தை அளிக்கலாம் என்று நம்பிக்கை கொண்டு மகாத்மா காந்தி அல்லும் பகலும் அனவரதமும் வேலை செய்து வந்தாரோ, அந்த இயக்கத்தை இப்போது ஆரம்பிக்க முடியாமற் போய் விட்டதல்லவா?

இதனால் மகாத்மாவின் மனம் எவ்வளவு தூரம் புண்ணாகியிருக்க வேண்டும் என்று அறியாத அரசியல் வாதிகளும் தேசபக்தர்களும் அவருடைய தலைமீது நெருப்பைக் கொட்டிக் கொண்டிருந்தார்கள். எல்லாவற்றையும் காந்திஜி பொறுமையாகச் சகித்துக் கொண்டார்.

ஆனால் இதற்கெல்லாம் பரிகாரமான ஒரு நிகழ்ச்சியும் ஏற்பட்டது. மகாத்மா உபவாசம் நிறுத்திய மறுநாள் அதாவது பிப்ரவரி 18உ மௌலானா முகம்மதலியையும் டாக்டர் கிச்லூவையும் பீஜப்பூர் சிறையிலிருந்து தானியா சிறைக்குக் கொண்டு போனார்கள். அந்த ரயில் பாதையின் மத்தியில் பர்தோலி ரயில்வே ஸ்டேஷனும் இருந்தது. இதை அறிந்த மகாத்மா ரயில்வே நிலையத்தில் அவர்களைப் பார்த்துவிட்டு வரும்படி ஸ்ரீகிருஷ்ண தாஸ் என்பவரை அனுப்பினார். ஸ்ரீ கிருஷ்ண தாஸ் சில ஆரஞ்சுப் பழங்களையும் எடுத்துக் கொண்டு பர்தோலி ரயில் நிலையத்துக்குப் போனார். மௌலானாவைச் சந்தித்துக் காந்திஜி முதல் நாள் தான் உபவாச விரதத்தை முடித்திருந்தபடியால் அவர்களைப் பார்க்க வரவில்லையென்று கூறினார். ஆனால் மௌலானாவுக்கு இது சமாதானம் அளிக்கவில்லை. மகாத்மாவை ரயில் நிலையத்தில் சந்திக்க அவர் எவ்வளவோ ஆவலாயிருந்தார். மகாத்மா வரவில்லையென்று அறிந்ததும் மௌலானா அடைந்த ஏமாற்றத்துக்கு அளவேயில்லை. பர்தோலியை விட்டு ரயில் புறப்படுவதற்குள் எப்படியாவது மகாத்மாவைப் பார்க்க விரும்புவதாக ஸ்ரீ கிருஷ்ணதாஸிடம் மௌலானா கூறினார். ஸ்ரீ கிருஷ்ணதாஸ் ஓடோடியும் சென்று காந்திஜியினிடம் மௌலானாவின் விருப்பத்தைத் தெரிவித்தார். மகாத்மா தம்முடைய பலவீனத்தை மறந்து உடனே புறப்பட்டு ரயில் நிலையத்துக்குச் சென்றார். மகாத்மாவைக் கண்டதும் மௌலானா முகம்மதலியும் டாக்டர் கிச்லூவும் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. காந்திஜி அருகில் வந்ததும் அவரை அவர்கள் ஆலிங்கனம் செய்து கொண்டு கண்ணீர் உகுத்தார்கள்.

தாங்கள் சிறையாளிகள் என்பதையும் போலீஸ் பாதுகாப்பில் இருப்பதையும் ஒரு நிமிஷம் மறந்தே விட்டார்கள். ஆரம்ப உணர்ச்சிப் பெருக்குக் கொஞ்சம் குறைந்ததும் மௌலானா "பாபுஜி! 'சௌரி-சௌராவின் பாதகம்' என்ற கட்டுரையைத் தங்களைத் தவிர இந்த உலகத்திலேயே வேறு யாரும் எழுதியிருக்க முடியாது. அவ்விதம் நம்மிடமுள்ள குறையைச் சங்கோசமின்றித் தயக்கமின்றி ஒப்புக் கொள்ளக் கூடியவர் வேறு யார்? சௌரி-சௌராவுக்குப் பிறகு பர்தோலி இயக்கத்தைத் தாங்கள் தள்ளிப் போட்டது ரொம்ப சரியான காரியம்" என்றார். இரண்டு மூன்று நிமிஷத்துக்குள்ளே ரயில் புறப்பட்டு விட்டது. "மகாத்மா காந்திக்கு ஜே!" என்று திரும்பத் திரும்ப மௌலானா கோஷித்துக் கொண்டே போனார். தலைவரிடம் இத்தகைய அன்பையும் நம்பிக்கையையும் கண்டவர்கள் கண்களிலெல்லாம் கண்ணீர் ததும்பியது.

இந்த நிகழ்ச்சியினால் மகாத்மாவுக்கு ஓரளவு மனச்சாந்தி ஏற்பட்டது. ஆனால் இவ்வாறு மகாத்மா கைக்கொண்ட முறையே சரியானது என்று கருதியவர்கள் மிகச் சிலர்தான். மற்றவர்கள் அதை ஒப்புக்கொள்ளவில்லை. மகாத்மா காந்தி செய்தது பெரிய தவறு என்றும், காரிய சித்தி அடையும் சமயத்தில் மகாத்மா தேசத்தைப் பின்னுக்கு இழுத்து விட்டார் என்றும் சொன்னார்கள். மகாத்மாவுக்கு இந்தியாவின் சுதந்திரத்தைக் காட்டிலும் அஹிம்சா தர்மப் பிரசாரமே பெரிது என்றார்கள். தேசமெங்கும் பரிபூரண அஹிம்சை நிலவும் வரையில் காத்திருப்பது என்றால், இந்த யுகத்தில் இந்தியா சுதந்திரம் அடையப் போவதில்லை என்று சொன்னார்கள்.

இந்த மாதிரி குற்றச்சாட்டுகள் மகாராஷ்டிர தேசத்துப் பத்திரிகைகளிலே அதிகமாக வெளியாயின. டில்லியில் கூடிய அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் காந்திஜியின் பூரண நம்பிக்கைக்கு உகந்த சகாக்களும் அவரைப் பலமாகத் தாக்கினார்கள்.

பர்தோலி வரிகொடா இயக்கத்தையும் இந்தியா முழுவதிலும் தனிச் சட்ட மறுப்பையும் கூட நிறுத்தி வைத்து நிர்மாண வேலையில் கவனம் செலுத்துவது என்று காரியக் கமிட்டியில் தீர்மானம் செய்யப்பட்டது அல்லவா? அதை ஊர்ஜிதம் செய்வதற்காக அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி டில்லியில் பிப்ரவரி 24உ கூடியது. அதற்காக 22-ந் தேதி யன்று மகாத்மா காந்தி டில்லிக்குப் புறப்பட்டார். புறப்படுவதற்கு முன்னால் பர்தோலி மக்களுக்கு ஒரு விண்ணப்பம் விடுத்தார்.



"பொதுஜனச் சட்ட மறுப்பை இப்போது ஆரம்பிக்க முடியாமல் நீடித்துத் தள்ளிப் போட நேர்ந்ததற்கு நீங்கள் பொறுப்பாளிகள் இல்லை. உங்கள் கடமையை நீங்கள் நன்கு நிறைவேற்றி விட்டீர்கள். ஆனால் இந்தியா ஒரு தேசம். எங்கேனும் ஒரு இடத்தில் தவறு நேர்ந்தால் அது தேசம் முழுவதையும் பாதிக்கிறது. ஆகையினாலேயே சௌரி-சௌரா நிகழ்ச்சி காரணமாகப் பர்தோலி இயக்கத்தை நிறுத்த வேண்டியதாயிற்று. இதற்காக நீங்கள் மனச் சோர்வு அடையக் கூடாது. பலாத்கார யுத்தத்தில் தலைவன் படைகளை 'முன்னேறுங்கள்' என்றால் முன்னேற வேண்டும். 'பின் வாங்குங்கள்!' என்றால் பின் வாங்கியே தீர வேண்டும். இது அஹிம்சைப் போருக்கும் பொருந்தும். ஆகையால் கொடுக்க வேண்டிய வரிகளையெல்லாம் காலா காலத்தில் கொடுத்து விடுங்கள். எந்தச் சட்டத்தையும்


மீருந்தீர்கள். நிர்மாணத் திட்டத்தில் முழு உற்சாகம் காட்டி வேலை செய்யுங்கள். நிர்மாண வேலையின் மூலமாகச் சுதந்திரத்தின் சாராம்சத்தை நாம் அடைந்தவர்களாவோம்!''

பர்தோலி வாசிகளுக்கு எவ்வளவோ ஏமாற்றமும் மனத்தாங்கலும் இருந்த போதிலும் அவர்கள் மகாத்மாவின் கட்டளையை நிறைவேற்றினார்கள்.

பர்தோலி வாசிகளைப் போல் இந்தியா முழுவதும் காந்தி மகாத்மாவின் போதனைக்குக் கட்டுப்பட்டு நடந்திருந்தால் எவ்வளவோ நன்றாயிருந்திருக்கும். அதற்கு நாம் கொடுத்து வைக்கவில்லை.

• • •

அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி கூட்டத்துக்காக மகாத்மாஜி டில்லிக்குப் பிப்ரவரி 23-ந்தேதி வந்து சேர்ந்தார். அங்கே அவருக்குப் பல கடிதங்கள் காத்திருந்தன. சிறைக்குள்ளேயிருந்து பல நண்பர்களும் சகாக்களும் கடிதம் எழுதியிருந்தார்கள். டில்லி, லக்னௌ, ஆக்ரா முதலிய ஊர்களின் சிறைகளிலிருந்து கடிதங்கள் வந்திருந்தன. அவையெல்லாம் பர்தோலி தீர்மானத்தைப் பலமாக எதிர்த்துக் கண்டிப்பதாகவே இருந்தன. அந்தச் சமயத்தில், அவ்வளவு தூரம் சர்க்காரை அறைகூவி அழைத்த பிறகு பொது ஜனச் சட்ட மறுப்பு இயக்கத்தை நிறுத்தி விடுவதை யாரும் ஆதரிக்கவில்லை. அ. இ. கா. கமிட்டி கூட்டத்துக்கு நேரில் ஆஜரானவர்களும் அவ்விதமே மகாத்மாவுடன் மாறுபட்டார்கள். சுவாமி சிரத்தானந்தர், 'இந்தியா முழுவதும் அனமதியை எதிர்பார்ப்பது என்பது நடவாத காரியம்; ஆகையால் ஒத்துழையாமை இயக்கத்தைக் கைவிட்டு வேறு முறைகளைப் பார்க்க வேண்டியதுதான்!'' என்றார். வங்காளத்திலிருந்து வந்த பிரதிநிதிகள் மிக்க அதிருப்தி தெரிவித்தார்கள். மகாத்மா நிர்மாணத் திட்டத்தை அளவுக்கு மீறி வற்புறுத்துவதாக அவர்கள் சொல்லி, ''மிட்னபூரில் ஜனங்கள் கதர் கட்டிக் கொள்ளாமலே சர்க்காருடன் போர் நடத்தி யூனியன் வரியை ரத்து செய்வதில் வெற்றி பெற்று விட்டார்கள்'' என்பதை உதாரணமாக எடுத்துக் காட்டினார்கள். இதனாலெல்லாம் மகாத்மா முக்கியமான காங்கிரஸ் தலைவர்கள் கூடத் தமது கொள்கைகளையும் திட்டங்களையும் சரிவர அறிந்து கொள்ளவில்லையென்ற நம்பிக்கையை அடைந்தார். ஆகையால் பர்தோலி சட்டமறுப்பை நிறுத்தி வைத்தது ரொம்பவும் சரியான காரியம் என்ற முடிவுக்கு வந்தார்.



அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி ஹக்கீம் அஜ்மல்கானின் அக்கிராசனத்தின் கீழ் கூடியது. மகாத்மா முதலிலேயே தம்முடைய கருத்தை வெளியிட்டு விட்டார். ''பரிபூரண அஹிம்சையில்லாமல் என்னால் இயக்கத்தை நடத்த முடியாது. உங்களுடைய கருத்து மாறுபட்டிருந்தால் நான் தலைமைப் பதவியிலிருந்து விலகிக்கொள்கிறேன்'' என்றார். இதை அநேகர் விரும்பவில்லை. மகாத்மாவின் தலைமை இல்லாமல் இந்தியாவின் விடுதலை கைகூடாது, எந்த இயக்கத்தையும் வெற்றிகரமாக நடத்த முடியாது என்று அவர்கள் கருதினார்கள். பர்தோலி தீர்மானத்தைப் பலமாக எதிர்த்த சுவாமி சிரத்தானந்தரே இந்தக் கூட்டத்தில் ''மகாத்மாஜி! நீங்கள் இல்லாமல் நாங்கள் என்ன இயக்கம் நடத்த முடியும்? தங்களுடைய தலைமையை இழக்க நாங்கள் தயாராயில்லை!'' என்றார். ஆனால் காந்திஜியின் தலைமையை இழப்பதற்கும் ஒரு சிலர் தயாராயிருந்தார்கள்.

மகாராஷ்டிரத்தைச் சேர்ந்த டாக்டர் மூஞ்சேயும் கல்கத்தாவிலிருந்து வந்த ஸ்ரீ ஜே. என். சென்குப்தாவும் மகாத்மாவின் பேரில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தார்கள். ஒரு கமிட்டி நியமித்து, ஒத்துழையாமை இயக்கம் ஆரம்பித்த பிறகு தேசத்துக்கு நேர்ந்த நிலைமைகளையெல்லாம் விசாரிக்கச் சொல்ல வேண்டும் என்று டாக்டர் மூஞ்சே பிரேரணை செய்தார். ஸ்ரீ அப்யங்கர், மௌலானா ஹஸரத் மோஹனி முதலியவர்கள் தீவிரமாக டாக்டர் மூஞ்சேயை ஆதரித்தார்கள். வேறு சிலர் மகாத்மாவை ஆதரித்துப் பேசலானார்கள். வாதப் பிரதிவாதங்கள் முற்றி மனக் கசப்பு வளரும் போலிருந்தது.


இச்சமயத்தில் ஹக்கீம் அஜ்மல்கான் உடம்பு சரியாயில்லையென்று சொல்லி எழுந்து போனார். மகாத்மாவையே தமக்குப் பதிலாகச் சபையை நடத்தும்படி ஏற்படுத்தி விட்டுப் போனார். மகாத்மா தலைமைப் பீடத்தில் அமர்ந்ததும் நிலைமையில் ஒரு மாறுதல் ஏற்பட்டது. ஏனெனில், தம்மைத் தாக்கிப் பேச விரும்பிய யாரையும் மகாத்மா பேசுவதற்கு அநுமதிக்கவில்லை. தம்மீது குற்றங் கூற விரும்பியவர்கள் தங்களுடைய மனதைத் திறந்து சொல்ல விரும்பியதையெல்லாம் சொல்ல அநுமதித்தார். இதனால் சபையில் ஒரு பெரிய மாறுதல் ஏற்பட்டது. குற்றங் கூறியவர்களுக்கும் கொஞ்ச நேரத்துக்கெல்லாம் அலுத்துப் போய்விட்டது. டாக்டர் மூஞ்சே தங்கள் குற்றச்சாட்டுகள் சம்பந்தமாக மகாத்மாஜி தமது கட்சியை எடுத்துச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். மகாத்மாஜி அதற்கு இணங்கவில்லை. "நான் ஒன்றும் சொல்லப்போவதில்லை. சபையோர் தங்கள் சொந்த அபிப்பிராயத்தை யொட்டித் தீர்மானிக்கட்டும். என்னுடைய திட்டம் பிடிக்காவிட்டால் நான் விலகிக் கொள்ளத் தயார்" என்று மட்டும் சொன்னார். வோட்டுக்கு விடப்பட்டபோது டாக்டர் மூஞ்சேயின் தீர்மானமும் ஸ்ரீ ஜே. எம். சென்குப்தாவின் தீர்மானமும் மிகப் பெரும்பான்மை வாக்குகளால் தோல்வியடைந்தன. பர்தோலி தீர்மானம் மகாத்மாவே ஒப்புக்கொண்ட சிற் சில மாறுதல்களுடன் நிறைவேறியது. இதன் பிரகாரம் பொதுஜனச் சட்டமறுப்பு யோசனை இப்போதைக்குக் கைவிடப்பட்டது. மாகாண காங்கிரஸ் கமிட்டிகளுக்குத் தனிப்பட்ட சட்ட மறுப்புத் தொடங்கும் அதிகாரம் அளிக்கப்பட்டது; அதற்குரிய நிர்மாணத் திட்ட நிபந்தனைகள் முன்னைவிடக் கடுமையாயின.

டில்லியிலிருந்து மகாத்மா காந்தி சபர்மதிக்குத் திரும்பி வந்தார். இனி கதர் உற்பத்தி, தேசியக் கல்வி, தீண்டாமை விலக்கு, ஹிந்து முஸ்லிம் ஒற்றுமை ஆகிய நிர்மாணத் திட்டங்களில் தம்முடைய பூரண கவனத்தையும் செலுத்தத் தீர்மானித்து மகாத்மா அந்த வேலைகளைத் தொடங்குவதற்கு ஆயத்தங்கள் செய்து கொண்டிருந்தார்.

ஆனால் பிரிட்டிஷ் அதிகார வர்க்கத்தார் அதற்கு இடங்கொடுக்க வில்லை. மகாத்மாஜி பிறருடைய பாவங்களுக்கு உண்ணாவிரத பிராயச் சித்தம் செய்து, அஹிம்சா தர்மத்தைப் பாதுகாப்பதற்காகப் பொதுஜனச் சட்ட மறுப்பையும் நிறுத்தி வைத்த பிறகு அவரைக் கைது செய்து விசாரணை நடத்த முன்வந்தனர்.

பிரிட்டிஷ் அதிகாரவர்க்கத்தின் இந்த இழிதகைமையான செயலைக் குறித்து அடுத்த அத்தியாயத்தில் பார்க்கலாம்.

தற்கால ஹாஸ்யம்


"என்னப்பா இது? வேலை கிடைக்க வில்லே என்கிறாயே! அந்தக் கம்பெனியிலே எனக்காக ஆள் எடுக்கிறாங்கள் என்று கேள்விப் பட்டேனே!"
"அட போங்க ஸார்! அங்க ஒண்ணு! கம்பெனி. ... இருக்கிறாங்களாம்!"
"ஏன் அப்பா! உன் கடைக்கு என்ன எல்லாக் கிழமைகளுமா லீவு? உம்?"
"இல்லீங்க, அதெல்லாம் விற்கிற போர்டுங்க!"
"டேய், என்னடா இது? துணி பூராவும் ஒரே பொத்தலாக இருக்கிறது? எந்த லாண்டரிச் சலவை இது?"
"ஸ்டார் லாண்டரிங்க!"
மனைவி:- ஆபீஸிலிருந்து வந்ததும் வராததுமாக ஏன் இப்படி ஸ்நானம் பண்ணுகிறீர்கள்?
போஸ்ட்மாஸ்டர்:- இன்றைக்குத் தபாலாபீஸிலே ஒரு டெட் லெட்டரைத் (DEAD LETTER) தொடும்படி ஆகிவிட்டது அதுதான் ஸ்நானம் பண்ணித் தொலைக்கிறேன்.
"ஏண்டா, பரீட்சையிலே நன்றாக எழுதியிருக்கிறாயா? பாஸ் ஆகுமாடா?"
"நன்றாய்த்தான் அப்பா, எழுதியிருக்கிறேன். ஆனால் பாஸா, பெயிலா என்கிறதை ... பார்த்துத்தான் சொல்லணும்."

மகாத்மா காந்தி ஸ்தூபி நிதி

கோயமுத்தூர் ஜில்லா போர்டு நன்கொடை	ரூ.	1000	0	0
செங்கற்பட்டு ஜில்லா போர்டு நன்கொடை	ரூ.	1000	0	0
வட ஆற்காடு ஜில்லா போர்டு நன்கொடை	ரூ.	501	0	0
திண்டுக்கல் முனிசிபாலிட்டியின் நன்கொடை	ரூ.	501	0	0
ஸ்ரீமதி வரதம்மாள், படா ராபிட் ரோட், தெலுக் ஆன்சன், கோயர் பாரு, மலேயா	ரூ.	311	8	0
வாலாஜாபாத் முனிசிபாலிட்டியின் நன்கொடை		51	0	0
விழுப்புரம் முனிசிபாலிட்டியின் நன்கொடை		50	0	0
ஹெர்குலிஸ் இன்ஷூரன்ஸ் கம்பெனி சிப்பந்திகள், சென்னை		30	8	0
ஸ்ரீமதி கனகம், செவ்வாய்ப் பேட்டை, சேலம்		30	0	0
ஸ்ரீ ஆர். ரத்தினம், மூண்டல், சிலோன்		25	0	0
தொழுந்தூர் ஸ்ரீ சீனிவாசச்சாரியார், தியாகராஜநகரம், சென்னை		12	8	0
ஸ்ரீ அருவி, கலைப் பிரகாம், தேவகோட்டை		11	11	11

ரூ. 10—4—0: பேபி ஹேமமாலினி, செவ்வாய்ப்பேட்டை சேலம்; ரூ. 10—0—0: ஸ்ரீ சங்கரன் நாயர், பி. ஏ. எல். டி., மோரக்காரா கோத்தக்கல், தெற்கு மலபார்.

ரூ. 5—1—0: ஸ்ரீ என். கே. தங்கையச் செட்டியார் தங்கம்மாள்புரம்; ரூ. 5—0—0: ஸ்ரீமான்கள் ர. கு. தலைபெருமாள், பாளையங்கோட்டை; என். ஏ. ராமமூர்த்தி, தர்மபுரி; அங்கீஸ் வித்யாலயம், அமீர்நகரஸ்; பி. ராஜசேகரன், ரேஷன் ஷாப், கும்மிடிப்பூண்டி; ஸ்ரீமதி டி. எஸ். மங்களாம்பாள், மாயவரம்.

ரூ. 3 0—0: கே. குழந்தைவேலு, தென்கீரனூர்; ரூ. 2—11—0: ஸ்ரீ ஆர். பெருமாள், பெரம்பூர் பாரக்ஸ், சென்னை.

2—0—0: ஸ்ரீமான்கள் எஸ். கைலாசநாத அய்யர், சைதாப்பேட்டை; எஸ். வடிவேல் பிள்ளை, சப்-ரிஜிஸ்டிரார், பெருங்களூர்.

ரூ. 1—4—0 ஸ்ரீ கோத்தகிரி தாமோதரன், கும்முடிபூண்டி; ரூ. 1—2—0: ஸ்ரீ ந. வே. சண்முகம், புதுச்சேரி. ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் எம். ராமையாப் பிள்ளை, பெருங்களூர்; எம். லக்ஷ்மணய்யர், பெருங்களூர்; எஸ். ஆர். சின்னசாமிச் செட்டியார், 'கல்கி' ஏஜெண்ட், கோடைக்கானல்; எல். என். கிருஷ்ணமூர்த்தி, என்ஜினியரிங் சூப்பர்வைசர், அனந்தப்பூர்; அ. அண்ணாமலை, கோடை கல்லூரி, காரைக்குடி; ஹரிஜன சேவா சங்கம், போளூர்; டி. என். பாலசுப்பிரமணியம், செய்யாறு; கே. வி. விஜயகோபால், சென்னை; காசி விசுவநாத ஐயர், பெருங்களூர்; ஸ்ரீமதி சுந்தரா கிருஷ்ணமூர்த்தி, அனந்தப்பூர்.

திருச்சி கோட்டை தானியக்கடை சூப்பர்வைசர் ஜனாப் எஸ். ஷைக் அஹமது மூலமாக ரூ. 21-0-0க்கு விவரம்:—

ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் என். சி. கோபாலன்; எஸ். ஷைக் அஹமது; கே. என். ராதாகிருஷ்ணன்; டி. பி. வெங்கட்ராமன்; எஸ். வெங்கடாச்சாரி; ஜி. சுப்ரமணியம்; ஜி. பரமசிவம்; என். கே. சீனிவாசன்; என். ரெங்கநாதன்; எம். ஆர். லக்ஷ்மணராவ்; பி. கே. லக்ஷ்மணராவ்; பி. பாலகிருஷ்ணன் என். பாலகிருஷ்ணன்; எம். பி. சுந்தரம்; எஸ். ஆர். ராஜகோபாலன்; கே. கல்யாணராமன்; ஆர். வீரசாமி ராஜு; டி. ஏ. சுப்பாணி; வி. சீனிவாசன்; பி. அங்கமுத்து; சி. அய்யாக்கண்ணு.

ஸ்ரீ வி. என். குமாரசாமி, யோகாசன பிரசாரக், தண்டையார்பேட்டை, சென்னை மூலமாக ரூ. 58-0-0க்கு விவரம்:—

ரூ. 10—0—0: ஸ்ரீமான்கள் ஏ. வி. குப்புசாமி செட்டியார், மிராசுதார், ராணிப்பேட்டை; கோட்டா ராமய்யச் செட்டி அண்டு சன்ஸ், வாலாஜாபேட்டை.

ரூ. 5 0—0: ஸ்ரீமான்கள் பி. வி. ராஜாராவ், தியாகராயநகர், சென்னை; வி. என். சித்தப்பச் செட்டியார், மளிகை வியாபாரம், வாலாஜாபேட்டை; டி. எஸ். சுப்பிரமணியம், தியாகராயநகர், சென்னை; பூனு ராஜகோபாலன், சங்கீத வித்வான், மயிலாப்பூர், சென்னை.

ரூ. 2—0—0: ஸ்ரீ என். கே. ஸ்ரீனிவாசன், சென்னை. ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் ஏ. முனுசாமி நாயகர், வன்னூரப்பேட்டை; எம். பி. பாலுசாமி அய்யர், வன்னூரப்பேட்டை; வே. கோவிந்த நாயகர், வன்னூரப்பேட்டை; பி. லக்ஷ்மணன், வன்னூரப்பேட்டை; கே. டி. சதானந்தம், வன்னூரப்பேட்டை; இ. ராமசாமி, வன்னூரப்பேட்டை; எம். முனுசாமி, வன்னூரப்பேட்டை; டி. வி. ராஜகோபாலய்யர், சூளை, சென்னை; ஜி. சி. சுப்ரமணியம், வன்னூரப்பேட்டை; பி. ராமசாமி, வன்னூரப்பேட்டை; முனுசாமி, வன்னூரப்பேட்டை; கண்ணன், வன்னூரப்பேட்டை; எம். கோவிந்தசாமி, வன்னூரப்பேட்டை; கொ. கொண்டய்யா, வன்னூரப்பேட்டை; ரா. பிச்சய்யா, வன்னூரப்பேட்டை; வி. சங்கரநாராயணன், மயிலாப்பூர், சென்னை.

ஸ்ரீ ரா. பாலகிருஷ்ணன், போஸ்டல் ஆடிட் ஆபீஸ், சென்னை மூலமாக மேற்படி ஆபீஸ் சிப்பந்திகள் அளித்த நன்கொடை ரூபாய் 92—8—0க்கு விவரம்:—

ரூ. 5—0—0: ஸ்ரீ வி. கிருஷ்ணசாமி, சென்னை. ரூ. 3—0—0: ஸ்ரீமான்கள் ரா. பாலகிருஷ்ணன்; கே. ஆர். கல்யாணராமன்.

ரூ. 2—0—0: ஸ்ரீமான்கள் ஆர். சீனிவாசன்; ஆர். ரங்காச்சாரி; என். பாலசுப்பிரமணியம்; கே. ராமச்சந்திர ராவ்; ஜி. சுப்ரமணியம்; ஜி. பி. என். கிருஷ்ணன்.

ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் டி. என். நாகராஜ்; எஸ். கணேசரத்தினம்; ஆர். ஜெயராமன்; டி. என். ஈஸ்வரன்; ஆர். மகாலிங்கம்; ஆர். சுந்தரராஜன்; முகமத் இனயதுல்லா தெஹ்லவி; கே. என். நாராயணசாமி; டி. நாராயண ராவ்; எல். கே. வெங்கடேஸ்வரன்; இ. கே. ஜோசப்; வி. சுந்தரேசன்; பி. எஸ். சாம்பமூர்த்தி; டி. என். ரங்கநாதன்; கே. எல். என். ராகவன்; கே. ஸ்ரீனிவாசன்; என் ராதாகிருஷ்ணன்; என். சுப்பிரமணியம்; எம். கிருஷ்ணமூர்த்தி; கே. ஆர். நாகராஜன்; என். வீரராகவன்; பி. எஸ். ராஜன்; ஆர். சேஷாத்திரி; டி. சேஷாசலம்; எம். ஏ. ராமசேஷன்; ஜி. என். ராஜன்; பி. ஜெயராமன்; டி. ஏ. பி. வெங்கடாச்சாரி; கே. பி. நாராயணன்; எம். எஸ். அனந்தபத்மநாபன்; எம். ஆர். சீனி

வாசன்; பி. திருநாவுக்கரசு; எஸ். நாகராஜன்; டி. ஏ. ராமகிருஷ்ணன்; கே. குருமூர்த்தி; டி. ஜி. குட்டி; ஏ. கே. மூர்த்தி; கே. எஸ். கணபதி; வி. ஆர். டி. சாரி; வி. லஷ்மீபதி; என். கணபதி; டி. ஆர். பார்த்தசாரதி; எம். ரங்கசாமி; கே. வெங்கடராம அய்யர்; எம். அபூபக்கர்; எஸ். ரங்கராஜுலு; கே. எஸ். சூரிய நாராயணன்; வி சந்தானம்; டி. ஆர். சீனிவாசன்; டி பி எஸ். மணி; எம். பி. ராமமூர்த்தி; எம். ஆர். வைத்தியநாதன்; ஐ. எஸ். அனந்தன்; எம். ஏ சேஷாத்திரி; கே. ஆறுமுகம்; ஆர். கிருஷ்ணன்; பி. வி. என். சாஸ்திரி; கே. வி. சுப்பிரமணியம்; எஸ். தேசிகாச்சாரி; டி. ஆர். சுப்பிரமணிய ராவ்; வி. கே. சீனிவாசன்; என் ராஜாராமன்; கே. மாதவராவ்; பி. எஸ். வெங்கடசுப்பிரமணியம்; பி. எஸ். சுவாமிநாதன்; எம். ஆர். சுவாமிநாதன்; ஆர். நாகராஜ ராவ்.

ரூ. 2—8—0 சில்லறை நன்கொடைகள்.

ஸ்ரீ எம். ஆர். மேகநாதன், பாளையங்கோட்டை மூலமாக ரூ. 620-0-0க்கு விவரம்:

ஜனாப் வி. எஸ். டி. இப்ராஹிம், முனிசிபல் சேர்மன், மேலப்பாளையம்	ரூ.	20	0	0
ஸ்ரீ எம். ஆண்டி, ஜில்லா போர்டு அங்கத்தினர், தூத்துக்குடி	ரூ.	20	0	0

ரூ. 11—0—0: ஸ்ரீ எஸ். கல்யாணசுந்தரம் பிள்ளை, பாப்புலர் சர்வீஸ், திருச்செந்தூர்.

ரூ. 10—0—0: ஸ்ரீமான்கள் செல்லத்துரை நாடார், திருத்தொண்டநல்லூர்; சிதம்பரம் பிள்ளை, குப்பக்குறிச்சி, பனைமடை; வள்ளிநாயகம் பிள்ளை, பாளையங்கோட்டை; பூலைப் ராவுத்தர், கயத்தாறு; என். என். நாடார், செம்மறிக்குளம், மெஞ்ஞானபுரம்; எம். பாலசுப்பிரமணியம் பிள்ளை, வெள்ளாளன்குளம்; என். சோமயாஜுலு, "தென்னைச் செய்தி" ஆசிரியர், திருநெல்வேலி; எஸ். டி. ஆதித்தன், பி. ஏ., பி எல்., ஸ்ரீவைகுண்டம்; எஸ். மீனாட்சிசுந்தரம், திருநெல்வேலி; கே. எஸ். ராஜகோபாலன், முக்கூடல்; ஜி. எஸ். சிவனு பாண்டித் தேவர், பஞ்சாயத்துப் போர்டு தலைவர், கோபாலசமுத்திரம்; எம். எஸ். செல்வராஜன், ஜில்லா போர்டு அங்கத்தினர், ஆறுமுகனேரி; கே. ஷண்முகசுந்தர நாடார், காணியாளன்புதூர்; ஆர். ராமநாதன் சேதுபதி, திருவண்ணாதபுரம்; டி. எஸ். முத்துசாமி ஐயர், பி. ஏ. பி. டி., திருச்செந்தூர்; ஏ. எம். பால், உடன்குடி; டபிள்யூ. பி. பி. முகம்மது இப்ராஹிம், உடன்குடி; ஏ. என். சீனிவாசன் திருச்செந்தூர்; எம். ஏ. சுப்பையா, திருநெல்வேலி; இ. எஸ். வி. ஷண்முகம் பிள்ளை, குலசேகரன்பட்டினம்; ஏ. ராமசாமிப் பிள்ளை, பாளையங்கோட்டை; ஏ பி. சங்கரசாமி ஐயங்கார், பாளையங்கோட்டை; பி. சங்கர சுப்பிரமணிய ஐயர், கங்கைகொண்டான்; என். துரைப்பாண்டிய நாடார் உவரி; டி. கணபதி நாடார், பி ஏ. பி. எல்., ஆலங்குளம்; என். ராமலிங்க நாடார், செட்டிகுளம்; எஸ் ஆர். எஸ். சங்கரசுப்பிரமணியம், திருநெல்வேலி ஜங்ஷன்; பி. எஸ். ரத்தினசாமி நாடார், செம்மறிக்குளம்; ஜி. நாராயணன் சீர்காட்சி; த. வயணபெருமாள் நாடார் செம்மறிக்குளம்; அ. மு. பகவதி மார்த்தாண்டம், குட்டம்; க. அபிராமசுந்தர நாடார், குட்டம்; எஸ். ராமானுஜ நாயக்கர், மீன்துள்ளி, சங்கரன்கோவில்; பி. போத்தி செட்டியார், சந்திரசேரி; டி. ஜி. செல்லசாமி, பரமன்குறிச்சி; சுப்பிரமணியப் பாண்டியன், வள்ளியூர்; எம். எஸ். பிள்ளை, உடன்குடி; ஏ. எஸ். எம். அபூபக்கர், காலன்குடியிருப்பு; ஏ. விஜயராகவலு, ராயல் டாக்கீஸ் மானேஜர், திருநெல்வேலி.

ரூ. 5—0—0: ஸ்ரீமான்கள் எஸ். எம். தங்கராஜ நாடார், மணக்காடு; எம். பொன்னுசாமி நாடார், தேர்குடியிருப்பு; எஸ். ஜெயபாலாதித்தன், திருச்செந்தூர்; டி. ஆர். அருணாசல நாடார், செட்டியாபத்து; ஆர். சுந்தரேச ஆதித்தன், காயாமொழி; ஏ. பி. சற்குண நாடார், வெள்ளாளன்விளை; எம். வி. ராமசாமி சான், சீர்காட்சி; எம். தங்கையா நாடார், வெள்ளாளன்விளை; எம். கே. செல்லையா, வெள்ளாளன்விளை; நாராயண நாடார், தேரியூர்; கமலம் பால், உடன்குடி; பி. ஜே. பீட்டர்ஸ், எல். எம். பி., காலன்குடியிருப்பு; சோபினி பீட்டர்ஸ், காலன்குடியிருப்பு; ஜானிபாய் பீட்டர்ஸ், காலன்குடியிருப்பு; ஏ. செல்வராஜ் பால், உடன்குடி; வசந்தரா பால், உடன்குடி; பால் வின்சன்ட் தினகரன், உடன்குடி; பி. ச. அமிர்தலிங்கம், செட்டியாபத்து; பென்டன் பீட்டர்ஸ், காலன்குடியிருப்பு; ஸ்ரீமதி டி. ஜான் அம்மாள், காலன்குடியிருப்பு.

ரூ. 4—0—0: ஸ்ரீ அ. பாண்டிய நாடார், செம்மறிக்குளம். ரூ. 3—0—0: ஸ்ரீ எஸ். சுப்பிரமணியப் பிள்ளை, திருச்செந்தூர்.

ரூ. 2—0—0: ஸ்ரீமான்கள் சொக்கலிங்க மூப்பனார், கல்லூர்; பேச்சிமுத்துத் தேவர், கல்லூர்; எம். ஷண்முகம் பிள்ளை, ஜில்லா போர்டு மெம்பர், கோவில்பட்டி; பி. சங்கரகுற்றாலம், வீரவநல்லூர்; ஜி. ஞானியார், ராஜபதி; பி. வெகப்ரமணிய நாடார், வடலிவிளை; டி. எஸ் சிதம்பரநாதன், திருநெல்வேலி; வி. கிருஷ்ணன், திருநெல்வேலி; டி. எஸ். சபாபதி, பேட்டை; ஆர். சுப்பையா, திருநெல்வேலி; ஏ. சொக்கலிங்கம், திருநெல்வேலி; கே. பி. சோமசுந்தர நாடார், கச்சனாவிளை; என். லட்சுமணன், தண்டபத்து; வி. சங்கரசுப்பா நாயுடு, பாளையங்கோட்டை; இ. கே. எம். ஷேக் தாவூத், உடன்குடி; வி. மந்திரம், உடன்குடி; ஆறுமுகப் பாண்டியன், உடன்குடி; தேவ இரக்கம், உடன்குடி; ஞா. செல்லத்துரை, பண்டாரஞ்செட்டிவிளை; ஆறுமுக நயினார், சித்தன்விளை; பி. லஷ்மணக் கோனார், கிறிஸ்தியாநகரம்; என். ரத்தினசாமி, சந்தையடியூர்; செல்லத்துரை வள்ளிக்குட்டி, சித்தன்விளை

ரூ. 1—0—0: ஸ்ரீமதிகள் கே. ஏ. சுப்புலஷ்மி, திருச்செந்தூர்; கே. கே. ராமலஷ்மி, திருச்செந்தூர்; ஸ்ரீமான்கள் எஸ். முத்தையாப் பிள்ளை, திருச்செந்தூர்; எஸ். அழகப்பாப் பிள்ளை, திருச்செந்தூர்; எம். முத்துக்கண்ணுத் தேவர், திருச்செந்தூர்; டி. ஏ. குப்புசாமிப் பட்டர், திருச்செந்தூர்; ரா. அருணா, பாளையங்கோட்டை; ஜெயபாண்டியன், பாளையங்கோட்டை; எட்மண்ட் தேவதாஸ், பாளையங்கோட்டை; சுவாமிநாதன், பாளையங்கோட்டை; ச. பொன் பாண்டியன், பாளையங்கோட்டை; பி. எஸ். ரத்தினம், தண்டுப்பத்து; க. பெரியசாமி நாடார், தண்டுப்பத்து; பெ. சுந்தரசாமி, மெஞ்ஞானபுரம்; வி. நடேசன், மெஞ்ஞானபுரம்; எஸ். ராஜரத்தினம் பீற்றர், பாளையங்கோட்டை; தேவதாஸ் சாந்தி, பிரகாசபுரம்; தெய்வசிகாமணி, பாளையங்கோட்டை; என். கே. தங்கவேல், பாளையங்கோட்டை; எஸ். மாடக்கண், பாளையங்கோட்டை; டி. ஜெயராஜ் ரத்தினம், அனந்தபுரம்; ஆர். சேவுகசாமி, பாளையங்கோட்டை; பி. எக்ஸ். சங்கரசாமி, பாளையங்கோட்டை; ராஜதுரை, திருநெல்வேலி; ஜி. பெரியசாமி, மெஞ்ஞானபுரம்; ஏ. டி. நடேசன், பாளையங்கோட்டை.

கோத்தகிரி போர்டு ஹைஸ்கூல் ஆசிரியர் பி. என். பக்ஷேஸ்வரன் மூலமாக ரூ. 17-8-0க்கு விவரம் :—

ரூ. 10—0—0 : ஸ்ரீமதி ஏ. ராஜம், புஷ்பகிரி, திருச்சூர்.

ரூ. 4—8 0 : கோத்தகிரி அரசியலார் ஹரிஜன முன்னேற்ற ஹாஸ்டல் மாணவர்கள் ;

ரூ. 1—0— 0 : ஸ்ரீமான்கள் ஏ. கருணாம்பரன், கோத்தகிரி ; எம். ஆர். ராஜன், கோத்தகிரி ; என். செல்வராஜ், கோத்தகிரி.

திருநெல்வேலி ஜில்லாத் தொண்டர்கள் மூலமாக வரும் ரூ. 233—0— 0க்கு விவரம் :—

ஸ்ரீ சங்கரச்சாரி, ராஜா பிரஸ், ஸ்ரீவைகுண்டம் 25 0 0

ரூ. 10—0—0 : ஸ்ரீமான்கள் மகாராஜ மார்த்தாண்டம், குட்டம் ; டாக்டர் வெங்கடசுப்ர மணியம், ஸ்ரீவைகுண்டம்; வேலாயுதம், பண்ணையார், சேரகுளம்; காசிநாதப் பிள்ளை, சேர்மன், ஸ்ரீவைகுண்டம; வி. ஏ. சுந்தரராஜ அய்யங்கார், விட்டலபுரம்; வி. என். நாராயணய்யங்கார், விட்டலபுரம்.

ரூ. 6-0-0 ஸ்ரீ குமாரு பிள்ளை, திசையன்விளை.

ரூ. 5—0—0: ஸ்ரீமான்கள் ஏ. முத்துசாமியா பிள்ளை, விட்டலபுரம்; பரமசிவன் செட்டியார், விட்டலபுரம்.

ரூ. 4—0—0 : ஸ்ரீமான்கள் தாமோதரம், திசையன்விளை; சுந்தரபாண்டி மார்த்தாண்டம், திசையன்விளை.

ரூ. 3—0—0 : ஸ்ரீ ஆறுமுகப்பாண்டி மார்த்தாண்டம், குட்டம்.

ரூ. 2—0—0 : ஸ்ரீமான்கள் எஸ். கணபதிக் கோனார், விட்டலபுரம் ; கே. என். ராமசுவாமியாப் பிள்ளை, விட்டலபுரம்; க. பொன்னம்பலம்பிள்ளை, விட்டலபுரம்; வி நாயப்பன் ஆசாரி, விட்டலபுரம் ; கே. சீனிவாசய்யர், விட்டலபுரம் ; சங்கர பட்டர், விட்டலபுரம் ; சி. சுப்பையர், விட்டலபுரம் ; ரூ. கணபதியாப் பிள்ளை, விட்டலபுரம் ; மா. செ. இசக்கியாப் பிள்ளை; விட்டலபுரம் ; க. செல்லம் பிள்ளை, விட்டலபுரம் ; எஸ். டி. ஸ்ரீநிவாசன், அனவரதநல்லூர் ; ஆறுமுக முதலியார், தம்பிக்குறிச்சி ; சின்னக்கச்சன யாதவர், செல்வமருதூர் ; ஜெகதீச மார்த்தாண்டம், குப்பம் ; டி. சந்திர மார்த்தாண்டம், குப்பம் ; அமிர்தகுண பாண்டி நாடார், குப்பம்; எஸ். வி. என். சந்திர மார்த்தாண்டம், குப்பம் ; சூரிய நாராயணன், திருச்செந்தூர்; பொன்னம்பலம் பிள்ளை, அம்பா சமுத்திரம் ; மா. சண்முகத்து நாடார், திருநெல்வேலி ; ஆறுமுக நாடார், குட்டம்.

ரூ. 1—0—0 : ஸ்ரீமான்கள் பி. அங்கையா ஆசாரி, விட்டலபுரம் ; க. ராமசாமிக் கோனார், விட்டலபுரம் ; க. அருணாசலம் செட்டியார், விட்டலபுரம் ; ரா. சண்முகம் ஆச்சாரி, விட்டலபுரம் ; ரா. நடராஜ ஆச்சாரி, விட்டலபுரம் ; ரா. காசிநாதன், அனவரதநல்லூர் ; சூரிய சந்திர பாண்டி நாடார், அனவரதநல்லூர்; வி. ராமசாமி நாடார், குட்டம் ; ஆறுமுக நாடார், குட்டம்; முத்தையா நாடார், குட்டம் ; குலசேகர பாண்டி நாடார், குட்டம் ; சண்முகவேல் பாண்டி நாடார், குட்டம் ; சிதம்பரநாதன், குட்டம் ; வெள்ளைப்பூ நாடார், குட்டம் ; முத்துப்பூ நாடார், குட்டம் ; பெருங் கொண்டவாப் பள்ளி, குட்டம் ; நவமிராசன், குட்டம் ; சந்திரன், குட்டம் ; பெரியசாமி சேர்வை, குட்டம் ; சண்முக சுந்தர பாண்டியன், முதுமொத்தம்புளி ; ராமசுந்தர பாண்டியன், முதுமொத்தம்புளி ; ராமச் பாண்டியன், முதுமொத்தம்புளி ; சுந்தரசாமி நாடார், முதுமொத்தம்புளி; முத்து பாண்டியன் முதுமொத்தம்புளி ; நாராயணன் நாடார், முதுமொத்தம்புளி ; அய்யாத்துரை நாடார், முதுமொத்தம்புளி ; ராமசாமி ஆதித்தன், முதுமொத்தம்புளி ; அருணாசல நாடார், முதுமொத்தம்புளி ; ராசையா நாடார், முதுமொத்தம்புளி ; தங்க பாண்டியன், முதுமொத்தம்புளி; பெ. ராமசாமி நாடார், முதுமொத்தம்புளி ; கோவில் நாடார், முதுமொத்தம்புளி ; பாண்டிய நாடார், முதுமொத்தம்புளி ; துரைசாமி நாடார், முதுமொத்தம்புளி ; ஜெயபாண்டிய நாடார், முதுமொத்தம்புளி ; பால்துரை நாடார், முதுமொத்தம்புளி ; ஆறுமுக நயினார், முதுமொத்தம்புளி ; சங்கர நாராயணன், திருச்செந்தூர் ; கே. சுப்பையர், திருச்செந்தூர் ; அசிஹரய்யர், திருச்செந்தூர்; சங்கரராஜ அய்யர், திருச்செந்தூர் ; குத்தாலிங்கம் செட்டியார், திருச்செந்தூர் ; நயினார் ஆச்சாரி, திருச்செந்தூர் ; மாணிக்கம் பிள்ளை, திருச்செந்தூர் ; வீரபாகு, பண்ணையார், திருச்செந்தூர் ; அழகிய சுந்தரம் பிள்ளை, திருச்செந்தூர் ; ச. ரத்தினம், திருச்செந்தூர் ; என். முத்தையாப் பிள்ளை திருச்செந்தூர் ; கிருஷ்ணன், திருச்செந்தூர் ; நடராஜன், திருச்செந்தூர் ; கணபதியாப் பிள்ளை, திருச்செந்தூர் ; கே. வி. கடலை, திருச்செந்தூர் ; தங்கபழம் நாடார், முதுமொத்தம்புளி ; ராமசாமி நாடார், முதுமொத்தம்புளி; ராமசாமி, திருச்செந்தூர்; மய்யாதன், திருச்செந்தூர் ; பரமசிவம், திருச்செந்தூர்; நாராயண நாடார், செட்டிகுளம்; செல்வினாக்கு நாடார், செட்டிகுளம் ; குமாரவேலாயுத நாடார், செட்டிகுளம் ; திரவிய நாடார், செட்டிகுளம் ; ஜான் மோசஸ், செட்டிகுளம் ; டி. எம். தாமஸ், செட்டிகுளம் ; ஷாக், திருநெல்வேலி ; ஆறுமுகக் கோனார், திருநெல்வேலி ; பி. என். ராகவன், திருநெல்வேலி ; சனைசங்கரைக் கோனார், திருநெல்வேலி; நம்பி, திருநெல்வேலி ; நயினா ரூபனார், திருநெல்வேலி ; நயினார், திருநெல்வேலி; ஆறுமுக முதலியார், அம்பாசமுத்திரம் ; அருணாசலம் செட்டியார், கடையநல்லூர் ; குமர குருபர நாடார், கோவில்பூத்து ; சங்கரன் செட்டியார், மூலக்கரைப்பட்டி ; சண்பகக் கொத்தனார், காயத்தாறு ; சுப்பிரமணியப் பாண்டியன், வள்ளியூர் ; கமலா தேவி, மூளைக்குறிச்சிப்பட்டி ; மகாராஜன், பணகுடி ; முகம்மது இப்ராஹிம், காயல்.

ஸ்ரீ எஸ். வி. சுவாமிநாதன், பயோனியர் கம்பெனி, புது டில்லி மூலமாக ரூ. 10-0-0க்கு விவரம் :—

ரூ. 5—0—0 : ஹவில்தார், ஸ்ரீ எம். அலிபா.

ரூ. 3—0—0 : ஸ்ரீ என். கே. பி. பி. சுந்தரம்.

ரூ. 1—0—0 : ஸ்ரீமான்கள் வி. எஸ். சுப்பிரமணியம்; பொன்னுசாமி.

ஸ்ரீ என். ச. சுப்பிரமணியம், பள்ளிப்பாளையம், ஈரோடு மூலமாக ரூ. 22க்கு விவரம் :—

ரூ. 2—0—0 : ஸ்ரீ என். ச. மணி; ரூ. 1-0-0 : ஸ்ரீமான்கள் பி. வெங்கடராமன்; எஸ். திருமலை; ஆர். கே. ஆர். சுப்பிரமணியம்; ஏ. பி. கே. நாராயணசாமிச் செட்டியார்; கே. ஆர். ராமசாமி; எம். ஆர். பி. அங்கப்பச் செட்டியார்; ஏ. லட்சுமணப் பண்டாரம்; வி. ஆறுமுக முதலியார், ஏ. பி. கே. குருநாதச் செட்டியார்; என். குப்புசாமிக் கவுண்டர்; என். கே. ராமலிங்க முதலியார்; ஏ. பி. கே. மாரிச் செட்டியார்; டி. எம். அன்னம்மாள்; எம். முருகேசன்; கே. அருணாசலம்; பி. என். என். பெருமாள்சாமி; எம். ஆர். லக்ஷ்மணன், எலந்தக்குட்டைக் கிராமம்; பி. என். சுப்பிரமணியம்; பி. காளியண்ணன்; கே. பி. லிங்கப்பச் செட்டி.



ஏற்காத கதை*

ரவீந்திரநாத் டாகூர்

[தமிழாக்கம்: க. நா. குமாரஸ்வாமி]

நாங்கள் வெகு மும்முரமாகத் தொடுத்த அரசியல் போர் கடைசியில் லங்கா காண்டம் போலவே முடிந்தது.


வங்கப் பிரிவினையின் போர் அரங்கில் புரட்சிக் கூத்து ஆரம்பமாகியது. இந்த நாடகத்தின் ஐந்தாம் அங்கமான கடைசிக் காட்சி, ஆலிபுரச் சிறைக் கூடத்திலிருந்து அந்தமான் தீவு வரைக்கும் பரவியது. வெகு தூரம் உள்ள இந்த இடத்தை அடைய எங்களுக்கு வேண்டிய ஆற்றல் இருந்தது. என்னுடைய போதாத காலம், இக்கரையிலேயே என்னை நிறுத்திக் கொண்டார்கள். கூட உழைத்தவர்களுக்குத் தூக்கு மரத்தில் தொங்கும் அளவு 'பிரமோஷன்' (உயர்வு) கிடைத்தது. அவர்களுக்கு என் மனப் பூர்வமான வணக்கத்தைச் சமர்ப்பித்து விட்டு, மேற்குப் பிரதேசத்தைச் சேர்ந்த நகர் ஒன்றில் 'ஹோமியோபதி' வைத்தியத் தொழிலை மேற்கொண்டேன்.

அச்சமயம் என் தகப்பனார் ஜீவித்திருந்தார். வங்காள மாகாணத்தின் ஒரு ஜில்லா கோர்ட்டில் சர்க்கார் தரப்பு நியாயவாதி அவர். ராய்பஹதூர் பட்டம் தாங்கியவர். எனது அரசியல் கொள்கைக்காக அவர் தம் வீட்டில் எனக்கு இடமில்லை யென்று சொல்லிவிட்டார். வீட்டின் தொடர்பு அற்றுப் போயிற்று; உள்ளத்தின் தொடர்பும் விண்டதா என்ற விஷயம் கடவுள் தாம் அறிவார். தாராளமாக வழங்கும் அவர் ஜேபிக்கும் எனக்குமுள்ள சம்பந்தங்கூட முறிந்தது. எனக்குத் தப்பித் தவறி ஒரு 'மணி யார்ட'ரோ — இல்லை, ஒரு 'செக்'கோ அவரிடமிருந்து வந்ததில்லை. இந்த நெருக்கடியில் அருமை அன்னையும் மறைந்தாள்.

எனக்கு அத்தை முறையில் ஒருத்தி இருந்தாள். அவள் என் சுவார்ஜிதமா, அல்லது பிதார்ஜிதமா என்ற சந்தேகம் சிலருக்கு உண்டு. ஏனென்றால், நான் மேற்கே செல்வதன் முன்னர் அவளைப் பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது. எனக்கு எந்த உறவில் அவள் அத்தை என்ற கேள்வி ஒரு புறம் இருக்கட்டும்; தந்தையும் சுற்றத்தவரும் என்னை வெறுத்த ஒரு தசையில் அவளுடைய ஆதரவை நான் பெற்றிராவிடில் பெருந்துயரில் அல்லவோ ஆழ்ந்திருப்பேன்?

அத்தை மேற்குப் பிரதேசத்திலேயே பிறந்து வளர்ந்தவள்; அங்கேயே வாழ்க்கைப்பட்டவள்; அங்கேயே கணவனையும் இழந்தாள். சொத்தும் அதே இடத்தில் தான். அவள் அதைப் பாதுகாத்து ஒரு விதமாகக் காலத்தை ஓட்டி வந்தாள். அவளுக்கு என்னைத் தவிர இன்னொரு கால் கட்டு — சிறுமி அமியா. அவள் என் அத்தையின் பெண்ணல்ல. அமியாவின் தாய், அத்தைக்கு வேண்டிய இளம் வேலைக்காரி; தாழ்ந்த ஜாதியைச் சேர்ந்தவள். தனக்குப் பிள்ளைப் பேறு இல்லாமற் போனாலும் தன் கணவனுக்குப் பிறந்தவள் என்ற உயர்ந்த நோக்குடன் அத்தை, தன் வீட்டிலேயே வைத்துக் கொண்டு அமியாவை வளர்த்து வந்தாள். அந்தப் பெண்ணும்

* ''நாமஞ்ஜூர் கல்ப'' என்ற வங்காளிக் கதை இதன் மூலம்.



அவளைத் தன்னுடைய சொந்தத் தாயாகவே பாவித்து நடந்து வந்தான்.

அத்தை தன் வீட்டையும் தன்னுடைய உள்ளத்தையும் எனக்குத் திறந்து விட்டாள். அப்பா காலமான பின்பு, உயிலில் ஆஸ்தியை எனக்கே வஞ்சனையின்றி எழுதி வைத்திருப்பது வெளிச்சமானபோது, என் அன்பிற்குரிய அத்தை சந்தோஷம், துக்கம் இரண்டும் பொங்கக் கண்ணீர் வடித்தாள். இனிமேல் என்னுடைய பளு அவளை விட்டது; ஆனால் பாசம்மட்டும் விடவில்லை.

“அப்பனே, நீ எங்கே வேண்டுமானாலும் இரு; என் ஆசீர்வாதம் உனக்கு என்றைக்கும் உண்டு” என்றாள்.

“அது தெரியும், அத்தை! நீயும் என்றைக்கும் என்னிடமே இருக்க வேண்டும்; நீ இல்லாமற் போனால் என்னால் எதுவுமே ஆகாது. சிறையிலிருந்து விடுபட்டதும் அன்னையைக் காண நான் கொடுத்து வைத்திருக்கவில்லை. அதற்குப் பதிலாக பகவான் உன்னைக் காட்டினார்!” என்றேன். இத்தனை நாள் குடியும் குடித்தனமுமாய் இருந்த ஊரிலிருந்து அவள் பெயர்ந்து என்னுடன் கல்கத்தாவுக்கு வந்துவிட்டாள். “மேல் திசையிலிருந்து உன் அன்பென்னும் கங்கை நீரைக் கீழ் நாட்டிற்குக் கொண்டு வந்து விட்டேனே; நான் அல்லவோ கலியுக பகீரதன், அத்தை!” என்றேன் ஆனந்தத்தால்.

அத்தை சிரித்தாள்; கண்ணில் ஊறிய நீரையும் துடைத்துக் கொண்டாள். ஒரு விஷயம் அவளைத் தயங்கச் செய்தது; ‘இந்த அம்பியாவுக்கு ஏதாவது ஒரு வழி செய்துவிட்டு நிச்சிந்தையாக யாத்திரைக்குப் புறப்படலாமென்று இருந்தேன். ஆனால் நீ வேறு திசையில் என்னைத் திருப்பி விட்டாயே!” என்றாள். “அத்தை! என்னைத் தான் நகரும் க்ஷேத்திரமாக நினைத்துக் கொள்ளேன். எங்கிருந்து வழிபட்டால் என்ன, தெய்வம் அந்த இடத்திற்குத் தானே வந்து பூஜையைப் பெற்றுக் கொள்ளும். புண்ணியாத்மா நீ!” என்றேன்.

இன்னொரு யோசனை அவள் மனத்தில் வேலை செய்யத் தொடங்கியது. அந்தமான் தீவை நோக்கியே இயற்கையாக ஒரு தள்ளல் எனக்கிருப்பதை அவள் எவ்வாறோ அறிந்து, என்னைக் கட்டிப் பிடிக்காமற்போனால் என்றைக்காவது ஒரு நாள் பறந்து போய்விடுவேனோ என்று அஞ்சினாள். அதற்காக சீக்கிரமாக ஒரு மெல்லியலாளை என் காலில் பிணைத்து விட்டு யாத்திரை செய்யப் புறப்பட வேண்டும் — இதுவே அவள் கோரிக்கை. என்னை ஒரு கட்டுக்குள் கிடத்தினால் ஒழிய அவள் என்னிட மிருந்து விடுதலை பெற வழியே இல்லை.

இந்த இடத்தில்தான் அவள் தவறாக என்னைமதிப்பிட்டாள். என் ஜாதகத்தில், களத்திரகாரன் புலியின் கையில்வேண்டுமானாலும்விடட்டும், நான் சகித்துக் கொள்வேன். ஆனால் ஒருபோதும் நான் மண முடிச்சு போடும் பிரும்மாவின் கையில் சிக்கிக் கொள்ளவே மாட்டேன். பெண்ணைப் பெற்றவர்கள் இரண்டு கையிலும் வரதக்ஷிணை நிறையத் தர முன்வந்தனர். ஏராளமான சொத்துக்கு உடையவன் நான் என்று உலகம் அறியும். மாமனாரை ஒட்டாண்டியாக்கி ஐம்பதினாயிரத்துடன் ஒரு பெண்ணை மேளதாளத்துடன் மணப்பேனென்று எல்லோரும் நினைத்தார்கள். அதுதான் நான் செய்யவில்லை. பிற்காலத்தில் என் சரிதையை எழுதுவோர், சுதேசத்தின் பொருட்டு ஐம்பதினாயிரம் இல்லை, ஐந்து லக்ஷம்கூட நான் தியாகம் செய்யக் கூடியவன் என்ற விஷயத்தைச் சற்று கவனத்தில் வைக்க வேண்டும். ஆனால் இந்த விவாகப் பேச்சு ‘நைவ நைவச.’ முப்பாட்டனாரான பீஷ்மருடன் என்னுடைய உன்னத குணமும் இந்த இடத்தில்தான் ஒத்துப் போகிறது.

கடைசி வரை அத்தை தன் நம்பிக்கையை இழக்கவில்லை. அதே சமயம் அரசியல் ஆகாயத்தில் விசையாக ஒரு காற்று எழுந்தது-

முன்பே கூறியுள்ளேன்; இந்த நாடகத்தில் தலைமை நடிகர்கள் நாங்களல்ல. 'புட் லைட்' (கீழ் வெளிச்சம் படாத) விழாத அரங்கின் பின்புறம் நடுநடுவே தோன்றி மறைபவர்கள் நாங்கள். முக்கியமான வேஷத்தைப் பூணுபவர்கள் என்ற நினைவில் அத்தை அதைரியப்படவில்லை. எனக்காகக் காளிகாட் காளியிடம் ஏதாவது பிரார்த்தனை செய்துகொள்ள வேண்டுமென்று இருந்தாள். சிலகாலம் செந்நிலைப் புலிகள் என் ஜோலிக்கு வராமல் இருக்கவே பிரார்த்தனை செய்து கொள்ளும் விஷயத்தை அடியோடு அவளும் மறந்தாள். அவள் தவறியது இந்த இடத்தில்தான்.

பூஜா தினம். கடைத் தெருவில் மறியல் நடந்து கொண்டிருந்தது; எல்லோரும் கதர் அணிய வேண்டுமென்று தொண்டர்கள் வேண்டினர். நான் வேடிக்கை பார்க்கச் சென்றேன். வெளியே புறப்படும்போது என் தேக தாபம் 98 டிக்ரிக்கும் கீழேயே இருந்தது. நாடியும் படபடவென்று அடித்துக் கொள்ளவில்லை. அன்று விபரீதம் விளையப்போவதன் அறிகுறி எதுவுமே தென்படவில்லை. ஒருவேளை என் ஜாதகத்தில் ஏதாவது கெட்ட தசை இருந்திருக்கலாம். கதர்ப் பிரசாரம் செய்து கொண்டிருந்த ஒரு மாதை போலீஸ் சார்ஜெண்ட் முரட்டுத்தனமாகத் தீண்டினான். நொடிப் பொழுதில் நான் பூண்டிருந்த அஹிம்சை, ஒத்துழையாமை விரதங்கள் யாவும் பறந்தோடின. என்ன செய்தேனோ எனக்கே தெரியாது. தாணாவுக்கு என்னைத் தள்ளிக் கொண்டு போனார்கள். 'லாக்கப்'பில் நான் கண்ட சுகம் போதாதென்று இருண்ட சிறையினுள்ளும் புகவேண்டியதாயிற்று. அத்தையைப் பார்த்து, "கொஞ்ச நாள் உன் இஷ்டம்போல் யாத்திரை செய்துவிட்டு வா; என்னைப் பார்த்துக் கொள்ள ஆட்களுக்கு இங்கே என்ன குறைவு? அமியாவை ஹாஸ்டலில் சேர்த்துவிடு; வீட்டைக் கவனித்துக் கொள்ளத் தகுந்த மனிதர்கள் இருக்கிறார்கள். ஹாய்யாக க்ஷேத்திராடனம் பண்ணிவிட்டு வா, அத்தை!" என்றேன். சிறையைச் சிறையாகவே எண்ணிக் கொண்டேன். அங்கே யாருக்கும் எந்தவிதமான தொந்தரவும் நான் கொடுக்கவில்லை. சுகமோ, மரியாதையோ, மனிதத்தன்மையோ, நல்லுணவோ எதையும் காண முடியாதென்று உணர்ந்து சமர்த்தாக நடந்துகொண்டேன். கடுமையான நியமங்களுக்கும் கடுமையாகவே அடங்கிச் சென்றேன். குறை ஏதாவது இருப்பினும் அதிகாரிகளிடம் முறையிட்டுக் கொள்வதை வெட்கக்கேடான விஷயமென்றே கருதினேன்.

காலஅளவிற்கு முன்னரே நான் சிறையினின்று மீண்டேன். என்னை வரவேற்க வெளியே பலத்த ஆரவாரம். ரோஜா மாலைகளின் கீழ் நான் திணறினேன். துன்பத்தை அநுபவிக்க வேண்டியது ஒருவன். அவனுடைய தியாகங்கள் கடைந்தெடுத்த இன்னமுதைக் களிக்கப் பலபேர். இந்தக் கௌரவமும் நிலைத்ததல்ல. இதற்குள் திரை விழுகிறது; விளக்கு அவிந்து அரங்கமும் வெறிச்சென்றாகிறது......அப்புறம்? மறதி! ஆனால் எறும்பு வரை உறுத்திய இருப்புத் தளையின் வடு எங்கேயாவது மறையுமா?

நான் வெளியே வந்தபோது அத்தை தீர்த்தயாத்திரையில் இருந்தாள். அவளுடைய விலாசம் தெரியவில்லை. இதற்குள் பூஜாவும் நெருங்கியது. ஒரு நாள் சாயங்காலம் பத்திரிகை ஆசிரியரான நண்பர் ஒருவர் என்னிடம் வந்து, "பூஜா மலருக்குக் கதையோ கட்டுரையோ ஏதாவது எழுதித்தர வேண்டும்" என்று வற்புறுத்திக் கேட்டார். "கவிதை வேண்டாமா?" என்றேன்.



"அதை யார் கேட்டது? வாழ்க்கை நினைவானாலும் நன்றாக இருக்கும்."

"ஒரு மலரில் எப்படி முழுவதையும் எழுத முடியும்?"

"தொடர்ந்து பிரசுரிப்போம்" என்றார்.

சதியான பார்வதியின் உடலை விஷ்ணுவின் ஸுதர்சன சக்ரம் துண்டு துண்டாக்கி நாலா திசையும் வீசி எறிந்தது. என் வரலாறும் ஆசிரியரின் கத்திரியினால் பல கண்டங்களாக வெளிப்படுவதை நான் விரும்பவில்லை. "என் சரித்திரம் முழு

வதையும் ஒரே சமயத்தில் வெளியிட வேண்டும்" என்றேன்.

"உன் வாழ்வில் சேர்ந்த ஒரு முக்கிய அம்சத்தை வர்ணித்து எழுதேன், நற் சமயம்!" என்றார்.

"எந்தமாதிரி அம்சம், சொல்லு?"

"கடுமையான அநுபவம் ஏதாவது ஒன்று!"

"எழுதி என்ன லாபம்?"

"என், உலகம் தெரிந்து கொள்ளத்தான்!"

"அப்படியா, எழுதப் பார்க்கிறேன்."

"நம்பியிருக்கிறேன் உன்னையே! பார்க்கலாமென்று சொல்லக்கூடாது. நீ அநுபவித்த கொடிய துயரத்தைப் பற்றி எழுதேன்."

"ஆகட்டும்."

"ஒரு பக்கத்திற்கு உனக்கு...!"

"முதலில் நான் எழுதி முடித்தாகட்டும்; அப்புறம் எவ்வளவு என்பதைப் பேசிக் கொள்வோம்."

"வேறு எந்தப் பத்திரிகைக்காவது கொடுத்துவிடப் போகிறாய்! அப்படி யாராவது அதிகமாகத் தருவதாயிருந்தால் நான் மேற்கொண்டு தருகிறேன்" என்றார் அவர்.

"சரி, சரி" என்றேன்.

கடைசியில் போகும்போது அவர் "எப்பேர்ப்பட்ட எழுத்தாளனாக இருக்கட்டும், உன் 'ஸ்டைல்' (நடை) காலில் அவர்களது ரசனையைக் கட்டி அடிக்க வேண்டும்" என்று என்னைத் தூக்கி வைக்க மறக்கவில்லை.

இது பீடிகை; இனி கூறப்போவது என்னுடைய கடுமையான அநுபவத்தின் வரலாறு:

சிறைவாசத்தைத் தாங்குவதற்குச் சில கடுமையான பயிற்சிகள் முன்னதாகவே ஒத்திகை செய்திருக்கிறேன். நான் தாணுவில் அடைபட்டபோது வாங்கிக் கொண்ட உதை, குத்துக்களால் பிராணன் போய் விடவில்லை. என் உடல் சமாளித்தது. வெளியேறியதும் வீட்டில் யாருடைய சச்ருஷையையும் நான் ஏற்றுக் கொள்ளவில்லை. உடலில் கண்டிருந்த வீக்கம் தானாகவே வடிந்துவிட்டது. அத்தை மட்டும் வேதனைப்பட்டாள். "அத்தை, அன்பிலேதான் விடுதலை. சேவை, சச்ருஷைகளால் பந்தமே ஒழிய வேறில்லை. ஒரு சரீரத்தின்மேல் மற்றொரு சரீரம் செலுத்தும் ஆதிக்கத்தைத்தான் 'டயார்க்கி' அதாவது, இரட்டை ஆட்சி என்கிறோம். இந்த முறையை எதிர்ப்பதல்லவோ எங்கள் ஒத்துழையாமை இயக்கம்?" என்றேன். அவள் பெருமூச்செறிந்து, "சரி, அப்பனே! உன்னை நான் தொந்தரவு செய்யவில்லை" என்றாள். முட்டாள், இத்துடன் ஆபத்து ஒழிந்ததென்று எண்ணினேனே!

அன்பினால் செய்யும் பணி மறைவிலிருந்தே வெளிப்படுமென்ற விஷயத்தை அடியோடு மறந்துவிட்டேன். எதையும் திரணமாகத் துறந்த சிவபிரான் கையிலே ஓடு ஏந்தி, ஊரில் பிச்சை எடுத்துத் தரித்திரம் கொண்டாடும்போது, திருமகள் ஒரு சமயம் அந்த மண்டையோட்டிற்குப் பட்டு உறை தைத்துப் போட்டாள். அதன் ஓர் இழையைக் கொண்டு நக்ஷத்திர லோகங்களையே விலைக்கு வாங்கி விடலாம். இந்த விஷயம் அந்தச் சுடலை ஆண்டிக்குத் தெரியாது. இட்ட அன்னத்தைப் புசிப்பதோடு கைலைவாசி திருப்தி அடைந்துவிடுவான். அன்னபூரணி நேர்த்தியாக ஆக்கியதல்லவா? தேவாரஜனுண இத்தின் அதில் ஒரு



கவனம்பெற சக்தியை வசம் செய்து கொள்ளப் பார்த்தான். இந்தச் சமாசாரமெல்லாம் தெரியுமா, அந்தப் பித்தனுக்கு? என் இருப்பும் இது போலவே ஆயிற்று. உண்ணும் போதும் உடுக்கும் போதும் உறங்கும் போதும் பணியாற்றும் அத்தையின் கரங்கள் அதிசயமான மாயங்களை இயற்றும். தேசாபிமானமேருவிக் கோனாக இருந்த எனக்கு இவை தெரியவில்லை. தபஸ் கலையவில்லை யென்று உறுதியாக நினைத்திருந்தேன். சிறைக்குச் சென்றதுமே இந்த மருள் விலகியது. அத்தைக்கும் அதிகாரவர்க்கத்திற்கும் இடையே எவ்வளவோ வித்தியாசம் இருப்பதை உணர்ந்தேன். எல்லாம் ஒன்றென்னும் அத்வைதக் கொள்கைப்படி இதற்குச் சமாதானம் கூற என்னால் ஆகவில்லை. ‘நிஸ்த்ரைகுண்யோ பவார்ஜுன’ (முக்குணத்தையும் மீறி நில்) என்ற கீதையின் சுலோகத்தை மனசுக்குள்ளேயே சொல்லிக் கொண்டேன். அந்தோ தவசியே! அத்தை உனக்கு அன்புடன் அளித்த உணவு இதயத்தைத் தாண்டி உன் ஜீரணப் பையிலும் இறங்கி ஆரோக்கியம் தந்ததை நீ உணரவில்லைபோலும்!

ஜெயிலுக்கு வந்த பின்பு வயிற்றுக் கோளாறு ஏற்பட்டது. இடிவிழுந்தால் கூடத் தாங்கும் என் தேகம் கலக்குறைவால் இளைத்து வந்தது. சிறைக்காவலன் ஒருவிதமாக விட்டாலும், நோய் கொடி மட்டும் என்னை உருக்குலைக்காமல் இருக்கவில்லை. எப்போது பார்த்தாலும் தலையிடி; ஜீரணம் ஆவதில்லை; மாலை நேரங்களில் சுருசுருவென்று ஜுரம் காயும். சிறைவாசல் வரைக்கும் எனக்கு மாலை இட்டு, கரகோஷம் செய்து கொண்டு விட்ட குதூகலமெல்லாம் எங்கோ மங்கிமறைந்தன. சிறையினுள் நுழைந்ததும் கஷ்டம் என்பது இன்னதென்பதை நேரிடையாகக் கண்டேன்.



எனக்கு எப்போதாவது உடம்பு கலக்கமான சமயங்களில் அமியாவை அனுப்ப அத்தை விரும்புவாள். நன்றாக இராதென்று நான்தான் தடுத்துவிடுவேன். “அமியாவும் அதையெல்லாம் கற்றுக் கொள்ள வேண்டுமோ இல்லையோ, உனக்காக இல்லாவிட்டாலும்!” என்பாள் அத்தை. “நர்ஸ் வேலை தெரிந்து கொள்ள வேண்டுமானால் அவளை ஆஸ்பத்திரிக்கு அனுப்பேன்!” என்பேன் நான்.

இன்று படுத்தபடியே நினைத்துக் கொள்கிறேன்; ‘நான்தான் தடுத்தேன்; அவள் அதற்குக் கட்டுப்பட்டு நிற்க வேண்டுமோ, என்ன? குருவின் கட்டளையை மீறாத என்ன அடக்கமப்பா, இந்தக் கலிகாலத்துப் பெண்களுக்கு! சாதாரணமாகவே ஒரு தேசாபிமானியின் கண்ணுக்கு ஸம்ஸாரத்தில் நடக்கும் சின்ன விஷயங்கள் யாவும் படுவதில்லை. இப்போது நோயுற்றுப் படுக்கையில் விழுந்து கிடக்கும் சமயம் இவை என் கண்ணில் படாமல் போகவில்லை. இதற்கு முன்னெல்லாம் நான் காட்டிய வழியை அமியா பின்பற்றியதாகத் தெரியவில்லை. இன்று ஒத்துழையாமை இயக்கத்தின் விசையில் அவள் காலேஜ் படிப்பையும் துறந்துவிட்டாள். பெரிய கூட்டத்தின் மத்தியில் நின்று பேசுவதற்கு அவள் அஞ்சுவதே யில்லை. அநாதை ஆசிரமத்தின் சார்பில் முன்பின் அறியாதவர்கள் வீடுதோறும் சந்தா வசூலிக்க உண்டி குலுக்கிச் செல்கிறாள். இன்னொரு விஷயத்தை நான் கவனிக்காமல் போகவில்லை. துணைக்கு அவளோடு எப்போதும் திரியும் அகிலன் அவளுடைய வைராக்கியத்தை மெச்சி, ‘தேவி’ யென்று அவளை அழைக்கலானான். அவளது பிறந்த நாளன்றுகூடத் தனக்குள்ள பக்தியைக் காட்டப் பல சந்தங்களைப் புனைந்து புகழ்மாலை யொன்றைப் பொன்னெழுத்துக்களில் அவன் அச்சிட்டு வழங்கினான்.

(அடுத்த இதழில் முடியும்)

நினைத்ததும் நடந்ததும்

வி. எஸ். ஆர்



ஜயராமன் பிரதி தினமும் பெருமாள் கோவில் தோட்டத்துக்குப் போய்ப் புஷ்பம் பறித்துக்கொண்டு வந்தான். அந்தப் புஷ்பம் மறுநாள் காலை அவன் தாயார் பூஜை செய்வதற்கு உபயோகப்பட்டது. அவனுக்கு விவரம் தெரிந்ததிலிருந்து இப்படியே அவன் தினமும் புஷ்பங்கள் பறித்துச் செல்வது வழக்கம். அந்தத் தோட்டத்தின் ஒரு மூலையிலிருக்கும் இரண்டு முல்லைக் கொடிகளிலிருந்து புஷ்பங்களைப் பறித்துக்கொள்ள தோட்டக்காரன் அவனுக்கு அனுமதி அளித்திருந்தான்.

அன்று ஐயராமன் புஷ்பம் எடுக்கப் போகும்போது கொஞ்சம் நேரமாகி விட்டது. மெதுவாக இருள் சூழ்ந்து கொண்டிருந்தது. கொடி அருகில் சென்று பார்த்தபொழுது ஒரு பூவைக்கூடக் காணோம். தூக்கிவாரிப் போட்டது அவனுக்கு. "தோட்டக்காரா! இங்கே யார் வந்தது?" என்று கேட்டான். "யாரோ ஒரு பெண் கொஞ்ச நேரம் முன்னாடி வந்தாங்க. நம்ம வீட்டுப் பெண்தான் என்று நினைச்சேன்" என்றான். 'இந்தமாதிரி யாரும் இது வரையில் பூ எடுத்துக் கொண்டு போனதில்லையே! பூஜைக்கு என்ன செய்கிறது" என்ற மனக்குறையுடன், கொஞ்சம் அரளிப் பூக்களைப் பறித்துக்கொண்டு திரும்பி வந்தான்.

திரும்பி வரும்போது அவன் வீட்டு வாசலில் கமலா நின்று கொண்டிருந்தாள். அவள் தன் தலையில் முல்லை அரும்பைச் சரமாகத் தொடுத்துச் சூடிக் கொண்டிருந்தாள். அந்தப் பெண், அவன் இருந்த வீட்டில் இன்னொரு 'போர்ஷ'னுக்குப் புதிதாகக் குடி வந்திருந்த தாலுகா ஆபீஸ் குமாஸ்தா நாகநாத ஐயரின் புதல்வி. கமலா தலையிலிருந்த பூ, தனக்குப் பூ கிடைக்காததை ஐயராமனுக்கு ஞாபகப் படுத்தியது.

மறுநாள், கொஞ்சம் சீக்கிரமாகவே ஐயராமன் தோட்டத்துக்குப் போனான். அங்கே கமலா பூப் பறித்துக்கொண்டு நிற்பதைப் பார்க்க ஆச்சரியமும் கோபமும் அடைந்தான். "தோட்டக்காரா!" என்று ஆத்திரத்துடன் கூப்பிட்டான். "இந்தாங்கோ! எனக்கு எல்லாவற்றையும் அவன் இப்பொழுதுதான் சொன்னான். பூஜைக்கு இல்லாதபடி நான் தெரியாத்தனமாக நேற்றைக்குப் பறித்து விட்டேன். நான் உங்களுக்காகத்தான் பறித்துக் கொண்டிருக்கிறேன். நீங்கள் ஸ்வாமிக்குச் சாத்தின பூவை எனக்குக் கொடுங்கோ போதும்; நான் வைத்துக் கொள்கிறேன்!" என்றாள்.

சட்டென்று ஐயராமனின் கோபம் மாறியது. "எல்லாப் பூவையும் பறித்துக் கொண்டதினால்தான் கோபம் வந்தது. நானும் கொஞ்சம் பறித்துக்

கொள்கிறேன்: நீயும் கொஞ்சம் பறித்துக்கொள்!" என்று கூறினான். கமலாவின் முகத்தைப் பார்த்த பிறகு, வேறு விதமாக யார்தான் சொல்ல முடியும்?

"வேண்டாம்; நீங்கள் தினம் வந்து எதற்காகக் கஷ்டப்படணும்? நானே பறித்துக்கொண்டு வந்து பாட்டியிடம் கொடுத்துவிடுகிறேன்" என்றாள் கமலா.

"இல்லை, இல்லை. பூஜைக்கு வேண்டியதை நானே எடுத்துக்கொண்டு போவதுதான் விசேஷம்" என்றான் ஜயராமன்.

அதிலிருந்து ஜயராமன் மாலை நேரத்தில்—அதாவது கமலா வருகிற வேளையில்—பூப் பறிக்க வருவான். இருவரும் ஒருவர் முகத்தை ஒருவர் ஜாடைமாடையாகப் பார்த்துக் கொள்வார்கள். சில சமயம் வேண்டுமென்றே ஜயராமன் வேகமாகப் பூவைப் பறிப்பான். ஒரு நிமிஷத்தில் அவன் பூக்குடலை நிரம்பிவிடும். கமலா தன் கையிலுள்ள நாலைந்து பூவைப் பார்த்து முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு நிற்கும் போது, ஜயராமன் தம் பூவில் பாதியைப் பிரித்து அவளிடம் கொடுப்பான். இதற்குப் பிறகு வேடிக்கையாகவும் விளையாட்டாகவும் இருவரும் பேசிக்கொள்வார்கள். தோட்டக்காரன் இல்லாதபோது அவர்கள்பேச்சு இன்னும் ஸ்வாரஸ்யமாயிருப்பது வழக்கம்.

திடீரென்று ஒருநாள் தோட்டக்காரன் ஜயராமனைப் பார்த்து, "சாமி! இனிமேல் யாரும் பூப் பறிக்கக் கூடாது என்று புது எஜமான் உத்தரவு போட்டிருக்காங்க!" என்று சொல்லிவிட்டான். அதிலிருந்து ஜயராமனும் கமலாவும் தோட்டத்தில் சந்தித்துக் கொள்வது நின்றது.

ஜயராமன் இருந்த வீட்டில் நான்கு குடித்தனங்கள் இருந்தன. சிறு வயதில் தகப்பனாரை இழந்த ஜயராமன் தாயாருடன் அங்கே வசித்து வந்தான். அவனுக்கு பாங்க் ஒன்றில் குமாஸ்தா வேலை. ஆபீசுக்குப் போகும்போதும் வரும் போதும் கடைக்கண்ணால் கமலாவைக் கவனிப்பான். பின்னர் சாயங்காலம் ஆபீசிலிருந்து வந்ததும் மொட்டை மாடியில் சளிசேரைப் போட்டுக் கொண்டு உட்கார்ந்துவிடுவான். கமலா மாடியின் இன்னொரு மூலையில் மற்ற ஸ்திரீகளுடன் உட்கார்ந்து அவர்களுடன் பேசுவதுபோல் பாசாங்கு செய்தபோதிலும் அவள் கவனம் எல்லாம் ஜயராமனிடம் லயித்திருக்கும்.



ஒருநாள் ஜயராமன் ஆபீசிலிருந்து வந்தபோது, வீட்டில் நிசப்தமாக இருப்பதைப் பார்த்துத் திகைத்துப் போனான். அந்த வீட்டில் நிசப்தம் ஏற்படுவது சமுத்திரத்தில் அலை ஓய்வதுபோல் தான். "சுவாமி புறப்பட்டு வருகிறது. வேடிக்கை பார்க்கப் போயிருக்கா!" என்றாள் கமலா. "நீ போகவில்லையா?" என்றான் ஜயராமன். "அம்மா அதோ என்னைக் கூப்பிட வரா!" என்றாள் கமலா.

வெளியில் எட்டிப் பார்த்துவிட்டு "இங்கே பார்! சீக்கிரமாக உங்க அம்மாகிட்டச் சொல்லி என் ஜாதகத்தைக் கேட்கச் சொல்லு. நான் என் ஜாதகத்தை எடுத்துத் தயாராக என் அம்மாகிட்டக் கொடுத்து வைச்சிருக்கேன்!" என்று சொல்லிவிட்டு, கமலாவின் தாயார் உள்ளே வருவதற்குள் தன் அறைக்கு வந்துவிட்டான் ஜயராமன்.

*　　　*　　　*

இப்பொழுதெல்லாம் ஜயராமன் ஆபீசிலிருந்து ஐந்தரை மணிக்குத் திரும்புவதில்லை. வெகு நேரம் வாசல் தூண் அருகில் நின்று வாசலையே உற்றுப் பார்த்து கமலாவுக்கும் அலுத்துவிட்டது. "வாசலில் நின்று வெறுமனே வேடிக்கை பார்க்கக் கூடாது" என்று அவள் தகப்பனார் கண்டித்த பிறகுதான் வெளியில் வருவதை நிறுத்தினாள். மொட்டை மாடியில் நாற்காலியைப் போட்டுக் கொண்டு, காற்று வாங்குவதையும் ஜயராமன் நிறுத்திவிட்டான். ஆபீசுக்குப் போகும் போதும் வரும்போதும் முகத்தில் ஆர்வமும் மகிழ்ச்சியும் தோன்ற ஜயராமன் கமலாவைப் பார்ப்பதில்லை. அவன் முகத்தில் மலர்ச்சியைக் காணவில்லை.

இதெல்லாம் கமலாவுக்குத் திகைப்பையளித்தது. திடீரென்று ஜயராமன் மாறவேண்டிய காரணம் என்ன என்பதை அறியாமல் கலங்கினாள். ஒருநாள், அவள் ஜயராமனின் தாயாரிடம் பேசிக் கொண்டிருக்கும்போது "இன்னும் உங்கள் பிள்ளை ஆபீசிலிருந்து



வரவில்லை போலிருக்கிறது" என்று கேட்டு வைத்தாள். "ஆமாம்; தினம் எட்டு மணிக்குத்தான் வருவான். அவன் ஆபீஸ் மானேஜருக்கு நிர்மலா என்று ஒரு பெண் இருக்கிறதாம். அது இந்த வருஷம் பரீட்சைக்குப் போகிறதாம். அவளுக்குத் தினமும் பாடம் சொல்லிக் கொடுக்கிறான். அந்தப் பெண்ணைப் பற்றித்தான் என்ன உயர்த்தியாய்ச் சொல்லிக் கொள்கிறான் என்கிறாய்? அவள் நல்ல புத்திசாலியாம். 'இவ்வளவு நல்ல புத்திசாலிக்கு எதற்காக ட்யூஷன் சொல்லிக் கொடுக்க வேணுமோ தெரியவில்லை. மனசிலே எதையோ வைத்துக் கொண்டு பாடம் சொல்லிக் கொடுக்கச் சொல்லியிருக்கிறார்' என்கிறான். ஏதோ பிராப்தம்போல் நடக்கிறது. பாங்கில் கொடுக்கிற 80 ரூபாயில் நாங்கள் காலம் தள்ள முடியுமா? ஏதோ மேற்கொண்டு வந்த வரையில் எங்களுக்கும் சௌகரியந்தானே?" என்றாள் பாட்டி. தூக்கி வாரிப் போட்டது கமலாவுக்கு. ஜயராமனின் திடீர் மாறுதலின் காரணத்தை ஊகித்துக் கொண்டு விட்டாள்.

கமலா ஏமாற்றத்தாலும் அவமானத்தாலும் மனம் புழுங்கிப் போனாள். பிறகு மனதைக் கல்லாக்கிக் கொண்டாள். ஜயராமன் எதிரில்கூட அவள் வருவதே கிடையாது. அப்படித் தப்பித் தவறி அவன் தன்னைப் பார்க்க நேர்ந்தால், அவனைத் தான் அலட்சியமாக மதிப்பதாகக் காட்டிக் கொண்டாள் கமலா.

ஒரு நாள் மாலை என்றுமில்லாத வண்ணம் ஜயராமன் ஐந்தரை மணிக்கே வீட்டுக்கு வந்து விட்டான். "அம்மா! நிர்மலாவின் மாமா கல்யாணம் இந்த ஊரில் நடக்கிறது. அவர்கள் எல்லோரும் அதற்குப் போயிருக்கிறார்கள். நாலு நாளாகும் வருவதற்கு!" என்றான். வீட்டிற்கு வந்த சிறிது நேரம் கழித்துத்தான் கமலா வீட்டிலில்லை என்பதைக் கவனித்தான். என்ன காரணத்தினாலோ அவனுக்கு இருப்பே கொள்ளவில்லை. கமலா எங்கே போயிருக்கிறாள் என்பதைத் தெரிந்து கொள்ள ஆவல் கொண்டான். யாரைக் கேட்பது? எப்படித் தெரிந்து கொள்வது?

வேலைக்காரி அமுதம் மாடியைக் கூட்டுவதற்காக வந்தாள். அவள்தான் கமலாவின் வீட்டிலும் வேலை செய்து கொண்டிருந்தாள். மனதைத் திடப்படுத்திக் கொண்டு, "அமுதம்! கமலாவை எங்கே கண்ணில் காணோம்?" என்று மெதுவாகக் கேட்டான். "ரெவின்யூ இன்ஸ்பெக்டர் ஐயா வீட்டுக்குப் போயிருக்கும்" என்றாள் அமுதம். "ரெவின்யூ இன்ஸ்பெக்டர் ஐயாவா?" என்று விசாரித்தான் ஜயராமன்.

"ஆமாம். நம்ம ஐயாவோடே ஆபீசில் இருக்கிறாராம். இப்பவெல்லாம்தான் அரை நாழி இந்தப் பெண் வீட்டிலே தங்குகிறது இல்லையே. அந்த ஐயாவுக்கு ஒரு தங்கச்சி இருக்கு. பேரு லச்சிமியாம். அதோடு ஓயாமல் வம்பு பேசிக்கிட்டே இருக்கு. அந்த ரெவின்யூ இன்ஸ்பெக்டர் ஐயாவுக்குக்கூட சிறு வயசுதானாம். இன்னும் கல்யாணமாகலையாம். கமலா புத்திசாலிப் பொண்ணு. எதையாச்சும் மனசிலே வச்சுக்கிட்டுத்தான் அங்கே போகுதோ என்னமோ, யார் கண்டா?" என்று கூறிச் சிரித்தாள் அமுதம்.

'சொரேர்' என்றது ஜயராமனுக்கு. என்ன காரணத்தினாலோ கமலாமீது ஆத்திரம் பொங்கி வந்தது. "கமலா இஷ்டப்பட்டவர்களைக் கல்யாணம் செய்து கொள்ளட்டும். நமக்கென்ன வந்தது?" என்று எவ்வளவோ சமாதானம் செய்து கொண்டும் அவன் மனம் நிம்மதி யடையவில்லை.

சட்டென்று அவனுக்கு ஒரு சந்தேகம் உண்டாயிற்று. நிர்மலாவைப் பற்றி

அம்மா கமலாவிடம் ஏதாவது சொல்லி யிருப்பாளோ? சொன்னால் சொல்லட்டுமே! "என்னைக் கல்யாணம் செய்து கொள்ளப் படிப்பிலும் அழகிலும் அந்தஸ்திலும் சிறந்த ஒரு பெண் தயாராய் இருக்கிறாள் என்பது கமலாவுக்கு நன்றாகத் தெரியட்டும்" என்று எண்ணிச் சந்தோஷப் பட்டான்.

மாலை ஐந்து மணியிருக்கும். ஜயராமன் ஸில்க் ஜிப்பாவை எடுத்துப் போட்டுக் கொண்டான். சரிகை அங்கவஸ்திரத்தை அணிந்து கொண்டான். 'சீட்டி' அடித்துக் கொண்டு வெளியில் புறப்பட்டான். கூடத்தில் கமலா தன்னை அலங்கரித்துக் கொண்டு கண்ணாடி எதிரில் அழகு பார்த்துக்கொண்டு நின்றாள். அவள் எல்லையற்ற மகிழ்ச்சியைப் பார்த்ததும் அவனுக்கு ஆத்திரம் வந்தது. அவளை அவமானப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது.

"கமலா! போய் வருகிறேன். நிர்மலாவின் மாமாவுக்குக் கல்யாணம். சங்கீதக் கச்சேரிக்கு வரச் சொல்லி நிர்மலா என் பிராணனை வாங்கி விட்டாள். நான் வரா விட்டால் அவள் கச்சேரியையே கேட்க மாட்டாளாம்!" என்றான் முகத்தில் தற்பெருமையும் குறும்புப் புன்னகையும் தவழ. "பேஷாகப் போங்களேன்! நான் வேண்டாமென்று சொல்லப் போகிறேன்? ஆனால் நானும் சினிமா பார்க்க வெளியில் கிளம்பிக் கொண்டிருக்கிறேன். ரெவின்யூ இன்ஸ்பெக்டர், தம் தங்கை லக்ஷ்மியையும் என்னையும் சினிமாவுக்கு அழைத்துக் கொண்டு போகிறார். இதோ சற்று நேரத்தில் கார் வந்துவிடும்" என்று கூறினாள் கமலா பெருமையுடன்.

அவ்வளவுதான்; அவன் மூளை ஸ்தம்பித்து விட்டது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. தாமாகவே அவன் கால்கள் நடந்து சென்றன. ஆனந்தமாகப் பக்கத்தில் கமலாவை உட்கார வைத்துக் கொண்டு சினிமா பார்க்கும் ரெவின்யூ இன்ஸ்பெக்டரின் உருவம் ஜயராமனின் மனக்கண்முன் நின்றது. அவன்மீது சொல்லொணாத பொறாமையும் ஆத்திரமும் ஏற்பட்டன. சங்கீதக் கச்சேரி, நிர்மலா — எல்லாவற்றையும் அவன் மறந்து விட்டான்.

விவரிக்க இயலாத ஏக்கம் அவனை வாட்டியது. 'கணகண' வென்ற பெருமாள் கோவிலின் மணி அவன் கவனத்தைக் கவர்ந்தது. சட்டென்று ஒரு யோசனை தோன்றியது. தோட்டத்துப் பக்கம் போய் முல்லைக்கொடி அருகில் சிறிது நேரம் உட்கார்ந்திருக்க அவன் மனம் விரும்பியது. அவனும் கமலாவும் ஒருவரை யொருவர் சந்தித்து அன்பை வளர்த்த இடத்தில் சிறிது நேரமாவது



இருந்தால்தான் அவன் வருத்தம் மறையும் என்று எண்ணினான்.

மூன்று மாதமாக அவன் அந்த இடத்துக்கு வரவேயில்லை. அந்த இடத்தைப் பார்த்ததும் புதைந்து கிடந்த பல நினைவுகள் அவன் மனதில் தோன்றின. ஆழ்ந்த பெருமூச்சு விட்ட வண்ணம் செடிகளை அணுகியபோது, ஒரு உருவம் சட்டென்று எழுந்திருப்பதைக் கண்டு திகைத்தான். "யார் அது?" என்றான் ஜயராமன். மறு நிமிஷம் "கமலாவா! நீயா? ஏன் இங்கே வந்தாய் இந்த இருட்டில்?" என்று கேட்டான். அவன் குரல் கம்மியது.

"ரெவின்யூ இன்ஸ்பெக்டருடன் சினிமா பார்க்கப் போவதாகச் சொன்னாயே!" என்று மேலும் திகைப்புடன் கேட்டான் ஜயராமன்.

"நான் சொன்னது பொய். இந்த ஊரில் ரெவின்யூ இன்ஸ்பெக்டர் என்று யாருமே

இல்லை" என்று விம்மிக் கொண்டே கூறினாள் கமலா.

சட்டென்று கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, "நான்தான் பைத்தியக்காரி; இங்கே வந்தேன். உங்கள் பாங்க் மானேஜர் பெண் நிர்மலாவின் வீட்டில் சங்கீதக் கச்சேரி நடக்கிறதே. நீங்கள் போகவில்லையா?" என்றாள்.

"நான் சொன்னதும் முழுப் பொய்தான், கமலா! எங்கள் பாங்க் மானேஜர் ஒரு கிறிஸ்தவர். அவருக்குப் பெண்ணே இல்லை. என் ஜாதகத்தை உன் அம்மாவை விட்டுக் கேட்கச் சொல்லிப் பல தடவை சொல்லியும், நீ அது விஷயமாகச் சுறுசுறுப்பைக் காண்பிக்கவில்லை. வேறு சிலர் வந்து என்னை மாப்பிள்ளையாக்கிக் கொள்ள முயற்சி செய்கிறார்கள் என்பது உன் காதில் விழுந்தால்தான் நீ நம் கல்யாணத்தைத் துரிதப் படுத்துவாய் என்று அம்மாவிடம் நிர்மலாவைப்பற்றிப் பொய் சொல்லச் சொன்னேன். உன்னை நான் மறப்பேனா?......, ஒரு நிமிஷத்தில் என்னைப் பைத்தியமாக அடித்து விட்டாய். என் மனதிலே இருந்த வேதனை இந்தத் தோட்டத்துக்கு வந்து சிறிது நேரமாவது இருந்தால்தான் தீரும் என்று நினைத்தேன். உனக்கும் அப்படித் தான் தோன்றி இங்கே வந்தாயா?"

"இன்றைக்கு மட்டுமா இங்கே வருகிறேன்?"

"பின்னே?"

"மூன்று மாதமாக ஒவ்வொரு தினமும் சாயங்காலம் இந்தக் கொடிகளின் அருகில் உட்கார்ந்திருக்கிறேன். நாம் பேசிய ஒவ்வொரு வார்த்தையையும் ஞாபகப்படுத்திக் கொள்கிறேன். மனதிற்கு எவ்வளவோ ஆறுதலாயிருக்கிறது. இங்கே வந்ததும் வேதனையெல்லாம் மாயமாய் மறைந்து போகிறது."

"கமலா!" என்று கூறிய ஜயராமன் கொடியிலிருந்த மலர்களைப் பறித்து அவள் தலையில் சூட்டினான்.

திரும்பி வந்தது!

ஸோமாஸ்

"பக்கத்து வீட்டுக்குப் புதிதாகக் குடித்தனம் வந்திருக்கிறானே, அவன் சுத்த மோசம். ஒரு ரூபாய் அவசரமாக வேண்டியிருந்தது. அவனைக் கேட்டேன். முகத்தில் அடித்தாற்போல இல்லையென்று சொல்லி விட்டான், அற்பப் பயல்!" என்று சுந்தரம் தன் நண்பனிடம் சொல்லிக் கொண்டிருந்தான். இந்த மாதிரிப் பேச்சு சுந்தரத்துக்கு ஒன்றும் புதிதல்ல. ஆனால் அவன் வரையில் ஒரு காலணா அவனிடமிருந்து பெயராது.

எதிர்த்த வீட்டு ஏகாம்பரம் எப்படியோ சுந்தரத்தினிட மிருந்து பத்து ரூபாய் கடனை வாங்கிவிட்டான்.

சுந்தரம் ஏகாம்பரத்தினிடம் கெஞ்சினான்; கொஞ்சினான்; அபிநயம் பிடித்தான்; நயமாகக் கேட்டான்; பயமாகக் கேட்டான், ஊஹூம், ஒன்றும் பயன்படவில்லை. ஏகாம்பரம் ஒன்றுக்கும் அசைந்து கொடுக்கிற வழியாயில்லை. அன்றைக்கு இருநூற்று ஓராவது தடவையாக, சுந்தரம் ஏகாம்பரத்தினிடம் கொடுத்த கடனைக் கேட்கப் போனான்.



அவன் ஏகாம்பரத்தின் வீட்டுக்குள் போனதும் யாரும் கண்ணில் தென்படவில்லை. ஆனால் அங்கு மேஜைமீதிருந்த ஒரு வெண்கலக் கூஜா பளீரென்று சுந்தரத்தின் கண்ணில் தென்பட்டது.

ஆம், இப்பொழுது வெண்கலம் விற்கும் விலையில் இந்தக் கூஜா நிச்சயம் பத்து ரூபாய்க்கு மேல் இருக்கும். இதை ஏன் எடுத்துக் கொண்டு போகக் கூடாது?

இந்த எண்ணம் சுந்தரத்தின் மனத்தில் ஓடியதுதான் தாமதம். மறு விநாடி அந்த வெண்கலக் கூஜாவுடன் சுந்தரம் வீட்டுக்கு வந்து சேர்ந்தான்.

"எதற்காக இந்த கூஜாவை எடுத்து வந்தீர்கள்?" என்றாள் சுந்தரத்தின் மனைவி.

சுந்தரம் விஷயத்தைச் சொன்னான். அவள் 'குப்' பென்று சிரித்தாள்.

"இது நம்ம வீட்டுக் கூஜாதான். போன வாரம் உங்கள் சிநேகிதரின் அம்மா ஊருக்குப் போவதற்காக இரவல் வாங்கிக்கொண்டு போனான். இன்று காலையில்தான் அந்த அம்மாள் ஊரிலிருந்து வந்தாள். இன்னும் கொஞ்ச நேரத்துக்கெல்லாம் மரியாதையோடு அந்த அம்மாளே கூஜாவைக்கொண்டு வந்து கொடுத்திருப்பாள். என்னத்துக்காக நீங்கள் இந்த அசட்டுக் காரியத்தைப் பண்ணினீர்கள்?" என்று அவள் கேட்டதும் சுந்தரத்தின் முகம் தானாகவே கவிழ்ந்தது.



தெருவோடு சென்று கொண்டிருந்த கல்யாணராமன் கண்ணில் அந்த வீட்டில் போடப்பட்டிருந்த பெரிய பந்தல் பட்டது. அந்தப் பந்தலில் தோரணம், வாழை மரம் முதலியவைகளெல்லாம் அலங்காரமாகக் கட்டப்பட்டிருப்பதிலிருந்து அந்த வீட்டில் யாருக்கோ கல்யாணம் போலிருக்கிறது என்று நினைத்தான். ஆனால் அந்த வீட்டு வாசற்படியில் வைக்கப்பட்டிருந்த பெரிய விளம்பரப் பலகை அந்த வீட்டைத் தாண்டி அலக்ஷியமாகப் போகும்படி அவனை விட்டுவிடவில்லை. ஆர்வத்தோடு அந்தப் பலகையில் கொட்டை எழுத்துக்களில் என்ன எழுதியிருக்கிறதென்பதைப் படித்தான்:

சுயம்வரம்

களவாடியூர் பெரிய பண்ணை மிராசுதார் பிரம்மஸ்ரீ மகிஷவாகனமய்யரின் கனிஷ்ட குமாரத்தி செளபாக்கியவதி திரிலோக சுந்தரி இன்று மாலை நாலு மணியிலிருந்து ஐந்து மணிக்குள் சுயம்வர முறையில் தக்க கணவனை மணக்க உத்தேசித்திருக்கிறாள். இருபத்தைந்து வயதிலிருந்து முப்பது வயதிற்குட்பட்ட கௌண்டின்ய கோத்திரமில்லாத பிரஹசரண வகுப்பைச் சேர்ந்த பிராமண வாலிபர்கள் அனைவரும் ஆஜராகலாம்.

இப்படிக்கு,

தங்கள் வரவை எதிர்நோக்கும்,

பெரிய பண்ணை மிராசு
மகிஷவாகனம் அய்யர்.

இதைப் பார்த்ததும் கல்யாணராமனுக்குச் சிறிது ஆசை ஏற்பட்டது. அவசரம் அவசரமாக வீட்டிற்குப் போய் ஆடம்பரமாக ஆடை அலங்காரம் செய்து கொண்டு திரும்பினான். அவனை ஒரு பிரமுகர் சந்தனம், வெற்றிலை பாக்குக் கொடுத்து உபசாரமாக உள்ளே அழைத்துப் போனார். வீட்டிற்குள் முற்றத்தில் அழகாக ஒரு மண்டபம் சிங்காரிக்கப்பட்டிருந்தது. ஏற்கெனவே சுமார் முப்பது நாற்பது வாலிபர்கள் அங்கே ஆஜராகி இருந்தனர். பள்ளிக்கூடத்தில் பரீக்ஷை அறையைப் போல முற்றத்தைச் சுற்றிச் சாய்வு மேஜையும் நாற்காலிகளும் போடப்பட்டிருந்தன. ஒவ்வொரு மேஜையின் மீதும் ஒரு மைக் கூடு, பேனா, காகிதம் இவைகள் வைக்கப்பட்டிருந்தன. சுயம்வரத்திற்காக வந்திருந்த வாலிபர்கள் எல்லோரும் வரிசையாக நம்பர் வாரியாக ஆசனங்களில் அமர்ந்திருந்தனர்.

ஒருவர் கல்யாணராமனிடம் வந்து மூப்பத்தி ஆறும் நம்பர் மேஜையில் உட்காரும்படி சொன்னார். கல்யாணராமன் அதில் போய் அமர்ந்து சுற்றிலும் பார்த்தான். மண்டபத்தைச் சுற்றிலும் பெரிய புகைப் படங்கள் வைக்கப்பட்டிருந்தன. சினிமாக் கொட்டகை வாசலில் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும் படங்கள் போல. எல்லாப் படங்களும் சுயம்வரம் செய்து கொள்ளப்போகிற மங்கை நல்லாளின் திவ்ய ரூபம் என்று எளிதாக உணர்ந்து கொள்ள முடிந்தது.

சபை நடுவே ஒரு தடித்த மனிதர் வீற்றிருந்தார். அவருக்குப் பக்கத்தில் இரண்டு பணியாளர்கள் பணிவோடு விசிறிக் கொண்டு நின்றனர். அவர்தான் களவாடியூர் பெரிய பண்ணை மகிஷவாகனம் அய்யர் என்று சொல்லாமலேயே விளங்கியது. மணி ஐந்தடித்து ஒரு நிமிஷம் ஆனவுடன் பெரிய பண்ணை அய்யரவர்கள் தம் காரியஸ்தரிடம் ஏதோ கையைக் காட்டிச் சமிக்ஞை செய்தார். உடனே அவர் உள்ளே ஓடினார். மணவாளனாவதற்குக் காத்திருந்த வாலிபர்கள் சுயம்வரத்திற்காகப் பெண் மாலையிட வரப்போகிறாள் என்று எண்ணி நிமிர்ந்து உட்கார்ந்து தங்கள் ஆடைகளைச் சரி செய்து கொண்டனர்.

கல்யாணராமனும் கைக் குட்டையை எடுத்து முகத்தைத் துடைத்துக்கொண்டு தலைக் கிராப்பை அலுங்காமல் கையால் ஒரு தடவை தடவிச் சரி செய்துகொண்டு, தோளில் கிடந்த அங்கவஸ்திரத்தின் ஜரிகை சரியாகத் தெரியும்படிப் போட்டுக் கொண்டு நிமிர்ந்து உட்கார்ந்தான்.

உள்ளே சென்ற குமாஸ்தா கையில் ஒரு கத்தை காகிதத்தோடு வந்ததைக் கண்டு எல்லோருடைய முகத்திலும் திகைப்பு ஏற்பட்டது. ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

மகிஷவாகனம் அய்யர் ஒரு கனைப்புக் கனைத்துவிட்டு அதிகார தோரணையில் "எல்லோருக்கும் ஒவ்வொன்று கொடு" என்றார். காரியஸ்தர் ஒவ்வொரு மேஜைக்கு அருகிலும் வந்து ஒவ்வொரு காகிதத்தை வைத்து விட்டுப் போனார். கல்யாண ராமன் காகிதத்தை எடுத்துப் பார்த்தான். "இதிலுள்ள கேள்விகளுக்குப் பதில் எழுதவும்" என்று தலைப்பில் எழுதியிருந்தது.

உங்கள் பெயர் என்ன? (முழுப் பெயரும் எழுதவும். புனைப் பெயர் இருந்தாலும் எழுதவும்.)

ஒய். ஆர். கல்யாணராமன். "கல்லு" என்றும் கூப்பிடுவார்கள்.

என்ன உத்தியோகம்?

முனிஸிபாலிடி மேஸ்திரி.

சம்பளம் எத்தனை? (பஞ்சப்படி உள்பட எழுதவேண்டும்.)

நாற்பத்தியோரு ரூபாய், பதினைந்தணா, பதினொரு தம்படி.

மேல் வரும்படி உண்டா?

உண்டு. இருநூறு தமிழ்ப் பத்திரிகைகளுக்கு 'கல்லு' என்ற புனைப்பெயரில் கதை, கட்டுரை, கவிதை எல்லாம் அனுப்பி வைத்திருக்கிறேன். அவைகளெல்லாம் பிரசுரமானால் கட்டாயம் மேல் வரும்படி உண்டு.

பூர்வீகமான சொத்துக்கள் ஏதேனும் உண்டா?

உண்டு. பூர்வீகத்தில் உண்டு. இப்பொழுது இல்லை.

சென்ற ஜென்மத்திலோ இந்த ஜென்மத்திலோ நீர் எந்தப் பெண்ணையாவது காதலித்ததுண்டா?

சென்ற ஜென்மத்தைப் பற்றி அறியக் கூடிய பக்குவம் இன்னும் வரவில்லை. இந்த ஜென்மத்தில் நான் எவ்வளவோ பெண்களைக் காதலித்ததுண்டு. ஆனால் அவர்கள் என்னைக் காதலித்தார்களா, இல்லையா என்று எனக்குத் தெரியாது.

உமக்கு மூளைக் கோளாறோ, அல்லது மற்ற வியாதிகளோ உண்டா?



"என்ன ஸார்! உங்கள் 'காலபலனி'லே என்ன போட்டிருக்கிறது?"
"இனிமேல் ஞாயிற்றுக் கிழமைகளில் தபால் போக்குவரவு வைத்துக்கொள்ளுவது அவ்வளவு உசிதமில்லை என்று போட்டிருக்கிறது!"



மூளைக் கோளாறு கல்யாணம் செய்து கொண்ட பிறகு ஏற்படலாம். மற்றப்படி கல்யாணம் செய்து கொள்ள வேண்டுமென்ற மனோ வியாதி தான் இப்பொழுது இருக்கிறது.

உமக்குச் சங்கீதம் வருமா?

வரும் — நான் பேசும் போதே இசையோடு கலந்துதான் பேசுவது வழக்கம்.

நாட்டியம் வருமா?

ஏன் வராது? மனைவியாக வருகிறவள் ஆட்டுவித்தால் ஆடும்படியாகத் தானே இருக்கும்?

கல்யாணம் செய்து கொண்ட பிறகு மாமனாரிடமிருந்து நீர் பணம் எதிர்பார்க்க மாட்டீரே?

நான் எதிர்பார்க்க மாட்டேன். என் மனைவி எதிர்பார்க்கும்படி நேரலாம்.

'மனைவிக்கு நீர் மாதம் எத்தனை புடவை வாங்கிக் கொடுப்பீர்? வாரம் எவ்வளவு தடவை சினிமாவுக்கு அழைத்துப் போவீர்? மாதம் பதினைந்து நாள் நீர் வீட்டில் சமையல் வேலையைக் கவனித்துக் கொள்வீரா?' என்பது போன்ற பலவிதக் கேள்விகள் கேட்கப் பட்டிருந்தன. எல்லாவற்றிற்கும் மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் பதில் எழுதினான் கல்யாணம்.

விடைகள் எழுதுவதற்குத் தாராளமாகக் காகிதம் வழங்கப்பட்டதால் சிலர் பக்கம் பக்கமாக எழுதித் தள்ளினர். எல்லோரும் எழுதிய பிறகு அவைகளை வாங்கிச் சேகரித்துக் கொண்டு எல்லோரையும் ஒரு மணி நேரம் காத்திருக்கும்படி சொல்லிவிட்டு மகிஷவாகனமய்யரும் அவருடைய காரியதரிசியும் உள்ளே சென்றனர்.

எல்லோரும் வழி மேல் விழி வைத்துக் காத்திருந்தனர். முதலில் காரியதரிசி கையில் ஒரு காகிதத்துடன் வெளியே வந்தார்; அவரைத் தொடர்ந்து பெரிய பண்ணை மிராசுதாரும் வந்தார். பரிக்ஷையில் தேறிய மணாளனுக்கு மாலையிடத் திரிலோக சுந்தரி கையில் ஒரு மாலையுடன், தோழிகள் பரிவாரம் புடைசூழத் தகப்பனாருக்குப் பக்கத்தில் வந்து நின்றாள், சபை நடுவில். உன்னதமான அழகி தான். ஒவ்வொரு வாலிபனின் கண்ணையும் கருத்தையும் தூண்டில் போட்டு இழுத்தது அப் பெண்ணரசியின் எழில். அடுத்த கணம் என்ன நேரப் போகிறதோ என்று துடித்துக் கொண்டிருந்தது ஒவ்வொருவருடைய இதயமும். ஒவ்வொருவரும் மாலை தங்கள் கழுத்திற்குத்தான் வரப்போகிறதென்ற ஆர்வத்தில் நாரையைப் போல் கழுத்தை நீட்டிக் கொண்டிருந்தனர்.

காரியதரிசி ஒரு தடவை கனைத்துக் கொண்டு கையிலிருந்த கடிதத்தைப் பார்த்து விட்டு உரத்த குரலில் கூப்பிட்டார்: "நிரக்ஷகன், நிரக்ஷகன் — பதின்மூன்றாம் நம்பர்!"

பதின்மூன்றாம் நம்பர் ஆசனத்திலிருந்து ஒரு உருவம் "நான்தான் நிரக்ஷகன்" என்று துள்ளிக் குதித்து சபை முன்னால் வந்தது. அந்த வாலிபனைப் பார்த்ததும் எல்லோருக்கும் பகீரென்றது. உலகத்திலேயே அப்படி ஒரு அவலக்ஷணத்தைப் படைக்கக் கடவுள் மூளையைக் குழப்பிக் கொண்டுதான் யோசித்திருக்க வேண்டும்.

கல்யாணராமனுக்குப் பக்கத்திலிருந்த வாலிபன் ஒருவன் அவனிடம் "சார்! இந்தமாதிரி குரூபிகளுக்குத்தான் அதிருஷ்டம் அடிக்கிறது!" என்றான்.

"ஆமாம். ஆமாம் இந்த மாதிரியான அழகான பெண்களுக்குத்தான் துரதிர்ஷ்டமும் ஏற்படுகிறது" என்றான் கல்லு.

அடுத்த கணம் மாலையைக் கையிலேந்தி நின்ற திரிலோக சுந்தரி தனக்கு மணாளனாக வரப்போகும் பதின்மூன்றாம் நம்பர் பேர்வழியான நிரக்ஷகனைப் பார்த்தாள். அவளுக்கு உடனே வலிப்பு வந்து விட்டது. மயக்கம் போட்டுக் கீழே விழுந்து விட்டாள். உடனே சுயம்வர மண்டபத்தில் குழப்பம் ஏற்பட்டது.

கல்யாண ராமன் அதற்கு மேல் அங்கு நிற்காமல் வெளியே வந்து விட்டான்.

* * *

மறு நாள் கல்யாண ராமன் அந்தத் தெரு வழியாக வந்தபொழுது முதல் நாள் இருந்த சுயம்வர விளம்பரம் அன்றும் அந்த வீட்டில் வைக்கப் பட்டிருப்பதைப் பார்த்தான். ''நேற்று பலவித காரணங்களால் நடைபெறாமல் நின்று போன சுயம்வரம் இன்று நடைபெறும். நேற்று ஆஜரானவர்கள் இன்று அனுமதிக்கப் படமாட்டார்கள்'' என்று எழுதி யிருந்தது. கல்யாணராமன் பெருமூச்சு விட்டுக் கொண்டே நடந்தான். அந்தத் தெருக்கோடி திரும்புமுன் அவனைத் திடுக்கிட வைத்தது மற்றொரு விளம்பரம். ''ஸ்ரீ பரஸ்பர சகாயமய்யர் ஜேஷ்ட குமாரத்தி அதிரூபவல்லி சுயம்வரம் செய்து கொள்ளப் போகிறாள். கார்க்கேய கோத்திரம் தவிர மற்ற கோத்திரமுள்ள வாலிபர்கள் எல்லோரும் தாராளமாகக் கலந்து கொள்ளலாம்'' என்று அதில் எழுதப்பட்டிருந்தது.

கல்யாண ராமன் ஆவலோடு அந்த வீட்டிற்குள் நுழைந்தான். ஒருவர் உபசாரம் செய்து அவனை அழைத்துச் சென்று சுயம்வர மண்டபத்தில் உட்காரவைத்தார். இங்கும் மேஜைமீது காகிதம், மைக்கூடு, பேனா முதலியவைகள் வைக்கப்பட்டிருந்ததிலிருந்து கேள்வித் தாள்கள் வினியோகிக்கப்படும் என்று எளிதில் உணர்ந்து கொண்டான். நேற்று அந்தச் சுயம்வரத்திற்கு விஜயம் செய்தவர்கள்போல் அவ்வளவு கூட்டம் இல்லை. கல்யாணராமனைச் சேர்த்துப் பத்துப் பேர்கள்தானிருக்கும். இது கல்யாணராமனுக்குச் சிறிது ஆறுதலாகவும் நம்பிக்கை அளிக்கக் கூடியதாகவும் இருந்தது. சுயம்வரப் பெண்ணின் உருவப் படம் எங்கேயாவது மாட்டப் பட்டிருக்கிறதா என்று நான்கு புறமும் துருவித் துருவிப் பார்த்தான். ஒரு படம் கூடக் காணப் படவில்லை. இதிலிருந்து அந்தப்பெண் அநாவசியமாகத் தன் அழகை விளம்பரப் படுத்திக் கொள்கிறவள் இல்லை என்று எண்ணித் திருப்தி அடைந்தான்.

வழக்கம் போலக் கேள்வித்தாள் கொடுக்கப் பட்டது.



ஆனால் இன்று கேட்கப்பட்ட கேள்விகள் அவ்வளவு கடுமையாக இல்லை. கல்யாணராமன் அவசர அவசரமாகப் பதில் எழுத ஆரம்பித்தான்.

இந்தச் சுயம்வரத்தில் பெண் உம்மை வரனாக ஏற்றுக்கொண்டு மாலை யிட்டால் நீர் கல்யாணம் செய்துகொள்ள மறுக்க மாட்டீர் என்பதற்கு உறுதி மொழி கொடுப்பீரா?

எனக்கு மாலை யிட்டால் கல்யாணம் செய்துகொள்ள மறுக்க மாட்டேன். இது உறுதி. அப்படி மறுத்தால் கல்யாண ராமன் என்ற என் பெயருக்கே நான் தகுதியற்றவன்.

நீர் மாமனாரிடமிருந்து எவ்வளவு ஆயிரம் ரூபாய் வரதக்ஷிணை விரும்புகிறீர்?

கல்யாண ராமன் தாராளமாகவே எழுதிவைத்தான். 'பதினாயிரம் ரூபாய் கொடுத்தால் போது' மென்று.

உமக்கு உத்தியோகம் இருக்கிறதா? இல்லாவிட்டால் மாமனாரின் சிபாரிசில் உத்தியோகம் வேண்டுமா? என்ன உத்தியோகம்?

இருக்கிற உத்தியோகம் திருப்திகரமானதாயில்லை—முனிஸிபாலிடி ரோடு மேஸ்திரி. எனக்கு முனிஸிபல் கமிஷனர் வேலை கிடைத்தால் என்னை மிரட்டுகிற இன்ஸ்பெக்டர்களை யெல்லாம் நான் மிரட்டலாம். கமிஷனர் உத்தியோகத்திற்குச் சிபார்சு செய்தால் மிகவும் நல்லது.

உமக்குத் தனி பங்களாவும் காரும் வேண்டுமா?

அவசியம் வேண்டும். அவைகள் இல்லாததால்தான் எனக்குக் கௌரவமில்லை.

இன்னும் இதைப்போலவே இரண்டொரு கேள்வி. எல்லாவற்றுக்கும் விடை எழுதிக் கொடுத்துவிட்டு மாலையோடு வரப்போகும் பெண்ணழகியைப் பற்றி அவன் கனவு கண்டு கொண்டிருந்தான்.

அரை மணி நேரத்திற்குள் கேள்வித் தாள்களைப் பரிசீலனை செய்து விட்டு வெளியே வந்தார் பெண்ணின் தகப்பனார்.

''நம்பர் ஏழு! கல்யாண ராமன்!'' என்று கூவினார் ஒரு பிரமுகர். கல்யாண ராமன் எழுந்து நின்றான். பெண்ணின் தகப்பனார் அவனுக்குக் கைலாகுக் கொடுத்து நடுச் சபைக்கு அழைத்து வந்தார். அப்பொழுது அவன்

உள்ளத்தில் உவகை துள்ளியது. பதினுயிரம் ரூபாய்; ஒரு பங்களா; ஒரு கார்; கமிஷனர் உத்தியோகம்...வேறு என்ன வேண்டும்?

கல்யாணராமனை ஒரு கையால் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு "குழந்தை கண்ணு, அதிரூபம்! அந்த மாலையை எடுத்துக் கொண்டு வா" என்ருர் மாமனாராக வரப்போகிற பரஸ்பர சகாயமய்யர். கையில் மாலையை எடுத்துக் கொண்டு கார் மேகம் திரண்டு வருவதுபோல் ஒரு பெண் வந்தாள். கல்யாணம் தலை நிமிர்ந்து அந்தப் பெண்ணரசியைப் பார்த்தான். அவனுக்குப் பகீரென்றது. சப்த நாடியும் ஒடுக்கம் கண்டது. அது பெண்ணு அல்லது பேயா என்று அங்கு நின்று யோசிக்க அவனுக்கு இஷ்டமில்லை. கழுத்தில் மாலை விழாமல் தப்பித்துக் கொண்டு ஓடிவிடுவதுதான் அப்பொழுது அவனுக்குச் சரியானதாகப் பட்டது. பரஸ்பர சகாயமய்யரின் கைப்பிடியை உதறிக்கொண்டு ஓட ஆரம்பித்தான்.

அந்தத் தெரு தாண்டி அடுத்த தெரு வந்தவுடன்தான் ஓட்டத்தை நிறுத்தி ஒருவிதமாகத் தன்னை ஆச்வாஸப் படுத்திக்கொண்டு நின்று திரும்பிப் பார்த்தான். அவனுக்குப் பின்னுல் அவனோடு சுயம்வரத்திற்கு வந்திருந்த பத்து வாலிபர்களும் ஓடி வந்து கொண்டிருந்தனர். அவர்களில் ஒருவன் அவனை நெருங்கிப் பெருமூச்சு விட்டுக் கொண்டே, "நல்லவேளை! அந்தப் பெண் நீ ஓடிவந்தவுடன் என் கழுத்தில் மாலையைப் போட வந்தாள். நான் தப்பித்து ஓடி வந்து விட்டேன். எனக்குப் பின்னுல் எல்லோரும் தப்பினேும், பிழைத்தோம் என்று ஓடி வந்து விட்டார்கள். அது பெண்ணு! பேயா? ஒன்றும் விளங்கவில்லையே!" என்ருன்.

இதைக் கேட்டதும்தான் கல்யாணராமனுக்கு நல்ல மூச்சு வந்தது. "நான் பெண்களைத்தான் பார்த்திருக்கிறேன். பேயையோ பிசாசையோ பார்த்ததில்லை. பேயோ பிசாசோ இவ்வளவு பயங்கரமாக இருக்குமென்று நான் நம்பவில்லை" என்று சொல்லிவிட்டு நடந்தான்.

* * *

"இந்தாருங்கோ! உங்களைத்தானே? இந்த பட்டப் பகலிலே என்ன இப்படித் தூக்கம்?" என்று தன் சம்சாரம் அதட்டி எழுப்பியபோதுதான் கல்யாணராமன் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தான்.

"இல்லை, பேப்பர் படித்துக் கொண்டே இருந்தேன். அப்படியே தூக்கம் வந்து விட்டது. பஞ்சாபிலே இரண்டு பெண்கள் சுயம்வரம் வைத்துக் கணவர்களைத் தேர்ந்தெடுக்கப் போகிருர்களாம்!" என்று சொல்லிவிட்டு ஒரு கொட்டாவி விட்டுக் கண்களைத் அடைத்துக் கொண்டான் கல்யாணராமன்.

காலக்ஷேபம்

மாஜிஸ்டிரேட்:—இதுவரை ஐந்து பேர் மீது உமது மோட்டாரை நீர் மோதியிருக்கிறீரா?

டிரைவர் (கோபத்துடன்):—ஐந்து பேர் இல்லை; நான்கு பேர் தான்! ஒருவர் மேலேயே இரண்டு தடவை மோதினேன்!

○●○

"என் நாய் காணுமற் போய்விட்டது."

"ஏதாவது ஒரு பத்திரிகையிலே அதைப் பற்றி விளம்பரம் போடுகிறதுதானே?"

"போடலாம்; ஆனுல் அந்தச் சனியன் பிடித்த நாய் பத்திரிகை படிக்கிறதில்லையே?"

○●○

அம்பி:—இந்தப் பெரிய ஆஸ்பத்திரியிலேதான் நான் பிறந்தேனும்; அம்மா சொல்லியிருக்கிருள்.

தம்பி:—அடடா! ஆஸ்பத்திரியிலேயா பிறந்தாய்? உனக்கு அப்போது உடம்புக்கு என்ன?

○●○

"என்ன அப்பா, அங்கவஸ்திரத்தில் ஏதோ முடிச்சுப் போட்டுக் கொண்டிருக்கிருயே. என்ன சங்கதி?"

"அதுவா? என் மனைவி போட்ட முடிச்சு; அவள் எழுதின கடிதத்தை மறக்காமல் தபாலில் போடத்தான்!"

"கடிதத்தைப் போட்டு விட்டாயா?"

"இல்லை; கடிதத்தைக் கொடுக்க அவள் மறந்து விட்டாள்!"


சுசீலா கிப்ஸ் உபயோகிக்கிறாள்
அவள் அழகான பற்களைப் பெறுவாள்
1
சுசீலா தனது கிப்ஸ் டென்டிபிரிஸின் அழகான டப்பியையும், இனிய புதிய மணத்தையும் விரும்புகிறாள்.
2
அவள் பிரஷை தண்ணீரில் நனைத்து கிப்ஸ் டென்டிபிரிஸ் கட்டியில் தேய்க்கிறாள்.
3
அவள் எல்லா பற்களையும் தேய்க்கிறாள். (மேலும் கீழுமாக) உள்ளும் வெளியும் சுத்தம் செய்கிறாள்.
4
பிறகு தண்ணீரால் வாயை கொப்பளிக்கிறாள். இப்பொழுது கிப்ஸ் உபயோகிப்பதால் அது அழகான பற்களைப் பெற உதவும்.
உங்கள் குழந்தைகளும் கிப்ஸ் உபயோகிக்கிறார்களா?
கரகரப்பான சுத்தம் செய்யும் வஸ்துக்கள், சாம்பல், கரி இவை போன்றவை, குழந்தைகளின் பற்களுக்கு ஹானிவிளைவிக்கலாம். உங்கள் குழந்தைகளை சிறுவயதிலிருந்தே கிப்ஸ் டென்டிபிரிஸ் உபயோகிக்கச்செய்யுங்கள். அவர்கள் பெரியவர்களானதும் வெண்மையான குற்றமற்ற பற்களைப்பெறுவார்கள். நுரைபோல் மிருதுவான கிப்ஸ் பற்களுக்கோ ஈறுகளுக்கோ ஒருபொழுதும் கெடுதல்செய்வதில்லை. குழந்தைகளும் பெரியவர்களைப் போலவே, கிப்ஸை விரும்புகிறார்கள். அதற்கு காரணம் கிப்ஸின் இனிய புதிய வாசனையும், தேர்ந்தெடுக்க 3 கவர்ச்சிகரமான வர்ணங்களிலுள்ள டப்பிகள் இருப்பதினாலும்தான்.
கிப்ஸ் டென்டிபிரிஸ்
ஒழுங்கானமுறையில் பற்களை வெண்மையாக சுத்தம் செய்கிறது
Gibbs
DENTIFRICE
GD. 24-172 TM



நரிக்காட்டு ராஜா

எஸ். கோபாலன்
(மொழிபெயர்ப்பு: எஸ். வி. எஸ்.)



2. திருட்டுப் பயல்

நல்ல நரிக்காடு — இந்தப் பெயர் தங்கள் கிராமத்துக்கு எப்படி வந்தது என்று தெரியாமல் திகைத்தார்கள் அவ்வூர் வாசிகள். ஊர் ஜனங்களைத் தொந்தரவு செய்வதில் மற்ற நரிகளுக்குச் சற்றும் சளைத்தவை அல்ல இந்த நல்ல நரிக்காட்டு நரிகள். கோழிகளைத் திருடுவதில் தங்கள் இனத்தாரைவிட நல்ல நரிக்காட்டு நரிகள் சற்றுத் தயை தாட்சண்யம் காட்டுவதாகக் கேள்விப் பட்டது கூட இல்லை. சோளக் கொல்லை, வரகுக் கொல்லை, கடலைக் கொல்லை இவற்றை அழிப்பதில் சற்றும் பின் வாங்கியதில்லை. இரவு வேளைகளில் தப்பித் தவறித் தன்னந் தனியாக காட்டுப் பக்கம் எவனாவது போய்விட்டால் அவனை அன்புடன் இந்த நரிகள் வரவேற்று உபசரித்ததாகக் கேள்விப்பட்டதில்லை. இருந்தும் அவர்கள் தங்கள் கிராமத்தை 'நல்ல நரிக்காடு' என்றுதான் அழைத்து வந்தார்கள். எத்தனையோ ஊர்களுக்குப் பொருளில்லாமல் பெயர் வைக்கப்படுவதுபோல், இதற்கும் வைத்திருக்க வேண்டும். அல்லது முன்னோர்கள் நரிகளின் உபத்திரவம் தாங்கமாட்டாமல் வயிற்றெரிச்சல் தீர 'நல்ல நரிக்காடு' என்று இடக்கரடக்கலாக நாமகரணம் செய்தார்களோ என்னவோ!

அவ்வூரைப் பற்றிக் கர்ண பரம்பரைக் கதை ஒன்று நிலவி வந்தது. ஒரு காலத்தில் வயல்கள் எல்லாம் செழிப்பாக இருந்தனவாம். பூமாதேவியும் வருண பகவானும் நிலத்தை எப்பொழுதும் ஈரமாகவே வைத்திருந்தார்களாம். ஒரு வாளி தண்ணீர்கூட இறைக்க வேண்டிய அவசியமிருக்க வில்லையாம். இப்படியிருந்தபோது, ஒரு தடவை திடீர் என்று ஒரு வாரம்வரை கடும் மணற் புயல் அடித்ததாம். அந்தப் புயலில் கிராமமே புதைந்து விட்டதாம். வெகு நாட்கள் கழித்து, இன்றைய நல்ல நரிக் காட்டு வாசிகளின் முன்னோர்கள் வந்து குடியேறினார்களாம். அவர்கள் குடியேறிய போது, ஓயாமல் ஊளையிடும் நரிகளின் தொந்தரவு சொல்ல முடியாத அளவுக்கு இருந்ததாம். ஆகவே, அவர்களுக்கு ஒருபுறம் மணல் மேடிட்ட வயல்களைச் சீர்திருத்தி, பண்படுத்தி, உழுது பயிரிடவேண்டிய கஷ்டமும் மற்றொரு புறம் நரிகளோடு போராட வேண்டிய தொல்லையுமிருந்ததாம். இருந்தும் அவர்கள் ஒரு தடவைகூட இடக்கரடக்கலாக ஒலிக்கும் தங்கள் கிராமத்தின் நல்ல நரிக்காடு என்ற பெயரை மாற்றிவிட வேண்டும் என்று விரும்பவில்லை!

அன்று மத்தியானம், ஊரே அமைதியாக இருந்தது. குடிசைகளில் எல்லாம் ஒரே அமைதி. பகல் வெய்யில் தாங்கமாட்டாமல் எல்லோரும் அவரவர்கள் குடிசையில் தூங்கிக் கொண்டிருப்பார்கள் என்று யாரும் நினைத்திருக்கக்கூடும். ஆனால், குடிசைகளைச் சற்றுக் கூர்ந்து கவனித்தால், அவை காலியாகக் கிடப்பதைப் பார்க்கலாம். ஆண், பெண், குழந்தை யாவரும் தூரத்திலுள்ள தங்கள் கடலைக் கொல்லைக்கும் மிளகாய்க் கொல்லைக்கும் வேலை செய்யப் போயிருந்தார்கள். ஆழம் காணாத கிணற்றிலிருந்து தண்ணீர் இறைக்கச் சென்றிருந்தார்கள். ஆம்; வரப்போகும் மகசூலை ஏற்கெனவே அடகு வைத்துக் கடன்பட்டிருந்ததால் சூரியோதயத்துக்குப் பல மணி நேரம் முன்னாலிருந்து வயல்களில் உழைக்க வேண்டியிருந்தது. இவ்விதம் ஆழம்

காண முடியாத கிணற்றுக்குள் சால்கள் விட்டுத் தண்ணீர் இழுத்து இழுத்து இறைக்கவேண்டியிருந்தது. இதனால் அவர்கள் வயதாகி வந்ததே தவிர வேறு ஒரு பலனும் காணவில்லை!

ஆனால் இன்று மத்தியானத்தின் அமைதி அளவு கடந்து நீண்டு விட்டதாகத் தோன்றியது. ஏனெனில் சதா வேலையும் சத்தம் போட்டு விளையாடும் சிறுவர்கள் கூட அசாத்தியக் குடும்பப் பொறுப்புடன் வேலைக்குப் போய் விட்டார்கள். ஆகவே, உயிர்த் தத்துவம், வாழ்க்கைத் தத்துவம் ஆகியவை இருப்பதன் அறிகுறியே அங்கு எங்கும் காணேம். ஒரு குடிசையின் வாயிலில் மட்டும் ஒரு நாய் தன் கழுத்துப் பட்டையைத் தரையில் பொருத்திப் படுத்துக் கொண்டிருந்தது. அதுவும் இரண்டு மணி நேரமாக அசைந்து கொடுத்ததாகத் தெரியவில்லை. சற்றுத் தூரத்திலிருந்த பலா மரத்து, அரை குறை நிழலில் ஒரு மனிதன் மல்லாக்கப் படுத்திருந்தான். அவன் உடல்மீது ஆயிக் கம் கொள்ள வெள்ளெறும்பும் சிற்றெறும்பும் போட்டி போட்டுக் கொண்டிருந்தன. சூரியனே உக்கிரமாகத் தகித்துக் கொண்டிருந்தான். நேரமோ போவதாகவே தெரியவில்லை. ஏன், கால தேவனே தன் சலன சக்தி யிழந்து ஸ்தம்பித்து நின்றுவிட்டதாகவே தோன்றியது.

திடீர் என்று அந்த நாய் சுறுசுறுப் படைந்து ஊளையிட்டது. எங்கோ வெகு தூரத்திலிருந்த நாய் ஒன்று இந்த நாயின் சத்தத்தைக் கேட்டுக் குலைத்து அனுதாபம் தெரிவித்தது. மூன்றாவது நாய் கண்ணுக்குப் புலனாகாத, நாய்களின் இந்தக் கோஷ்டி கானத்தில் சேர்ந்து கொண்டது. சற்று நேரத்தில் நூற்றுக் கணக்கான நாய்கள் சேர்ந்து அந்தக் கிராமத்து மத்தியான அமைதியைக் குலைத்தன.

இவ்வளவு சத்தத்துக்குப் பிறகுதான் பலா மரத்தடியில் கிடந்த மனிதன் சற்று அசைந்து கொடுத்துக் குலைக்கும் நாயை ஏதோ வைதான். ஆனால் அந்த நாயோ, பாவம், தன் தோழர்களை யெல்லாம் கத்தச் செய்த பிறகு, அவற்றை அடக்க முடியாமல் தவித்தது.

ஒருவன் கும்பகர்ணனுடைய தம்பியாக இருந்தால்கூட, இவ்வளவு நாய்களின் சத்தத்திடையே தூங்க முடியாது. ஆகவே, அவன் சபித்துக் கொண்டே எழுந்திருந்து, தன் உடம்பின் மீது ஊர்ந்து கொண்டிருந்த எறும்புகளையும் பூச்சிகளையும் தட்டி உதறினான். பிறகு தன் தூக்கத்தைக் கலைத்த நாயை அடிக்க ஓடினான். ஆனால் ஏதோ ஒன்று அவனைத் தடுத்து நிறுத்திவிட்டது! அவன் ஆச்சரியத்தினால் வாயைப் பிளந்து எதையோ பார்த்துக்கொண்டு நின்றான்.

அவனுடைய தூக்கத்தையும், அந்த அமைதியையும் இந்த நாய்கள் குலைத்ததற்குத் தகுந்த காரணம் இருந்ததையும் உணர்ந்தான். அவனுடைய எஜமானரின் வீட்டு வாசற் கதவு திறந்து கிடப்பதையும், யாரோ வீட்டுக்குள்ளிருந்து, சாமான்கள் திருடுவதையும் பார்த்தான். அவன் நன்றாக விழித்துக் கொண்டு பார்த்தபோது திருடன் வேகமாக வெளியில் வந்து வாயில் வெள்ளரிக்காயைக் கவ்விக்கொண்டு ஓடினான்!

நாட்டாண்மைக்காரர் வீட்டில் களவு! அதுவும் பட்டப் பகலில்! எஜமானர் இதை அறிந்தால் தன்னை எவ்வளவு கோபிப்பார் என்று நினைத்த மாத்திரத்தில் அவனுக்கு அளவுகடந்த பயம் ஏற்பட்டது. அடுத்த கணம், தன் தலையாரி உத்தியோகச் சின்னமாகிய நீளக் கம்பை எடுத்துக் கொண்டு, திருடனைத் துரத்தினான். அவ்வளவுதான்; குரைத்துக் கொண்டிருந்த அத்தனை நாய்களும் அவனைப் பின் தொடர்ந்தன!

"அந்தப் படுபாவிப் பயல்தான்! இன்றைக்கு அவனுக்கு நல்ல பாடம் கற்பிக்க வேண்டும்!" என்று இரைந்தான். நாய்களுக்கு யாரைப் பிடிக்க வேண்டும் என்பதைச் சுட்டிக் காட்டுவதற்காகத் தான் அவ்விதம் இரைந்தானோ என்னவோ!

திருடன் தன்னால் ஆனமட்டும் ஓடித் தப்பித்துக்கொள்ளப் பார்த்தான். ஆனால் பயங்கரத் தடியுடன் தலையாரியும் நாய்களும் துரத்தி வரும்போது தப்புவது சாத்தியமா, என்ன? இதற்குள் வயல்களிலிருந்து வேறு குடியானவர்கள் திரும்பிக் கொண்டிருந்தார்கள்! ஆகவே, இனி தப்ப முடியாது என்று தீர்மானித்துப் 'பளிச்'சென்று நின்றான் திருடன். நாய்களிடம் அன்பு சமிக்ஞையுடன் ஏதோ செய்தான். செய்ததில் எப்படியோ ஆச்சரியமான முறையில் பலன் கிடைத்தது நாய்களுடன் சமாதானம் செய்து கொண்டு விட்டான். முதலில் அவனைச் சூழ்ந்து குரைத்த அந்த நாய்கள் இப்போது அவனை இன்னான் என்று புரிந்து கொண்டு வாலை குழைத்துக் குழைத்து ஆட்டத் தொடங்கின.

ஆனால் தலையாரி அவன்மேல் பாய்ந்து அவன் கையைப் பற்றினான். பையனோ தலையாரிக்கு இன்னும் கோபமூட்டும் வகையில் தன் கையிலிருந்த வெள்ளரிப் பிஞ்சை அலட்சியமாகக் கடித்துக் கொண்டே திமிறினான். ஆனால் எதிரில்

வந்து கொண்டிருந்த குடியானவர்கள் அவனை நெருங்கியதும் பையன் திமிறுவதை நிறுத்தினான்.

அங்கே வந்த கிராமவாசிகளில் ஒருவன் "இது என்ன சிறுபிள்ளைத் தனமான விளையாட்டு? நான் உன்னை வீட்டுக்குக் காவல் வைத்துவிட்டுப் போனால், நீ இந்தச் சின்னப் பையனோடு கண்ணாமூச்சியா விளையாடுகிறாய்?" என்றான்.

இவ்விதம் பேசியவன்தான் பிச்சை முத்து அம்பலக்காரன். நல்ல உயரமும் திடகாத்திரமான சரீரமும் அடர்த்தியான மீசையும் கொண்டவன். இருபது வருஷமாக இவன்தான் நல்ல நரிக்காட்டுக்கு நாட்டாண்மைக்காரன். நாட்டாண்மைக்கு ஏற்ற கம்பீரக் குரலும் கொண்டிருந்தான்.

"நான் அவனோடு விளையாடவில்லை, யசமான்! இவன் யசமான் வீட்டுக்குள்ளே புகுந்து திருடிக் கொண்டிருந்தான். நான் போய் விரட்டவில்லையென்றால் வீட்டில் ஒரு சாமான் கூட மிச்சமிருந்திராது" என்றான் தலையாரி.

நாட்டாண்மைக் காரனுக்குக் கோபம் வந்து விட்டது. அந்தக் கோபத்தில் "அவன் வீட்டுக்குள் நுழைகிறவரைக்கும் நீ என்ன செய்து கொண்டிருந்தாய்?" என்று கத்திப் பையனை நையப் புடைத்து விட்டான். பையன் வலிபொறுக்க முடியாமல் அலறினான். நாட்டாண்மைக்காரன் அவனை ஒரு பக்கம் தள்ளிவிட்டு, வீட்டுக்குள் நுழைந்தான். அதற்குள் பெண்களும் அந்த இடத்துக்கு 'என்ன சமாசாரம்? என்ன செய்தி? என்ன நடந்துவிட்டது?' என்று ஆவலுடன் கேட்டுக் கொண்டே வந்து சேர்ந்தார்கள்.

"இந்தப் பாவி மகன் என் வீட்டைத் தவிர வேறு யார் வீட்டிலேயும் திருடப் போவதில்லை. வருஷத்துக்கு ஒரு தடவை என் வீட்டுப் பானையெல்லாம் காலி பண்ணிவிட்டுப் போய் விடுகிறான். போன வருஷம்தான் அப்படிச் செய்தான் என்றால் இந்த வருஷமும் வந்துவிட்டான். இவன் காலை முறித்து மூலையில் வைப்பதற்கு இந்த ஊரில் யாருக்கும் வகையில்லை?" என்று நாட்டாண்மைக்காரனின் மனைவி குறையிரந்தாள்.



அடுத்த வீட்டுக்காரி மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க ஓடி ஓடி வந்து "சுப்பன் மகன் மாதுவா? எனக்கு அப்போதே தெரியும், அவன் சுத்த உதவாக்கரை என்று. ஆனால் ஜோசியர் மட்டும் அவன் பெரியவனானால் ராஜாவாகப் போவான் என்று கை பார்த்துச் சொன்னார்......?" என்று இழுத்தாள்.

இதைத் தொடர்ந்து நடந்த சம்பாஷணையில் அவர்கள் பையனை மறந்துவிட்டார்கள். அவன் கொஞ்ச தூரம் வரை பின்தங்கிப் பின்தங்கித் திரும்பிப் பார்த்துக் கொண்டே சென்றான். பிறகு பிடித்தான் ஒரு ஓட்டம்.

*

இப்பொழுது கிராமத்தில் எந்த மூலையிலிருந்தும் பேச்சுக் குரல் ஒலிக்க ஆரம்

பித்தது. குழந்தைகளின் சண்டையும் சச்சரவும் அழுகையும் எங்கும் ஒலித்தன. பெண்கள் உரத்த குரலில் கமகமும் கார்வையும் கலந்து 'ஏ ஏ ஏ ராமா! ஏ ஏ ஏ சுப்பா!' என்று கூப்பிடும் சத்தம் கேட்டது. மாடுகள்பேய்ந்து விட்டுத் தலையை அசைத்து அசைத்து அசை போட்டுக் கொண்டே ஊருக்குள் நுழைந்தன. அவற்றின் கழுத்திலிருந்த மணிகள் எழுப்பிய ஓசை சுற்று வட்டாரமெல்லாம் நிரப்பியது.



மொத்தத்தில் அஸ்தமிக்கும் சூரியனிடமிருந்தே உயிர்த் தத்துவம் கிராமத்துக்குள் பிரவேசித்தது போல் தோன்றியது.

திடீர் என்று சூரிய வெப்பம் குறைந்தது. வானில் கருமேகக் கூட்டங்கள் கூடிச் சூரியனை மறைத்து வெப்பிலைக் குறைத்தது. கட கடா, குடு குடு என்ற இடிச் சத்தம் கேட்டது. குளிர்காற்று வீசியது. சோவென்று மழை பிடித்தது. அம்மழை உலகத்தையே கரைத்து விடும் போலிருந்தது!

தலையாரியைப் பின் தொடர்ந்தவர்கள் அவரவர்கள் வீட்டை நோக்கி நாலா புறமும் ஓடினார்கள். இடியும் மின்னலுடன் இரண்டு மணி நேரம் விடாமல் மழை பெய்தது.

அன்று சாயங்காலம் மாது செய்த அக்கிரமங்களை மறந்து நாட்டாண்மைக்காரன் சற்றும் ஒழுகாத பனை ஓலை வேய்ந்த தன் வீட்டுத் திண்ணையில் வந்து சௌகரியமாக உட்கார்ந்தான். எதிரில் பலா மரத்தடியில் களைத்துகொண்டு தலையாரி உட்கார்ந்திருப்பதைப் பார்த்தான்.

ஆனால் வீட்டுக்குள் சாமான்களையும் பண்டங்களையும் ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்த அவனுடைய மனைவி மலையாத்தாள் சாமான்கள் கன்னா பின்னாவென்று சிதறிக் கிடப்பதைக் கண்டு ரொம்பவும் வருத்தப்பட்டுக்கொண்டிருந்தாள். வெகு நாட்களாகக் காப்பாற்றி வந்த பானையெல்லாம் உடைந்து கிடப்பதைக் கண்ட மலையாத்தாளுக்குப் பொறுக்கக் கூடவில்லை. கையில் ஒன்றிரண்டு உடைந்த பானைகளை ஏந்திக் கொண்டு வேகமாக வெளியே வந்தாள். "இதைப் பாருங்க! இதைப் பாருங்க! இதைப் பார்த்தீங்களா!" என்று ஒன்றொன்றாகக் கீழே போட்டு உடைத்தாள். "இன்னைக்கு இராத்திரிக்குச் சாப்பிட என்ன இருக்கிறது?—ஒன்று மில்லை. நீங்களோ நிம்மதியாகத் திண்ணையில் வந்து உட்கார்ந்துட்டீங்க. அந்த அக்கிரமக்காரப் பயலை நாலு திட்டுத் திட்டி அனுப்பக் கூட வக்கில்லை" என்று தொடர்ந்து இரைந்தாள். அத்துடன் அவன் கோபத்தை அதிகப்படுத்த இன்னொரு உடைந்த பானையையும் அவன் முன்னால் போட்டு உடைத்தாள்.

பிச்சை முத்து "கோவிந்தா! அந்தப் பயலை இங்கே அழைத்து வா! அவன் முதுகெலும்பை முறித்துவிட்டு மறு காரியம் பார்க்கிறேன்" என்று இரைந்தான்.

தலையாரி கோவிந்தன் தண்ணீர் சொட்டச் சொட்ட எழுந்து நின்று நடுங்கிக் கொண்டே பையன் ஓடிப் போய்விட்டான் என்ற செய்தியைத் தெரிவித்தான்.

"நீயொரு முட்டாள்" என்று நாட்டாண்மைக்காரனும், அவன் மனைவியும் இருவரும் சேர்ந்து சொன்னார்கள்.

அந்தச் சமயம் கண்ணைப்பறிக்கும் மின்னல் ஒன்று வெட்டியது. அதைத் தொடர்ந்து பயங்கர இடிச்சத்தமும் கேட்டது. அந்தச் சத்தத்தில் அவர்கள் கூறிய மொழிகள் அவன் காதில் விழவில்லை!

ஒரு திருத்தம்

எப்ரல் 9உ இதழில் வெளியான 'காரைக்குடி கம்பர் விழா' என்ற கட்டுரையில் கடைசிப் பாராவுக்கு முந்திய பாராவில் 'உதாரணமாக ஷேக்ஸ்பியர் எழுதிய இரண்டாம் ரிச்சர்டு என்ற நாடகத்தில்.........' என்ற வருவதை மூன்றாம் ரிச்சர்டு என்று திருத்திப் படித்துக் கொள்ளவும்.

வட்ட மேஜை

★ யோக்கியதாம்சம் வேண்டாமா?

பார்லிமெண்டு, சட்டசபை அங்கத்தினர்களுக்குக் குறைந்த பட்ச யோக்கியதாம்சங்கள் நிர்ணயிக்க வேண்டுமென்ற புரொபஸர் கே. டி. ஷாவின் தீர்மானம் மிக முக்கியமானது. அதைச் சில அங்கத்தினர்கள் ஹிட்லரையும் வேறொரு நாட்டில் செருப்பு தைப்பவர் மந்திரியானதையும் உதாரணம் காட்டி அதுபோல் நம் நாட்டிலும் படிப்பு வாசனை இல்லாதவர்கள்தான் அபேட்சகர்களாக வரவேண்டுமென்று ஷாவின் தீர்மானத்தை ஆட்சேபித்து வாதிக்கின்றனர்!

தற்போதைய சட்டசபை விவாதங்களைக் கவனித்து வந்திருப்பவர்களுக்கு இத்தகைய விதண்டாவாதம் ஆச்சரியமளிக்காது. சட்டசபை என்ற பெயருக்கே சட்டஞானம் கூட இங்கு நுழையக் கூடாதென அங்கத்தினர்கள் கோருவார்களோ என ஐயுற வேண்டியிருக்கிறது. உலகிலேயே மிகப் பெரிய அரசியல் சட்டத்தைப் பல நுணுக்கமான பிரிவுகளுடன் நிறைவேற்றி வைத்திருக்கும் இந்தியக் குடியரசு பார்லிமெண்டிலும் சட்டசபைகளிலும், பரந்த சட்ட நிபுணத்துவம் உள்ள வக்கீல்கள் பெரும்பாலோர் இச் சபைகளில் அங்கம் வகிக்கவேண்டாமா? வைத்தியம், சுகாதாரத் துறையில் மிகவும் பின்னடைந்துள்ள நம் நாட்டில், சிறந்த நிபுணர்களாயுள்ள டாக்டர்கள் ஒரு ஜில்லாவுக்கு இருவர் வீதமாவது சட்டசபைகளில், இருக்க வேண்டாமா? விவசாயம், கைத்தொழில்கள், இயந்திரத் தொழில்கள், வியாபாரம், பொருளாதாரம், விஞ்ஞானம், சர்வதேச அறிவு, தொழிலாளர் நலன்கள், பெண்கள் நலன், கல்வி, கலைகள் முதலிய ஒவ்வொரு துறையிலும் ஒருவரே எல்லாவற்றிலும் தேர்ச்சி பெற்றிராவிடினும் அதனில் விசேஷ நிபுணத்துவம் பெற்றுள்ள சிலராவது பிரதேசவாரியாகச் சட்டசபைகளில் அங்கம் வகிக்க வேண்டாமா? ஐந்நூறு பேருள்ள சபையில் ஐம்பது பேருக்காவது, இருநூறு பேருள்ள சபையில் முப்பது பேருக்காவது சிறந்த விவாதத் திறமையும், பேச்சு வன்மையும் இருக்க வேண்டாமா? படிப்பு வாசனையற்ற நிரட்சர குட்சிகளாக இருந்தால், பிரதிநிதித்துவம் வகித்துத் தம் தொகுதியினருக்கு எப்படி நன்மை பயக்க முடியும்? படிப்பும் மேலே குறித்த துறைகளில் தனித் தனி நிபுணத்துவமும் மட்டிலும் இருந்து விட்டால் கூடப் போதாது. மக்களுக்குச் சேவை புரிய வேண்டுமென்ற உணர்ச்சியும் நற்குண நற்செய்கைகளும், பொய் — பித்தலாட்டம், லஞ்சப் பழக்கம் இவற்றின் மீது வெறுப்பு, சுயநலமின்மை, திடகாத்திரம், கூட்டங்களுக்குத் தவறாமல் ஆஜராகி விவாதங்கள், கேள்வி நேரம் முதலியவற்றில் கலந்து கொள்ளும் ஆற்றல் முதலியவையும் வேண்டும். தனக்குத் தெரியாத விஷயத்தைப் பற்றி விவாதம் நடந்தால் அதில் பேசாதிருக்கவும் தெரிந்திருக்க வேண்டும். தான் வாங்கும் அலவன்ஸ், சம்பளம் முதலிய கணக்குகளில் எந்த இடத்தில் கையெழுத்துப் போடவேண்டுமென்று கூடத் தெரிய வேண்டாமா? பட்ஜெட், மெமோரண்டம் முதலிய அறிக்கைகள் நமக்குத் தெரியாத மொழியில் இருந்தாலும் அவற்றைத் தலை கீழாகப் பிடித்துப் படிப்பதாகப் பாவனை செய்யாமலாவது இருக்க வேண்டாமா?

எனவே நாடு சுபிட்சமடைந்து மக்கள் இன்புற்று வாழவேண்டுமானால் பார்லிமெண்டு, சட்டசபைகளில் நல்ல படிப்பும் அரசியல் அறிவும் மேலே குறித்த திறமைகளும் அமைந்த குணவான்களைத்தான் அபேட்சகர்களாக நிறுத்த வேண்டும்.

பார்லிமெண்டரி போர்டார் அபேட்சகர்களைப்பற்றிய உண்மையான வாழ்க்கைக் குறிப்புகள், வாக்காளர்கள் நன்கு தெரிந்து கொள்ள வசதி செய்து கொடுக்க வேண்டும். ஒவ்வொரு தொகுதிக்கும் மூன்று நான்கு பெயர்களடங்கிய 'Panel' ஐ சிபாரிசு செய்யும்படியும் செய்வதோடு எந்தக் குறிப்பிட்ட அபேட்சகரைக் குறித்துத் தொகுதியினர் ஆட்சேபனை செய்தால் அதைக் கௌரவிக்கவும் வேண்டும்.

மந்திரி சபைக்குத் தேர்ந்தெடுக்கப்படுவோர் அந்தந்த மாகாணத்தில், அந்தந்த இலாக்கா நிர்வாக விஷயங்களில் மிக நிபுணத்துவம் வாய்ந்த பிரபலஸ்தர்களையே பொறுக்கி எடுக்க வேண்டும். அவர்கள் கட்சிக்கு வெளியே இருப்பவர்களாயிருந்தாலும் பாதகமில்லை. இவ்வாறு செய்யாவிட்டால் பாமர மக்களுக்கு நன்மை செய்வதென்பது வெறும் பேச்சளவில்தான் நிற்கும் என்பதோடு, அடுத்த தேர்தல்களில் நல்ல பெரும்பான்மை வெற்றி கிடைப்பதும் சாத்தியமில்லை.

மேற்கு மாம்பலம்
7—4—50 எஸ். ராமமூர்த்தி

○●○

மானிடக் கொடுமை

சில தினங்களுக்கு முன் நெல்லை ஜில்லாவிலுள்ள ஸ்ரீ வைகுண்டம் ஊரைப் பார்க்க நேரிட்டது. அங்கு ஒரு புதுமையைக் கண்ணுற்றேன். ஊரின் ஒரு புறத்தில் மண்ணாலாய மதிலொன்று இருக்கிறது.

அதைப்பற்றி விசாரித்ததில் பின் வரும் செய்தி கிடைத்தது. கோட்டைக்குள் பிள்ளைமார் என்ற ஒரு குலத்தினர் வசிக்கின்றனர். அங்குள்ள பெண்கள் வெளியில் வரவோ எட்டிப் பார்க்கவோ அனுமதிக்கப்பட மாட்டார்கள். வெளியில் நடந்த ஓர் உற்சவத்தின்போது அக்கோட்டையிலுள்ள பெண்மணி ஒருத்தி வாசலொன்றின் வழியாக எட்டிப் பார்த்த காரணத்திற்காக அவ்விடத்திலேயே வெட்டிக் கொல்லப் பட்டாளாம். அன்று முதல் வருடத்தில் ஒருநாளைத் தவிர இதர நாட்களில் அவ்வாசல் அடைபட்டிருக்கிறதாம். இம் மண் கோட்டையைப் பழுது பார்க்க அரசாங்கத்தார் மான்யம் வேறு வழங்குகின்றனராம்.

சுதந்திரம் பெற்று அடிமை விலங்கைத் தகர்த்தெறிந்த பாரத நாட்டின் பெண்கள் இன்னமும் அடிமைகளா? கோட்டையினுள் அடைபட்டு வெளி நாகரிகத்திலும் பழக்க வழக்கங்களிலும் சம்பந்தப்படாத இப்பெண்களின் வாழ்க்கை என்ன வாழ்க்கையோ!

ஹரிஜனங்களுக்குப் பூரண உரிமை கொடுத்து, மதுவை ஒழித்து, மற்றும் பற்பல நல்வாழ்வு நடத்தப் பாடுபட்ட நம் சர்க்கார் இத்தகைய மானிடக் கொடுமையை நீக்கப் பாடுபடுவார்களா?

சாயர்புரம்
7—4—50 சாரதா

○●○

பகல் கொள்ளை!

தேமதுரத் தமிழோசை திசை யெல்லாம் பரவத் தூண்டுதலாக இருந்த மதுரை மாநகரில் நடக்கும் அட்டூழியங்கள் தங்கள் பார்வைக்கு ஏனோ வரவில்லை? பத்திரிகைகளில் பல்லாயிரக் கணக்கான ரூபாய்கள் பரிசு தருவதாகக் காட்டி, மிகச் சுலபமான போட்டிகளை விளம்பரப் படுத்தி மக்களிடம் பணம் வசூல் செய்து பின் அவர்களை மொட்டை யடித்து ஏமாற்றிப் பகல் கொள்ளை அடிக்கும் (Bogus) கம்பெனிகள் மதுரையில் கணக்கில்லாமல் இருக்கின்றன. அதிலும் தமிழ் மக்கள், ஆண்டி முதல் அரச பதவிக்குத் தகுந்தவர்வரை தாங்கள் நெற்றி வியர்வை நிலத்தில் விழச் சம்பாதித்த பணத்தைக் கொடுத்து ஏமாறுகின்றனர். அந்தோ பரிதாபம்! உதாரணமாக 1 முதல் 5 வரை எழுதிக் கூட்டினால் 120 வரவேண்டும் என்ற போட்டிக்கு நான் கலந்து கொண்டு பிரவேசக் கட்டணம் ரூ. 15 அனுப்பினேன். ஒவ்வொன்றுக்கும் இரண்டு மாற்று விடைகள் கொடுக்கப்பட்டு 3 விதக் குறிப்புகள் கொண்ட போட்டிக்கும் நான் ரூ. 16 அனுப்பினேன். இதற்குப் பரிசு ஒவ்வொன்றுக்கும் ரூ. 45,000. இது தவிர போனஸ் ரூ. 15,000. நாளதுவரை மாதம் இரண்டாகியும் பதில் இல்லை. சாதாரண கணித முறைப்படி (Permutation) விடைகள் அனுப்பியும் பதில் கிடையாது. போட்ட கடிதங்களுக்கும் பதில் இல்லை.

இதிலிருந்து இக்கம்பெனிகள் மோசம் செய்யும் நோக்கத்துடனேயே நடத்தப்படுகின்றன என்று தெரிகிறது. அரசாங்கத்தாரும் மதுரைப் பிரமுகர்களும் இதை ஏனோ கவனியாமல் இருக்கிறார்கள். அல்லது கவனித்துக்கொண்டே பேசாமல் இருக்கின்றனரோ தெரியவில்லை. கம்பெனிகளின் பெயரைக் குறிக்க நான் விரும்ப வில்லை. வேண்டுமானால் பிறகு கொடுக்கிறேன். இந்த வயவஞ்சகர்களிடம் தமிழ் மக்கள் இன்னமும் ஏமாறித் தங்கள் மானத்தையும் மதிப்பையும் இழந்து விடுவார்களா?

வெங்கடாசல
புரம். 5-4-50 எம். எஸ். ஸ்ரீரங்கராஜன்

[சர்க்கார் நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம். அதுபோலவே சூதாட்டப் போட்டிகளின் மூலம் சுலபத்தில் பணம் சம்பாதித்துக் குவித்துவிடும் தீய ஆசையையும் மக்கள் விட்டொழிக்க வேண்டியது அவசியம்.—ஆசிரியர்]

○●○


சேமித்ததில்லை!

சென்ற 9-ந் தேதி 'கல்கி' இதழில் நண்பர் கே. ஆர். அவர்களின் "குடும்ப பட்ஜெட்" கட்டுரையைப் படித்தேன். அவருடைய கணக்கிலிருந்து அவர் மிகவும் நிதானமான மனிதர் என்று தெரிகிறது. ஆனாலும் அவர் மாதம் 25 ரூபாய் அதிகம் செலவு ஆகிறதே என்று குறைப்பட்டுக் கொள்



வாத்தியார்:—நோயற்ற வாழ்வே குறைவற்றசெல்வம் என்று ஔவையார் எதற்காகப் பாடியிருக்கிறார்? ராமு, சொல்லு பார்க்கலாம்.

ராமு:—டாக்டர் பீஸ் அதிகமாக இருப்பதனால்தான் ஸார், அப்படிப் பாடியிருக்கிறார்.



வாத்தியார்:—ஒரு எண்ணை 4 ஆல் பெருக்கி 8 ஐக் கூட்டினால் 40 வருகிறது. அது என்ன?

மாணவன்:—கடலெண்ணெயா நல்லெண்ணெயா, ஸார்!

கிறார். ஆனால் அவருடைய "பட்ஜெட்"டில் ரூபாய் இருபத்தொன்பது வரையில் சேமித்து வைக்கிறார் என்பதை மறந்து விட்டார்போலும். நானும் அவரைப் போலவே சம்பளம் வாங்கும் ஒரு மத்திய சர்க்கார் குமாஸ்தாதான். ஆனால் எனக்கு யாதொரு சேமிப்பும் இல்லாமலே அதிகப்படி செலவாகிறது. நானும் சென்ற ஒன்பது வருஷங்களாகத்தான் வேலை பார்த்து வருகிறேன். இதுவரை சேமிப்பு என்பதையே அறியாதவன். ஏன் என்றால் எனது வருமானம் முழுவதும் அன்றாடச் செலவுகளிலேயே கழிந்து விடுகிறது. சில சமயம் அத்தியாவசியமான உணவுப் பொருள்கள் கூட வாங்க முடிவதில்லை.

முதலில் எங்களைப் போன்ற சம்பளக்காரர்களுக்குப் பஞ்சப்படி யென்று ரூபாய் ஆறிலிருந்து படிப்படியாக உயர்த்தி இப்பொழுது ரூபாய் நாற்பத்தைந்து வரை கொடுக்கிறார்கள். ஆனால் 1942-ல் இருந்ததை விட இப்பொழுது நிலைமை மோசமாக இருக்கிறதே தவிர உயர்ந்து விடவில்லை. சாமான்கள் விலை உயர்வாக இருக்கிறதே என்று எண்ணிச் சர்க்கார் பஞ்சப்படியை உயர்த்தினார்களானால், உடனே சாமான்களின் விலைகளும் ஒட்டிக்கு இரட்டியாக உயர்ந்து விடுகிறது. சர்க்கார்தான், சிப்பந்திகளுக்குப் பஞ்சப்படியை உயர்த்தி விட்டார்களே என்று, பால்காரன் முதல் மளிகைக் கடைக்காரன் வரை அவரவர்களுடைய விற்பனைப் பொருள்களின் விலையை உயர்த்தி விடுகிறார்கள். ஆகையால் சர்க்காரின் தாராளத் தன்மையும் பச்சாத்தாபமும் பயனற்றுப்போய் விடுகின்றன.

நாங்கள் வேண்டுவதெல்லாம், நியாய விலையில் உணவுப் பொருள்களும், அத்தியாவசியமான வாழ்க்கைத் தேவைகளுமேயன்றி, உயர்ந்த பஞ்சப்படியல்ல.

[illegible]
10—4—50 — வி. முத்துகிருஷ்ணன்

○●○

தமிழ் படும்பாடு!

'தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்' என்று பாரதியார் பாடினார். ஆனால் நம் செந்தமிழ் நாடு அந்தத் தீர்க்கதரிசியின் முழக்கத்தைக் கேட்ட பிறகும் விழித்தெழவில்லை. தெருவழியே செல்லும்பொழுது கடைகளுக்கு முன்னால் தொங்கவிடப்பட்டிருக்கும் அறிவிப்புப் பலகைகளைப் பார்க்கும்பொழுது கண்களில் இரத்தந்தான் வருகிறது! இதோ பாருங்கள் சில உதாரணங்களை :—

1. குணத்திலும் மணத்திலும் சிறந்த பொடி கிடைக்கும்.
2. கிழுல் செண்டு; புதுல் (புதிது).
3. இசயம் புசபடும்; பித்தில சாமாண் றிப்பொர் சொயபடும்.
4. பிரான்ஜ் ஆபீஸ்.
5. சீனீ ரூ. 0—1—6; அய்ல் மோர்.

இன்னும் இவைபோன்ற எண்ணற்ற தமிழ்க் கொலைகள்! அரசாங்கம் தமிழை முதன் மொழியாக்கியதாலும், இசைத்தட்டுகளிலும், பொதுக் கூட்டங்களிலும், வானொலியிலும், "தமிழ் வாழ்க!" "தமிழ் நாடு தமிழருக்கே!" என்று கூச்சல் போடுவதாலும் என்ன பயன் ஏற்பட்டிருக்கிறது?

ஆகவே அரசாங்கம் தகுந்த பிரசாரகர்களைக் கொண்டும், சட்ட திட்டங்களை வகுத்தும் இவைபோன்ற வெட்கக் கேடான நிலைமையைச் சீர்திருத்தி உண்மையிலேயே மொழிவளர்ச்சி, மொழிப்பற்று இவைகளை உண்டாக்க வேண்டும்.

விஜயபுரம்
7—4—50 — க. குஞ்சப்பசாது

○●○

உத்தியோகஸ்தரின் நிலைமை

இந்த வாரம் 2—4—50 வெளி வந்த 'கல்கி'யில் பிரசுரிக்கப் பெற்ற "குடும்பப் புலம்பல்" "அப்பா வேலை" என்ற இரு கடிதங்களையும் படித்தவுடன், சர்க்கார் உத்தியோகஸ்தர்களின் மற்றும் சில உண்மைகளை நான் கண்டறிந்தபடி சொல்ல விரும்புகிறேன்.

சர்க்கார் ஆபீஸில் பெரிய உத்தியோகத்தில் உள்ளவர்களே இவ்வளவு கஷ்டப்படுகிறார்கள் என்று சொன்னால் மற்றும் குமாஸ்தாக்களாக உள்ளவர்கள் இன்னும் எவ்வளவு

கஷ்டப்படுவோர்கள் என்று சொல்ல வேண்டியதில்லை. என் குமாரனும் ஒரு சர்க்கார் உத்தியோகஸ்தன்தான். ஆனால் அவன் ஒரு சிறு குமாஸ்தா. தன் ஆபீஸிலுள்ள கஷ்டங்களையும் குறைகளையும் ஒரு நாளாவது அவன் முறையிடாமல் இருந்தது கிடையாது. பொழுது விடிந்து பொழுது போகிற வரையில், ஏன் இரா வேளைகளிலும் அவனுக்கு ஆபீஸில் வேலைகள்தாம். வீட்டு வேலைகளைக் கவனிக்க அவனுக்கு நேரமேது?

கையில் வரும் சம்பளமோ 2-ம் தேதிக்குப் பிறகு ஒரு தம்பிடி கூட மிஞ்சாது. அதன் பிறகு அடுத்தமாதம் முதல் தேதிக்கு எவ்வளவு தேதிகள் இருக்கின்றன என்று நாள் கணக்கு எண்ணிப் பார்த்துக் கொண்டே வரவேண்டியதுதான். இதை நினைத்துப் பார்த்தால் வாரா வாரம் சம்பளம் கொடுத்தால் கூடத் தேவலைபோல் இருக்கிறது. மாதக் கடைசியும் முதல் தேதியும் ஒன்றாகவே தானிருக்கிறது.

இவ்வளவு கஷ்டப்பட்டு வேலை செய்யும் சிறு குமாஸ்தா தனக்கு 'பிரமோஷன் கிடைக்காதா?' என்று ஏங்கித் தவித்துக் கொண்டிருப்பான். தனக்கு அடுத்தபடி புள்ளவன் எப்போது மாற்றலாகித் தொலைவான் அல்லது சீக்கிரம் செத்தாவது தொலையமாட்டானா என்று வேண்டிக் கொண்டுதான் தினமும் ஆபீசுக்குப் போய்க் கொண்டிருப்பான். ஆனால், அவன் எதிர் பார்ப்பதற்கு மாறாக, அவனுக்கே ஒரு மாற்றல் உத்தரவு திடீரென்று சேர்ந்துவிடும். முன்பின் அதைப் பற்றி நினைக்காத சமயத்தில் 'உத்தரவு கண்டவுடனேயே புது இடத்தில் போய் ஒப்புக் கொள்ள வேண்டும்' என்று உத்தரவு வரும். எந்த உலகம் எப்படிப் போனாலும் இதற்கு 'அப்பீலே' கிடையாது. இந்த ஒரு விஷயத்திலாவது உத்தியோகஸ்தனுக்குக் கொஞ்சம் அவகாசம் கொடுத்து அவனைக் கலந்து ஆலோசித்துக் கொண்டு செய்யமாட்டார்களா? திடீரென்று ஒரு புது இடத்திற்குப் போவதென்றால் எவ்வளவு பணக் கஷ்டம் உண்டாகும் என்பதைச் சர்க்கார் என்ற உயிரில்லாத ஒரு ஆத்மா எப்படி அறியப் போகிறதோ!

ஆனால் பெரிய உத்தியோகத்திலுள்ளவர்களும் இம்மாதிரி கஷ்டப்படுகிறார்கள் என்று அறியும்போது, சிறு உத்தியோகஸ்தர்கள் அவர்களைப் பார்த்துத் தங்களைத் தேற்றிக் கொள்ள வேண்டியதுதான். இதை விட்டால் வேறு கதிதான் என்ன?

புதுப்பாளையம்
3—4—50 கா. ஜெயலக்ஷ்மி

★ வீர வாலிபர்கள்!

ஸ்ரீமதி அலங்காரத்திடம் "சில வீர வாலிபர்கள் 'ஜாதகம்' வாங்கி அனுப்பும்படி கேட்டிருக்கிறார்கள்" என்ற வசனம் எனது மனதைத் தாக்கியது.

'ஜாதகம் வேண்டும் பல வீர வாலிபர்களை' நான் கண்டிருக்கிறேன். இலட்சியப் பாதையில் செல்லத் துணிந்த பின்னர் 'ஜாதகம்' வேண்டுபவர்களுக்கு 'வீர வாலிபர்கள்' என்ற அடைமொழியா? சீச்சீ.

எனது தந்தையிடம் வரதட்சிணை கொடுப்பதற்கு அதிகப் பணமில்லை. ஆயினும் ஒரு வீர வாலிபர் (தாங்கள் கூறுவது போல்) எனது தந்தையார் கொடுக்கும் சிறு தொகையுடன் என்னை மணம் முடிப்பதற்கு உறுதி கூறியிருந்தார். நானும் அவரது வீரத்தை மெச்சிக் கனவு கண்டு கொண்டிருந்தேன்.

உறுதி கூறும்போது அவர் எனது 'ஜாதகம்' பற்றி ஒன்றும் விசாரிக்கவில்லை. ஆனால் திடீரென ஒரு நாள் ஜாதகம் வேண்டும் எனக் கேட்டார். தந்தையாரும் கொடுத்தார். சில தினங்களில் "ஜாதகம் சிறிதும் பொருத்தமில்லை. ஆகவே கல்யாணம் செய்ய முடியாது" என அவர் அறிவித்தார். எனது தலையில் பேரிடி விழுந்ததுபோல் இருந்தது. ஆயினும் எனது விதியை நொந்து ஆறியிருந்தேன்.

அவர் ஓர் பெருந்தொகையான வரதட்சிணையுடன் ஓர் பெரிய இடத்தில் வெகு சீக்கிரத்தில் கல்யாணம் செய்து கொண்டுவிட்டார். பல நாட்களுக்குப் பிறகுதான் அந்த 'வீர வாலிபர்' ஜாதகத்தைக் கொண்டு சென்று பொருத்தமே பார்க்கவில்லை என்பதை அறிந்தோம்.


இவர் ஒருவர் மட்டுமல்ல; இப்படிப்பட்ட இன்னும் பல வீர வாலிபர்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன்.

'ஜாதகம் என்பது பெண்ணிலே விருப்பமில்லாதபோது அதன் தலையில் பாரம் போட்டுத் தட்டிக் கழிக்கும் ஓர் ஓலைக்கட்டு' என ஓர் பத்திரிகையில் படித்ததாக ஞாபகம். அது முற்றிலும் 'சரி' என்பதே எனது அபிப்பிராயம்.

ஆகவே 'ஜாதகம்' வேண்டி எழுதியவர்கள் வீர வாலிபர்'கள் அல்ல; 'கோழை வாலிபர்'கள் என்றே நான் கூறுவேன்.


யாழ்ப்பாணம்
3—4—50 திலகவதி

★ வட்டமேஜைப் பரிசுத் தொகை ரூ. 25-ஐ "யோக்கியதாம்சம் வேண்டாமா?" என்ற கடிதம் எழுதிய மேற்கு மாம்பலம் ஸ்ரீ என். ராமமூர்த்திக்கும், "வீர வாலிபர்கள்" என்ற கடிதம் எழுதிய யாழ்ப்பாணம் ஸ்ரீமதி திலகவதிக்கும் ரூ. 12-8-0 வீதம் பிரித்து வழங்கப்பட்டது.



Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press 116-119, Sladens Gardens, Poonamallee High Road, Kilpauk, Madras

கல்கி



KALKI ஏப்ரல் 23, 1950 **4** அணா

REGD. No. M 4392



கமலா நாகராஜன்

சசிதேவி

நாகராஜன் குனிந்து எழுதிக் கொண்டிருந்தான். அவனுடைய முகத்தில் கோபம் பொங்கிக் கொண்டிருந்தது நன்றாகத் தெரிந்தது. அந்தக் கோபத்தில் தன் கையில் அகப்பட்டக் காகிதங்களையெல்லாம் ஏதேதோ உருத் தெரியாதவாறு கிறுக்கிக் கொண்டிருந்தான். மிகவும் சிரமப்பட்டுக் கோபத்தை அடக்கிக் கொள்ளத்தான் இவ்வளவு பாடுபட்டுக் கொண்டிருந்தான்.

"ராஜுவைச் சற்று டாக்டரிடம் அழைத்துக்கொண்டு போகப்படாதோ?" என்று கேட்டுக் கொண்டே உள்ளே நுழைந்தாள் கமலா. எங்கோ வெளியில் போகத் தயாராக அலங்கரித்துக் கொண்டு இருந்தாள் அவள்.

"ஏன்? அவனுக்கு என்ன வந்துவிட்டதாம்?" என்று சீறினான் நாகராஜன்.

"நேற்று முதல் ஜுரம்."

"அப்படியானால் நேற்றே கவனிப்பதற்கென்ன? இன்றுதான் நாள் பார்த்தாயோ?" என்றான்.

"நேற்றுக் காலை சுமாராக இருந்தது! சாயந்திரம்தான் நன்றாக ஜுரம் வந்துவிட்டது! நான்தான் நேற்று மத்தியானம் வெளியில் போனவள் இரவுதானே வந்தேன்!"

அவ்வளவுதான்! மூண்டித் தவித்துக் கொண்டிருந்த கோபம் வெளிப்பட்டு விட்டது நாகராஜனுக்கு!

"அதற்குத்தான் உன்னுடைய பிரவர்த்தகங்களையெல்லாம் கொஞ்சம் குறைத்துக் கொள்ளு என்கிறேன்! வீட்டில் நோயாக இருக்கும் குழந்தையைக்கூடக் கவனிக்க முடியாதபடி எங்கு அவ்வளவு முக்கியமான அலுவலோ அம்மாவுக்கு?"

"மாலை நாலு மணிக்கு சேவா ஸங்கத்தில் 'தாய்மை' என்பதைப் பற்றிப் பேசுவதாக முன்னுடியே ஒப்புக் கொண்டிருந்தேன்! அதை எப்படி மாற்ற முடியும்? அது முடிந்தவுடன் அனாதாலயத்துக்காக நன்கொடை கொடுப்பதாகச் சொல்லியிருந்த சிலரிடம் வசூலுக்குப் போகவேண்டியிருந்தது."

"ஓஹோ? வீதி திரட்டவோ?" என்று கேட்ட நாகராஜன் முகத்தில் இன்னமும் கோபம் தாண்டவமாடுவதைக் கவனிக்காதவளாய் கமலா மேலும் "விமலா விசுவநாதனும், சரஸ்வதி......" என்று சொல்லிக்கொண்டு போனாள். "போதும் நிறுத்து உன் அதிகப் பிரசங்கத்தை! ஸரஸ்வதி பிரும்மதேவனாக வேண்டுமானாலும் இருக்கட்டும்! லக்ஷ்மி நாராயணனாக வேண்டுமானாலும் இருக்கட்டும்! அவர்களுடன் கூடிக்கொண்டு நீ போடும் கொம்மாளம் சகிக்க முடியவில்லை! நீங்கள் வீதி திரட்டி, உருட்டி, அனாதாலயத்துக்குக் கொடுக்கும் முன்பாக எல்லோருடைய வீடுகளும் அனாதாலயங்களாக மாறி விடும் போலிருக்கிறதே! நேற்று முதல் குழந்தை உடம்பு சரியில்லாமல் தவிக்கிறான்! அதைக் கூடக் கவனிக்காமல் 'தாய்மை' என்பதைப் பற்றிப் பிரசங்கம் செய்யப் போனாளாமே! பிரசங்கம்! நல்ல வேடிக்கை!......"

இப்படியே மேலே மேலே கருதி ஏறிக் கொண்டே போயிற்று நாகராஜனுக்கு.

"உங்களுக்கு ஏன் இவ்வளவு கோபம் வருகிறது?"

கமலாவின் இந்தக் கேள்வி எரியும் தீயில் எண்ணெயை விட்டதுபோல் ஆகி விட்டது. "ஏன் கோபம் வருகிறதா? சரியான கேள்வி, வரக்கூடாதுதான்! உன்னைச் சொல்லி என்ன பலன்? நான் கெடுத்த கேடுதானே! அவமானம்!"

"கமலா நாகராஜன் இருக்கிறார்களா?" என்று வாசலில் யாரோ கேட்பது காதில் விழவே பேச்சை நிறுத்தினான் நாகராஜன். அடுத்த விநாடி "என்ன! மிஸஸ் ராஜன்! ரெடிதானே?" என்று கேட்டுக் கொண்டே இரண்டு பெண்மணிகள் உள்ளே நுழைந்தனர்.

அவர்களிடம் "இதோ வந்து விட்டேன்" என்று கூறிவிட்டுத் தன் கணவனைப் பார்த்து, "நான் போய் வருகிறேன். ராஜுவைக் கவனித்துக் கொள்ளுங்கள்! சீக்கிரமே வந்துவிடுகிறேன்!" என்று சொல்லிவிட்டுத் தன் தோழிகளுடன் செல்லும் கமலா—நாகராஜனைப் பார்த்தபடியே பிரமித்து நின்றான் ஸ்ரீமான் நாகராஜன்.

* * *

கமலாவுக்கும் நாகராஜனுக்கும் விவாகமாகிப் பதினைந்து வருஷங்களாகி விட்டன.

சென்னைப் பட்டணத்தின் நாகரிகத்தைப் பார்த்து அறிவேயே மோகமும் கொண்டிருந்த நாகராஜன் கமலாவைக் கலியாணம் செய்து கொள்ள சம்மதிக்

கவே இல்லை. சுமாராகப் படித்திருந்த கமலா நகரத்தின் நாகரிகம் அறிந்தவளல்ல. ஏதோ பிராப்தம் இருவருக்கும் பிணைத்து விட்டது.

முதலில் மூன்று நான்கு வருஷங்கள் கமலாவைச் சீர்திருத்துவதிலேயே மூழ்கியிருந்தான் நாகராஜன். கிணற்றுத் தவளையாக இருந்த கமலாவைத் திருப்புவது அவ்வளவு லகுவாக இல்லை. "வீட்டு விஷயங்கள் தவிர மற்றவைகளில் கலந்து கொள்ளக் கூடாது! பெண்கள் வீட்டு வேலைகளைச் செய்து கொண்டு பொறுப்பாகக் குடித்தனம் செய்வதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்?" என்னும் ரீதியிலேயே பழகியவள் கமலா.

கொஞ்சம் கொஞ்சமாக அவளைக் கரைத்து உருவேற்றி நாலு பேர்களிடம் பழக்கம் செய்து வைத்து, மாதர் சங்கத்திலும் ஒரு அங்கத்தினராக சேர்த்த அன்று தான் தன்னுடைய வாழ்க்கையிலேயே மகத்தானதொரு வெற்றியைக் கண்டு விட்டவன் போல் புளகாங்கித மடைந்தான் நாகராஜன். தினமும் மாதர் சங்கத்திற்குப் போய்த்தான் தீர வேண்டும். தலையெழுத்தே என்று கணவனுக்காக ஏற்றுக் கொண்ட இந்தப் புதிய அநுபவம் அவளுக்குப் பாந்தமாகவே இல்லை.

சில நாட்களில் அவளுக்குக் கூச்சம் தெளிந்து, எல்லோருடனும் சகஜமாகப் பழக ஆரம்பித்தாள். இயற்கையாகவே நல்ல கூர்மையான அறிவுடையவள் கமலா. சங்கத்தில் நடக்கும் விஷயங்களில் பங்கெடுத்துக் கொள்ளவும் நேர்ந்தது அவளுக்கு. பிறகு கேட்க வேண்டுமா? அவளுக்கு வீட்டில் வாத்தியார் வைத்துக் கல்வி கற்பித்தான் நாகராஜன். ஹிந்தி, சங்கீதம் முதலியவைகளிலும் பயிற்சி பெறலானாள். இவைகள் தெரியாதவர்கள் சமூகத்தில் எப்படி முன்னணியில் நிற்க முடியும்? மாதர் சங்கத்தில் அந்த வருஷம் நடந்த தேர்தலில் கமிட்டி அங்கத்தினர்களில் ஒருவராகக் கமலா தேர்ந்தெடுக்கப்பட்டாள். இப்படி படிப்படியாகக் கமலா, கமலா—நாகராஜனாக மாறி விட்டாள்.

நடுவில் ராஜு பிறந்தான். அதன் காரணமாகச் சில மாதங்கள் வெளியில் செல்ல முடியவில்லை. அதுவும் கஷ்டமாக இருந்தது கமலாவுக்கு. அவளைத் தேடிக்கொண்டு வரும் தோழிகள் கணக்கற்று விட்டார்கள். ஆகையால் வீட்டிலேயே எல்லோரும் கூட ஆரம்பித்தனர்.

இந்த வைபவங்களையெல்லாம் கண்ட நாகராஜன் பூரித்துப் போய் விட்டான். தன் மனைவி அவர்களுடன் உலக, ராஜீய, பொருளாதார, சமூக விஷயங்களையெல்லாம் அலசி அலசிப் பேசும் பொழுது



கமலாவின் கணவன் பிரமித்துவிடுவான். சில வருஷங்கள் ஆயிற்று. இப்பொழுது கமலா... இல்லை... கமலா நாகராஜன் என்ற பெயர் பிரபலமடைந்து விட்டது. அவளை 'செக்ரடரியாக' (காரியதரிசியாக) அடைந்த மாதர் சங்கம் ரொம்பவும் சுறுசுறுப்பாக ஓட ஆரம்பித்து விட்டது. இன்னும் அநேகப் பொது ஸ்தலங்களிலெல்லாம் பிரசங்கம் செய்ய அழைப்புகள் வரத் தொடங்கி விட்டன. ஓய்ச்சல் ஒழிவு இல்லாத வேலை அவளுக்கு. காலை 8 மணிக்கு ஒரு இடத்தில் கொடியேற்றச் சொல்லி இருப்பார்கள். மாலை 4 மணிக்கு மஹிளா சமாஜத்தில் "சுதந்திர இந்தியாவும் மாதர் நிலைமையும்" என்பதைப் பற்றிச் சொற்பொழிவு ஆற்றப் போக வேண்டியிருக்கும். 6 மணிக்கு ஒரு பெண்கள் கல்லூரியின் வருஷாந்திரக் கொண்டாட்டத்தில் அக்கிராசனம் வகித்துப் பரிசுகள் வழங்க வேண்டியிருக்கும்; இரவு 7-45 மணிக்கு அகில இந்திய ரேடியோவில் பாட வேண்டியிருக்கும்! (எல்லோருடைய வீட்டிலும் ரேடியோவைத் திறந்து வைத்துக் கொண்டு காத்திருப்பார்கள்! கமலா — நாகராஜனின் விசிறிகள்!) இரவு வீட்டுக்கு வந்த பிறகும் அநேக ஜோலிகள் காத்திருக்கும்.

வீட்டையும், கணவனையும், பிள்ளையையும் கவனிக்கப் பொழுதே இல்லை அவளுக்கு. என்னதான் செய்வாள்? பாவம்! நாகராஜனுக்கும் வேலை சரியாகவே இருந்தது. இவ்வளவு இடங்களுக்கும் அவளைத் தனியாகப் போகச்சொல்ல முடியுமா? அவன் தானே அழைத்துக்கொண்டு போய் விட்டு, திரும்ப அழைத்துக் கொண்டு வர வேண்டும்! தான் செய்யும் இந்த வேலைகளில் பெருமை தாங்கவில்லை அவனுக்கு.

அவளைக் கட்டுரைகள் கேட்டுப் பிரபல பத்திரிகைகளெல்லாம் வேண்டிக் கொண்டன. சமூக ஊழல்களைக் கண்டித்து அவளும் எத்தனையோ கட்டுரைகளும் கதைகளும் எழுதியிருந்தாள். எந்தத் தலையங்கம் கொடுக்கப் பட்டாலும் எழுதித் தள்ளி விடுவாள். "அடுத்த இதழிலிருந்து கமலா — நாகராஜனின் புதிய தொடர் கதை வெளியாகும்" என்று பிரசுரம் செய்த ஒரு பத்திரிகையின் பிரதிகள் மறுவாரம் முதல் பதினாயிரம் பிரதிகள் அதிகமாக அச்சிடப்பட்டன என்று வதந்தி.

நாகரிகத்திற்கும், அலங்கரித்துக் கொள்வதற்கும் கமலாதான் ஊருக்கே 'மாடல்.' அவள் தலையை வாரிக் கொள்வதும், உடைகள் அணிவதும், சமூகத்தில் ஒரு கிளர்ச்சியை உண்டாக்கி விட்டன. சிறியோர், பெரியோர் எல்லோருமே அவளை இரண்டு முறையாவது பார்க்காமல் நகர மாட்டார்கள். அவளால் செய்து கொள்ளப்படாத செய்கைகள் அநாகரிகமாகக் கருதப்பட்டன நவநாகரிக ஸ்திரீகளின் வட்டாரத்தில்.

• • •

இதே ரீதியில் சென்று கொண்டிருந்த வாழ்க்கையைக் கமலா சந்தோஷமாகவே நடத்தி வந்தாள். அதற்கு மாறாக நாகராஜனுக்கு அலுப்புத் தட்ட ஆரம்பித்தது. கமலாவுடன் நடத்தும் இயந்திர வாழ்க்கையில் வெறுப்பு ஏற்படவே, அவளுடைய பிரதாபமும் வெளிப் பகட்டும் அவனுக்குத் திகட்டத் தொடங்கிவிட்டன. கமலாவுக்குப் பதில் அவன் வீட்டைக் கவனித்துக் குடித்தனம் செய்ய வேண்டிய அளவுக்கு வந்து விட்டது! அவன் தன்னைத்தானே சபித்துக் கொள்ளவும் நேர்ந்தது. தான் ஏதோ "அம்மச்சாவாக" இருப்பதாக எண்ணத் தொடங்கி விட்டான். கமலா—நாகராஜனுக்கு இருக்கிற பிரக்யாதியில் கால் பங்குகூடத் தனக்கு இருப்பதாக அவனுக்குத் தோன்றவில்லை. "கமலா — நாகராஜன், கமலா — நாகராஜன்" என்னும் பெயரே அவனுக்கு வெறுப்பாக இருந்தது. 'கமலா இல்லாத நாகராஜனின் பெயர் ஒன்றுக்கும் பிரயோஜனமில்லை... ஏன், ஒருவருக்கும் தெரியக்கூடத் தெரிந்திருக்காதோ!' என்னும் எண்ணம் அவனை அவமானம் அடையச் செய்தது.





அவனை இந்த வழிகளில் திருப்பிய தன் மடைமையை எண்ணி வருந்தினான். இதன் பலனைக் கமலாவின் மேல் தொட்டதற்கெல்லாம் கோபம் வர ஆரம்பித்தது. இத்தனை நாள் அவனுக்குச் சகஜமாகவும் பெருமையாகவும் இருந்து வந்த விஷயங்களெல்லாம் தப்பிதமாக விச்வரூபமெடுத்து அவனுக்குக் காட்சி யளித்தன; அவனால் இப்போது சகிக்கவே முடியவில்லை. ஆனாலும் பொறுமையாகத்தான் இருந்தாக வேண்டியிருந்தது.

ஒருநாள் நடந்த விஷயம் அவன் பொறுமையையும் சோதித்து விட்டது. அன்று ஒரு கல்யாண அழைப்பிதழ் வந்தது. பக்கத்து ஊரில் நடக்கும் ஒரு கல்யாணம். இவனுக்கு அதிகமாகப் பரிச்சய மில்லாதவர்கள்தான். அந்தக் கடிதத்தின்மேல் விலாசம், அவனை ஒரு உலுக்கு உலுக்கி ரௌத்ராகாரமாகச் செய்து விட்டது. அதன்மேல் விலாசம்:

ஸ்ரீமான் கே. நாகராஜன்
c/o மிஸஸ் கமலா-நாகராஜன்
"கமலா விலாஸ்" தியாகராஜநகர்

என்று எழுதி எந்த விஷமக்கார பயலோ, தபாலில் போட்டு விட்டான். அதைப் பார்த்த நாகராஜன் "ஏ கமலா! ஏ கமலா!" என்று இரைந்து கூப்பிட்டான்.

அடுத்த அறையில் தன் தோழிகளுடன் பேசிக்கொண்டிருந்த கமலா, தன் கணவன் இரைவதைக் கேட்டு விட்டாள். சில தினங்களாகவே அவன் ஒரு மாதிரியாக இருப்பதால் அவர்களைப் போகச் சொல்லிவிட்டு, "ஏன், கூப்பிட்டீர்கள்?" என்று கேட்டுக்கொண்டே வந்தாள்.

"ஏனா? இதோ பார் அக்கிரமத்தை! இதன் காரணம் என்ன தெரியுமா?" என்று கர்ஜித்துக் கொண்டு பத்திரிகையை அவள் முன்பு விட்டெறிந்தான் நாகராஜன்.

அவனுடைய கோபத்தின் எல்லையை உணரவில்லை அவள். அந்த மேல் விலாசத்தைப் படித்து விட்டுச் சிரித்த படியே கமலா "அட பாவமே! இதற்கு ஏன் நீங்கள் பிரமாதப்படுத்துகிறீர்கள்? யாரோ செய்த விஷமம்!" என்று சற்றும் அதிர்ச்சி யின்றிப் பதில் அளித்தாள்.

அவள் சிரித்ததும் இதை அலட்சியமாகக் கருதியதும் நாகராஜனின் கோபத்தை அதிகப்படுத்தின.

"உன்னால் உண்டாகும் வெட்கக்கேடு இது. உன் பெயருக்கு நான் என்ன ஒரு வாலா?" என்று முணு முணுத்தான்.

"நானா அவர்களை இப்படி எழுதச் சொன்னேன்?" என்றாள் கமலா.

"நீ சொல்லவும் வேண்டுமா. என்ன? உன்னுடைய அகண்ட பிராபல்யத்தில் என் பெயர் இந்த நிலைமைக்கு வந்திருக்கிறது. இது தெளிவாக வில்லையா?"

"அதற்கு நான் என்ன செய்யட்டும்? நன்றாக இருக்கிறதே! என் பெயர் பிரபலமானால் அது என் குற்றமா?"

"உன் குற்றமில்லை.........என் குற்றம் தான் தாயே! உன்னை இவ்வளவு துளிர்க்கவிட்டது நான்தானே? நீ தலையிட்டுக்கொள்ளும் வெளி விவகாரங்களின் பிரதிபலனை நான் அனுபவிக்கிறேன்! உனக்கென்ன?"

அழுகையும் ஆத்திரமும் முட்டிற்று கமலாவுக்கு. இனி ஒரு விஷயத்திலும் தலையிடுவதில்லை, எதற்கும் போவதில்லை என்று மனதில் தீர்மானம் செய்து கொண்டான். அப்படியே இரண்டு நாள் நடத்தியும் பார்த்தான். அவன் தன்னைச் சிரமப்பட்டு அடக்கிக்கொண்டு வீட்டில் இருந்தாலும் அவளுடைய தோழிகள் அவளை லகுவில் விட்டு விடுவார்களா? இவளுடைய நெடுநாள் பழக்கம்தான் விடுமா? எதுவும் அளவுக்கு மீறலாகாதல்லவா? இரண்டு நாட்களில் வைராக்கியம் பலஹீனமடைந்து விட்டது. மறுபடியும் வெளியில் செல்ல ஆரம்பித்து விட்டான். இவளை விடவேண்டுமென்று பார்த்தாலும்கூடப் பழக்க தோஷமானது, பரமபக்தன் ஒருவன் தெய்வத்தைப் பார்த்து முறையிடுவதுபோல "நீ என்னைக் கைவிடினும், நான் உன் காலை விடேன்" என்று அவளை விடாப்பிடியாகப் பற்றிக்கொண்டது.

ஒருநாள் கத்தினான்! மறுநாள் முணுமுணுத்தான்! மறுநாள் மனதிற்குள் சபிப்பதைத் தவிர வேறு ஒன்றும் செய்ய முடியவில்லை நாகராஜனால். அவ்வளவு தூரம் முற்றிவிட்டது. எப்பொழுதும் சண்டை, ரஸாபாஸம் என்று ஆகிவிட்டது அவன் வீடு.

* * *

அன்று கமலா வெளியில் சென்ற பிறகு யோசிக்கலானான் நாகராஜன். களங்கமற்ற அவன் மனம் கல்லாகிக் கொண்டு வந்தது. கல்யாணம் செய்து கொண்டு சகல போகங்களையும் அனுபவிக்க வேண்டுமென்று அவன் கட்டிய கோட்டை இடிந்து தரைமட்டமாயிற்று. தன்னால் நிமிர்த்த முடியாத அளவுக்கு விஷயம் விரிவடைந்து விட்டது என்பதை அறிந்தான். ஆயினும் அவன் கோபம் அடியோடு தணிந்து விடவில்லை.


ராஜுவின் முனகல் சப்தம் அவனை உணர்ச்சி பெறச் செய்தது. அவனை டாக்டரிடம் அழைத்துப் போக வேண்டுமென்று நினைவு வந்தது. வெளியில் சென்றாவது தனது மன வேதனையை மறக்க நினைத்து ராஜுவை அழைத்துக் கொண்டு டாக்டர் ரகுநாதனின் ஆஸ்பத்திரிக்குக் கிளம்பினான்.

டாக்டர் ரகுநாதன் வீட்டை அடைந்த நாகராஜன் வெளி அறையில் உட்கார்ந்து கொண்டு ஆளிடம் தான் வந்திருப்பதைச் சொல்லி அனுப்பினான். அந்த வீட்டின் முன் பக்கம் 'டிஸ்பென்ஸரியும்' பின் பக்கம் டாக்டர் ரகுவும் குடியிருந்தார்.

வேலைக்காரனிடம் அவர் "கன்ஸல்டிங் டைம் அப்பவே ஆகிவிட்டது; முன்னாடி வருவதற்கென்ன? சற்று இருக்கட்டும், வருகிறேன்" என்று சொன்னது நாகராஜனின் காதில் விழுந்தது. என்ன செய்வது! இரண்டு நிமிஷங்கள் ஆகியிருக்கும்: பின் பக்கத்துக் கதவு திறக்கப்பட்டது. ஒரு பெண் குழந்தை எட்டிப் பார்த்துவிட்டு உள்ளே ஓடி "அப்பா! அப்பா! கமலா—நாகராஜன் ஆத்துக்காரர்! யாரோன்னு நெனைச்சுண்டு காக்கவச்கட்டியே!" என்று சொன்னது நாகராஜனுக்குக் கேட்டது.

"அடாடா! நான் யாரோன்னு இருந்து விட்டேன். ஐயாம் ஸாரி!" என்று சொல்லிக்கொண்டே டாக்டர் ரகுநாதன் வெளியில் வந்து பார்த்தார். அப்போது நாகராஜன் அங்கு இல்லை. பேயால் விரட்டப்பட்டவன் போல் தெருக்கோடியில் ராஜுவைத் தூக்கிக்கொண்டு நாகராஜன் வேகமாகப் போவதை டாக்டரின் ஆள் பார்த்து வந்து சொன்னான். டாக்டர் ரகுநாதனுக்கு விஷயமே விளங்கவில்லை! —எப்படி விளங்கும்?

அவ்வளவுதான்!



மனைவி (கணவனிடம்):—தோஷத்துக்கும், சந்தோஷத்துக்கும் என்ன வித்தியாசம்!

புருஷன்:- நீயாகக் கிணற்றில் விழுந்தால் அது எனக்குச் சந்தோஷம். நான் உன்னைக் கிணற்றில் தள்ளினால் அது எனக்குத் தோஷம்.